*10*

# தலையைப் பற்றிக் கொண்டிருத்தல்

## (2:16–23)

*நியாயப்பிரமாணத்தின் சட்டதிட்டங்களும் ஒழிக்கப்பட்டு சகல பொல்லாத சக்திகளும் தோற்கடிக்கப்பட்ட நிலையில் (2:8ஈ மற்றும் 10ஆ வில் சொல்லப்பட்ட விவாதத்தைக் காண்க) பவுல் நியாயமான முடிவுரைக்குத் தொடர்கிறார். அவர் கொலோசெயர்களிடம் இந்த திட்டங்களை அவர்கள் பின்பற்ற கடமைப்பட்டவர்களல்லவென்றும் அல்லது மனிதனால் உண்டாக்கப்பட்ட மதப் பாரம்பரியங்களைக் கைக்கொள்ளும்படி மற்றவர்களின் வற்புறுத்தலுக்கு கீழ்ப்படிய வேண்டாம் என்றும் சொன்னார்.*

### நியாயப்பிரமாணத்துக்குப் பதிலாக கிறிஸ்துவைப் பின்பற்றுதல் (2:16, 17)

***16ஆகையால் போஜனத்தையும் பானத்தையும் குறித்தாவது, பண்டிகை நாளையும் மாதப்பிறப்பையும் ஓய்வுநாட்களையுங் குறித்தாவது, ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக. 17அவைகள் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது; அவைகளின் பொருள் கிறிஸ்துவைப்பற்றினது.***

***"ஆகையால் போஜனத்தையும் பானத்தையும் குறித்தாவது,***
***பண்டிகை நாளையும் மாதப்பிறப்பையுங் குறித்தாவது,***
***ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக" (2:16)***

துவக்க வார்த்தையாகிய **ஆகையால்** *(oun)* அதற்கு முந்தைய வசனத்தின் முடிவுரைக்கு அடையாளமாகக் காணுகிறது. கொலோசெயர்கள் இயேசுவை நோக்கிப் பார்க்கவும் தேவனை எப்படிப் பிரியப்படுத்த வேண்டுமென்றும் கொலோசெயருக்குச் சொல்லி, மற்றவர்களுடைய நியாயத்தீர்ப்பு எப்படியிருந்தாலும் இயேசுவின் போதனையை இவர்கள் எப்படி கைக்கொள்ள வேண்டுமென்றும் பவுல் சொன்னார்.

ஒருவேளை கொலோசெயில் சிலர், குறிப்பாக யூதமத பின்னணியைக் கொண்டிருந்தவர்கள், கிறிஸ்தவர்கள் நியாயப்பிரமாணத்தை விட்டு மிக அதிகமாகவே விலகிப் போகிறார்கள் என்றும் வேறு பல சமுதாய விதிமுறைகளை மீறுகிறார்களென்றும் நினைத்தார்கள். கொலோசெயர்கள் இனியும் இவைகளுக்குக் கட்டுப்பட்டவர்களல்ல, ஏனெனில் அவர்கள் இப்பொழுது இயேசுவுக்கு மட்டுமே கீழ்ப்படிய வேண்டியவர்கள். மனுஷர்களால் உண்டாக்கப்பட்ட சுய சட்டங்களைப் பின்பற்றாமைக்காக கண்டனம்

*பண்ணுகிற சமுதாயத்துக்குக் கீழ்ப்படிவதைவிட இயேசுவுக்குத் தங்களை கீழ்ப்படுத்துவது அவசியம் என்று காட்டுகிறார்.*

*இதற்கு முந்தைய வாக்கியங்களெல்லாம் வசனம் 16 வரை கொலோசெயர்கள் ஏன் இயேசுவை மட்டும் பின்பற்ற வேண்டுமென்பதற்கு பலமான காரணங்களை அவைகள் கொண்டிருக்கின்றன:*

- *அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது (2:3).*
- *தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் அவருக்குள் வாசமாயிருக்கிறது (2:9).*
- *கொலோசெயர் அவருக்குள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறார்கள் (2:10ஆ).*
- *சகலதுரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவர் தலைவராயிருக்கிறார் (2:10அ).*
- *அவர்கள் ஞானஸ்நானத்தின்மூலம் அவரைப்பற்றும் விருத்த சேதனத்தைப் பெற்றார்கள் (2:11, 12).*
- *ஞானஸ்நானத்தின் மூலம் அவர்கள் உயிர்ப்பிக்கப்பட்டு அவர்களுடைய அக்கிரமங்களெல்லாம் மன்னிக்கப்பட்டது (2:13).*
- *அவர் நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளை குலைத்துப்போட்டு அவைகளை சிலுவையிலே அறைந்தார் (2:14).*
- *துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு வெளியரங்கமான கோலமாக்கினார் (2:15).*

*உடனடி வசனப்பகுதி, விசாலமான வசனப்பகுதிக்குப் பதிலாக, பவுலின் முடிவுரைக்கு அடிப்படையாக கொலோசெயர்கள் நியாயப்பிரமாணத்திற்கோ அல்லது தீமையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கிற அதிகாரத்தின் ஆதிக்கத்துக்கோ கீழ்ப்படிந்து விடக்கூடாது என்று குறிப்பிட்டார். 2:14ல் நியாயப்பிரமாணம் எடுபட்டு போயிற்று என்றும் 2:15ல் எதிரிடையாக இருந்த சகல சக்திகளும் மேற்கொள்ளப்பட்டன என்றும் அவர் குறிப்பிட்டார். இயேசு அவர்களின் அதிகாரத்தை ஏறத்தாழ ஒழித்துப் போட்டுவிட்ட நிலையில் தமது செயலின் மூலம் அவர்களுடைய அதிகாரத்தின் மேல் வெற்றி சிறந்தார், கொலோசெயர்கள் இயேசுவால் கொண்டு வரப்பட்ட ஜெயத்தின் சுதந்திரத்தை அநுபவிக்க வேண்டும்.*

*முன் நடந்த விவாதங்களை முன்வைத்து, கொலோசெயர்கள் மனித அதிகாரத்தின் மூலம் கொடுக்கப்பட்ட சட்டங்களினால் ஏன் கட்டுப்படக் கூடாது என்பதற்கு மேலும் காரணங்களை பவுல் கொடுத்தார் - அது நியாயப்பிரமாணமாயினும் அல்லது மனித விதிகளானாலும் சரி.*

*கொலோசெயர்கள் குறிப்பிட்ட போஜனம் மற்றும் பானத்துக்கு கட்டுப்பட்டிருக்க வேண்டுவதில்லை. இயேசு தாமே போஜனங்கள் அனைத்தும் பரிசுத்தமானவை என்று போதித்தார் (மாற்கு 7:19). இந்தக் கிறிஸ்தவர்கள் யூதருடைய பண்டிகை நாட்களையோ, யூதர்களின் மாதப்பிறப்புகளையோ கைக்கொள்ள எதிர்பார்க்கப்படவில்லை, அல்லது ஓய்வுநாளில் ஓய்ந்திருக்கும்படி கட்டளையிடப்படவுமில்லை. அவர்கள்*

*இந்த கட்டளைகளுக்கு விடுதலை பெற்றிருக்கிறார்கள், மேலும் மற்றவர்கள் (இவர்களுடைய) காரியங்களைக்* ***குற்றப்படுத்தும் நீதிபதிகளாயிருக்க*** *விட வேண்டாம் என்றும் கூறப்பட்டனர். "குற்றப்படுத்துதல்" எனும் வினைச்சொல் (krinō), இந்த வசனப்பகுதியிலும் இதற்கு ஒப்பான வேறு வசனப்பகுதிகளிலும் பவுல் பயன்படுத்தியிருக்கிறவிதம், "தயவு தாட்சண்ய மற்ற, கண்டனத்தை" உய்த்து உணரச் செய்கிறதாயிருக்கிறது. அவர் "ஒருவனும் ஒருவனையும் குற்றப்படுத்த வேண்டாம்" என்று எழுதுவதன் மூலம் அவர் வித்தியாசப்பட்ட போஜனங்களை புசிப்பதை குறித்து கிறிஸ்தவர்களுக்கு சுதந்தரத்தை அறிவித்தார் (ரோமர் 14:13அ; காண்க ரோமர் 14:3, 4; 1 கொரிந்தியர் 10:29). மேலும் அவர் "ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்லாத" போஜனங்களைக் குறித்தும் எழுதினார் (1 தீமோத்தேயு 4:3-5).*

*இயேசுவின் அதிகாரம் மற்றும் ஊழியத்தின் மூலம், கொலோசெயிலிருந்த சகோதரர்கள் இந்த நியமங்களை கைக்கொள்வதிலிருந்து விடுதலையாகியிருந்தார்கள். இந்தக்காரணத்தினால், ஒருவரும் அவர்களை கடுமையாக குற்றப்படுத்த விடக்கூடாது, அவர்கள் அவைகளை கைக் கொள்ளாததற்காக அவர்களின் தெரிவை கண்டனம் பண்ணி, அல்லது அவர்கள் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்கள் என்று சொல்லி குற்றவாளிகளாகத் தீர்க்க இடமளிக்கக் கூடாது. அவைகளை நடைமுறைப்படுத்த வேண்டுமா இல்லையா என்பதைத் தெரிவு செய்ய அவர்கள் உரிமை கொண்டிருந்தனர். அவர்கள் தங்களுடைய சுதந்தரத்தை இப்படிப்பட்ட காரியங்களைச் செய்யப்பயன்படுத்துவார்களேயானால் அது மற்றவர்களை பாதிப்படையச் செய்து அல்லது கிறிஸ்தவர்களை வழக்கத்தில்லாமல் போனவைகளை கைக்கொள்ள செய்து ஒரு தவறான காரணத்துக்கு ஆதரிப்பது போன்ற செயல், அது அவர்களுடைய சுதந்தரத்தை கை நழுவிப்போக விடுவது போன்றது, உண்மையில் அது கைக்கொள்ளக் கூடியதல்ல (ரோமர் 14:13-15, 19-21; 1 கொரிந்தியர் 8:8-13). மற்றொரு புறம்பார்த்தால், அவர்கள் கிறிஸ்துவில் தங்களுக்கு இருக்கிற சுதந்தரத்தை மற்றவர்கள் பறித்துக் கொள்ளும்படி புதிய உடன்படிக்கையில் சேர்க்கப்படாதவைகளைக் கைக்கொள்ளும்படி வற்புறுத்த அனுமதிக்கக் கூடாது.*

*நியாயப்பிரமாணத்தையும் கிறிஸ்துவிடமிருந்து வராத ஆசரிப்புகளையும் அவர்கள் மேல் சுமத்துகிறவர்களை எதிர்த்து எப்படி கிறிஸ்தவர்கள் போராட வேண்டுமென்று பவுல் விளக்கமளித்தார். தீத்துவை விருத்தசேதனம் செய்ய நிர்பந்தித்த யூத கிறிஸ்தவர்களின் கோரிக்கைகளுக்குக் கீழ்ப்படிய அவர் மறுத்தார் (கலாத்தியர் 2:3-5). கொலோசெயிலிருந்த யூத கிறிஸ்தவர்கள் நியாயப்பிரமாணத்தின் வழக்கங்களை கைக்கொள்ளவோ கைக்கொள்ளாமலிருக்கவோ உரிமையுள்ளவர்களாயிருந்தனர், ஆனால் எந்த ஒருவருக்கும் யூத ஆசரிப்பு முறைகளையோ அல்லது மனிதப் பாரம்பரியங்களையோ அவர்கள் மேல் திணிக்க உரிமையில்லை. கிறிஸ்தவர்கள் மனிதனால் - ஏற்படுத்தப்பட்ட விதிமுறைகளுக்குக் கீழ்ப்படியும்படி கோரப்படும்போது, இனியும் அவை ஊறுவிளைவிக்காத சமயத்தடைகளல்ல, மாறாக அவை ஊறுவிளைவிக்கும் கொடுங்கோன்மையானவர்களால் திணிக்கப்பட்ட சட்டங்களாக மாறுகின்றன.*

*இந்த கலாச்சார விதிகளைக் கைக் கொள்ளும்படி பலவந்தம்*

*பண்ணப்பட்டாலோ அல்லது கொலோசெயர்கள் கடமைப்பட்டிருந்தாலோ, இயேசு அவர்களை விடுதலையாக்கிய அதே சக்திகளுக்கு கட்டுப்படுத்தப்பட்டவர்களாகி விடுவார்கள். அவர்கள் அவர் வெற்றி சிறந்த தீமையான சக்திகளின்மேல் கிடைத்த பலன்களின் வெற்றியை அறுக்கத் தவறுகிறார்கள்.*

*பவுல் பட்டியலிட்ட விதிமுறைகள் அநித்தியமானவைகளை மட்டுமே ஆளுபவை. அவை நிழலேயன்றி நிஜமல்ல. அவை பலனற்ற நிழலாகவே நிலைத்திருக்கும், நிஜமானது வரும் பொழுது உண்மையான பொருளாக கிறிஸ்தவர்கள் பின்பற்றிச் செல்ல ஏதுவானவைகளாயிருக்கும்.*

*பவுல் கொலோசெயர்களை புசிக்கவோ, பானம் பண்ணவோ அல்லது பண்டிகைகளை ஆசரிக்கவோ, மாதப்பிறப்புக்களையும் ஓய்வு நாட்களையும் அனுசரிக்கவோ கூடாது என்று சொல்லவில்லை. மாறாக, அவர் சொன்னதெல்லாம் சகோதரர்கள் இந்த பழக்க வழக்கங்களை ஆசரிக்க கடமைப் பட்டவர்களல்ல என்றும், அவைகளை அவர்கள் கைக்கொள்கிறார்களோ கைக்கொள்ள வில்லையோ என்பது குறித்து யாரும் தங்களைக் கடுமையாக குற்றப்படுத்த அனுமதிக்க வேண்டாம் என்றும் குறிப்பிட்டார். இவைகள் இரட்சிப்புக்குரிய காரியங்களல்ல என்பதால், கொலோசெயர்கள் தங்களுடைய சுயப் பகுத்தறிவின் அடிப்படையில் செயல்பட்டிருக்க வேண்டும். இந்த விஷயங்களில் சுயமாய் தெரிவு செய்து கொள்ள அவர்களுக்கு சுதந்திரம் உண்டு, ஒரு பெலவீனமுள்ள சகோதரனின் விசுவாசத்தை அழிக்காதவரை இதுதான் உண்மை (ரோமர் 14:1-21; 15:1-3; 1 கொரிந்தியர் 8:8-13; 10:23-33; காண்க கலாத்தியர் 4:10). கொலோசெயர்கள் இந்த கட்டுப்பாடுகளுக்கு உட்படுவார்களானால் அது கேலிக்கூத்தாகும், ஏனெனில் இயேசு அவைகளை குலைத்துப் போட்டு அவைகளை வலியுறுத்துபவர்களையும் தோல்வியுறச் செய்தார்.*

*பவுல் இந்த ஆசரிப்புகளைக் கைக்கொள்வதை உதாரணங்களாகக் குறிப்பிட்டார். கொலோசெயர்கள் மீது கைக்கொள்ளும்படி திணிக்கவகை தேடிய வேறே அனைத்து ஆசரிப்புகளையும் இதிலே சேர்க்கவில்லை. தனது கருத்தை அவர் விளக்கப்படுத்த, பவுல் இஸ்ரவேலர்கள் கைக்கொள்ள வேண்டியிருந்த ஐந்து ஆசரிப்புக்களைக் குறிப்பிட்டு ஆனால் அவைகளை கிறிஸ்தவர்கள் கைக்கொள்ளக் கடமைப்பட்டவர்கள் அல்லவென்றும் குறிப்பிட்டார். பவுல் நியாயப்பிரமாணத்தைக் குறிப்பிட்டுப் பேசுகிறார் என்பதற்கு கூடுதல் பெலமளிக்க அவைகளில் மூன்று ஆசரிப்புகள் - "பண்டிகைகள்," "மாதப்பிறப்புகள்," மற்றும் "ஓய்வு நாட்கள்" - ஆகியவை* LXX *(செப்துவஜிந்த்) தில் இதே வரிசையில் சரியாக பெயரிடப்பட்டுள்ளது (ஓசியா 2:11; எசேக்கியேல் 45:17). சாராம்சமாக, இதே பட்டியல் பிற இடங்களில், வித்தியாசப்பட்ட வரிசையில் கூறப்படுகிறது (1 நாளாகமம் 23:31; 2 நாளாகமம் 2:4; 31:3), பவுல் குறிப்பிடுகிற ஐந்து ஆசரிப்புகளும் நியாயப்பிரமாணத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.*

*வசனம் 16ல் சொல்லப்படும் வரிசையில் இரண்டு பாகங்கள், பின்வரும் பயன்பாட்டின்படி (1) சரீரத்திற்குள் எடுத்துக் கொள்ளப்படுவது என்ன (2) யூதர்கள் கைக்கொண்ட விசேஷித்த பண்டிகைகளும் நாட்களும். இவைகளில் ஒழுக்க சம்பந்தப்பட்ட பிரச்சனைகள், ஆவிக்குரிய*

முன்னேற்றங்கள், அல்லது கிறிஸ்தவக் தொழுகைகள் ஆகியன சேர்க்கப்படவில்லை, சரீர ஒழுக்கம் மற்றும் உலக வழிபாடுகளைத் தவிர்த்தல் ஆகியவைகளெல்லாம் கிறிஸ்துவைப் பின்பற்றுவோருக்கு தேவைப்படுபவை (ரோமர் 12:1-3; 1 கொரிந்தியர் 6:19, 20; 2 கொரிந்தியர் 7:1). கவனமான ஒழுக்கமுள்ள வாழ்க்கையை பவுல் ஊக்கமிழக்க வைக்கவில்லை. மாறாக அவர் மற்றவர்கள் கொலோசெயர்கள் மீது திணிக்க வகை தேடும் ஆசரிப்புகள் தேவனோடு அவர்கள் கொண்டுள்ள நட்புறவுக்கு எவ்விதத்திலும் சம்பந்தமில்லை என்பதை அவர்களை அறியச் செய்யவே பவுல் விரும்பினார்.

**போஜனம் அல்லது பானம்.** தேவன் இஸ்ரவேலருக்கு போஜனத்தைக் குறித்த பிரமாணங்களைக் கொடுத்திருந்தார், தேவன் குறிப்பாக இஸ்ரவேலர்கள் என்னத்தைப் புசிக்கலாம் அல்லது புசிக்கக் கூடாது என்று நியாயப்பிரமாணத்தில் சொல்லியிருந்தார் (லேவியராகமம் 11:1-47; உபாகமம் 14:3-21). போஜன சம்பந்தப்பட்ட இந்தப் பிரமாணங்களை இயேசு களைந்து போட்டார்: "... புறம்பேயிருந்து மனுஷனுக்குள் போகிறதொன்றும் அவனைத் தீட்டுபடுத்த மாட்டாதென்று நீங்கள் அறிந்து கொள்ளவில்லையா? அது அவனுடைய இருதயத்தில் போகாமல் வயிற்றிலே போகிறது; அதிலிருந்து எல்லா போஜனனங்களின் அசுத்தங்களையும் கழிக்கிற ஆசன வழியாய் நீங்கிப் போகும்" (மாற்கு 7:18ஆ, 19; காண்க நடபடிகள் 10:10-16). இவ்விதமாய் எல்லா உணவுகளும் சுத்தமானவை என்று அறிவித்தார்.

பிற்காலங்களில் ஜனங்கள் விசுவாசத்தை விட்டு விலகும் காலம் வரும் அப்பொழுது தேவன் படைத்த போஜன பதார்த்தங்களை விலக்கவும் வேண்டுமென்று கட்டளையிடுவார்கள், அவை கிறிஸ்தவர்கள் பின்பற்ற கடமைப்பட்டவர்களல்ல என்று பவுல் எச்சரித்தார் (1 தீமோத்தேயு 4:1-4). அவர் ரோமருக்கு எழுதிய செய்தியில், கிறிஸ்தவர்கள் புசிக்கும் போஜன விஷயத்தில் சுதந்திரம் பெற்றிருப்பதாகக் கூறினார் (ரோமர் 14:5, 6, 13-15, 20, 21). கிறிஸ்தவர்கள் எவைகளை புசிக்கலாம், எவைகளைப் புசிக்கக்கூடாது என்று வரையறுக்கப்படவில்லை, என்பது ஆதாரப் பூர்வமாகக் காணுகிறது. "தேவனுடைய ராஜ்யம் குடிப்பும் புசிப்பும் அல்ல" (ரோமர் 14:17).

குடித்தலைப் பற்றி நியாயப்பிரமாணத்தில் மிகச் சொற்பமாகவே சொல்லப்பட்டுள்ளது. ஆசாரியர்கள் தேவக் காரியங்களில் (மத சம்பந்தப்பட்ட பணிகளில்) ஈடுபட்டிருக்கும் போது திராட்சை ரசமோ மது பானங்களோ அருந்துவதிலிருந்து விலகியிருக்கும்படி சொல்லப்பட்டார்கள் (லேவியராகமம் 10:9). நசரேய விரதத்தை மேற்கொண்டிருந்தவர்கள் மதுபானமாவது, திராட்ச ரசத்தின் காடியையாவது, திராட்ச ரசத்தினால் செய்யப்பட்ட எந்தப் பொருளையாகிலும் அருந்தாதபடியும் புசிக்காதபடியும் விலகியிருக்க அறிவுறுத்தப்பட்டனர் (எண்ணாகமம் 6:3). மனோவாவின் மனைவி எவ்வித மதுபானத்தையும் அருந்தாதபடிக்கு எச்சரிக்கப்பட்டாள், ஏனெனில் அவள் ஒரு குமாரனாகிய சிம்சோனை பெறவிருந்தாள் (நியாயாதிபதிகள் 13:4, 7, 14). மதுபான மயக்கம் எப்பொழுதும் கண்டிக்கப்பட்டது (நீதிமொழிகள் 20:1; ஏசாயா 5:11; 28:1).

**பண்டிகைகள்.** நியாயப்பிரமாணம் எண்ணற்ற ஆசரிப்புகளையும் பண்டிகைகளையும் அனுசரிப்பதை நிபந்தனைக்குட்படுத்தியிருந்தது (உபாகமம் 16:16; 2 நாளாகமம் 8:13).

*(1) புளிப்பில்லாத அப்பப் பண்டிகை (யாத்திராகமம் 23:15; 34:18; லேவியராகமம் 23:6), இது பஸ்காப்பண்டிகை என்றும் அறியப்பட்டிருந்தது (லேவியராகமம் 23:5; உபாகமம் 16:1-6), அது இஸ்ரவேலர்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து தேவன் விடுதலையாக்கியதை நினைவுகூறும் படி ஆசரிக்கப்பட்டது (யாத்திராகமம் 12:24-27). அவர்கள் தங்கள் குடும்பத்தின் முதற்பேறானவர்கள் கொல்லப்படவில்லை என்றும் மாறாக கதவு நிலைகளில் இரத்தம் பூசப்பட்ட இஸ்ரவேலரின் வீடுகளைச் சங்காரத்தூதன் கடந்துபோனதையும் நினைவுகூர வேண்டியவர்களாயிருந்தனர் (யாத்திராகமம் 12:22, 23). இந்தப் பண்டிகையில் புளிப்பில்லாத அப்பமும் புசிக்கும்படி கட்டளையிடப்பட்டது (யாத்திராகமம் 12:14-20; 13:6-8).*

*(2) வாரங்களின் பண்டிகை (யாத்திராகமம் 34:22; உபாகமம் 16:10), இப்படியாக இது அழைக்கப்பட காரணம் இதன் ஆசாரிப்பு தானியங்களின் முதல் அறுவடையிலிருந்து ஏழுவாரங்கள் எண்ணப்படும்படி கோரப்பட்டது (உபாகமம் 16:9), இது அறுப்பின் பண்டிகை என்றும் அழைக்கப்பட்டது அல்லது முதற்பேறானவைகளின் சேர்ப்புக் கால பண்டிகை எனப்பட்டது (யாத்திராகமம் 23:16; 34:22; எண்ணாகமம் 28:26). புதிய ஏற்பாட்டில் இது "பெந்தெகோஸ்தே" பண்டிகை எனப்பட்டது (நடபடிகள் 2:1), இதன் பொருள் "ஐம்பதின் பண்டிகை" ஏனெனில் பஸ்காவுக்குப்பின்பு ஐம்பது நாள் கழித்து இது அனுசரிக்கப்பட்டது (லேவியராகமம் 23:15, 16).*

*(3) கூடாரப் பண்டிகைகள் (லேவியராகமம் 23:34; எஸ்றா 3:4), மற்ற மொழிபெயர்ப்புகளில், அது* Feast of Tabernacles (KJV; NKJV). *என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இஸ்ரவேலர்கள் நாற்பது வருடம் வனாந்திரத்தில் பயணம் பண்ணிக் கொண்டிருந்த போது மரக்கிளைகளைக் கொண்டு வேயப்பட்ட சாவடிகளில் (கூடாரங்களில்) குடியிருந்தார்கள். பண்டிகையின் போது முதல் நாளிலும் எட்டாம் நாளிலும் ஒருவேலையும் அவர்கள் செய்யலாகாது (லேவியராகமம் 23:39).*

*(4) பூரீம் எனும் பண்டிகை எஸ்தர் யூதர்களை முழு அழிவிலிருந்து விடுதலையாக்கின பின்பு துவக்கம் பெற்றது (எஸ்தர் 9:26-28), அது பெர்சியாவின் ராஜாவாகிய, அகாஸ்வேருவின் நாட்களில் தீமையான சூழ்ச்சியுடன் செயல்பட்ட ஆமானின் அழிவுக்குப் பின்பு நிகழ்ந்தது.*

*யூதர்கள் வேறுபல விசேஷித்த நாட்களையும் அனுசரித்தார்கள், ஏழாம் மாதத்தின் முதல் நாளில் இஸ்ரவேலர் எக்காளம் ஊதி பிராணிகளையும் தானியங்களையும் பலியிட்டனர் (லேவியராகமம் 23:23-25; எண்ணாகமம் 29:1-6). பாவ நிவர்த்திநாள் எனப்பட்டது (லேவியராகமம் 16:3-34; 23:27-32) இன்று "யாம் கிப்பூர்" என்று அழைக்கப்படுகிறது. யூதர்களின் புத்தாண்டு, பின்னர் ரோஸ் ஹசானா எனப்பட்டது, அநேகமாகபாபிலோனிய சிறையிருப்பின் போது ஆசரிக்கப்பட்டிருக்கலாம் (எசேக்கியேல் 45:18; காண்க யாத்திராகமம் 12:2). வருஷத்தின் முதல் மாதம் நிசான் என்று அழைக்கப்பட்டது (எஸ்தர் 3:7).*

***மாதப்பிறப்பு.** இஸ்ரவேலர்கள் நிலாவை மையமாகக் கொண்ட நாட்காட்டியைக் கொண்டிருந்தனர்; மாதப்பிறப்பு எனும் நாள் மாதத்தின் முதல் நாள் தோறும் கொண்டாடினர், அந்நாளில் அவர்கள் தேவனுக்கு வெகுமதி போல் காணிக்கைகளை படைத்தனர் (எண்ணாகமம்*

*10:10; 28:11). அவர்கள் தங்கள் மாதப் பிறப்பைக் கொண்டாடுவதற்கென தெரிந்து கொண்டநாள் இது (சங்கீதம் 81:3; ஏசாயா 1:14; எசேக்கியேல் 46:3; ஓசியா 2:11; ஆமோஸ் 8:5; ஒரு வகையில் 1 சாமுவேல் 20:18; 2 இராஜாக்கள் 4:23ம் சேர்க்கப்படலாம்.*

***ஓய்வுநாட்கள்.*** *இஸ்ரவேலர்கள் வாரந்தோறும் வாராந்திர ஓய்வுநாளைக் கொண்டாடினர், அது வாரத்தின் முதல் நாளுக்கு முந்திய நாள் (மத்தேயு 28:1; மாற்கு 16:1, 2; லூக்கா 23:56; 24:1; யோவான் 20:1). "ஓய்வுநாள்" என்றால் (வேலை செய்வதை) "நிறுத்துதல், வேலைசெய்வதிலிருந்து விடுபட்டிருத்தல்" என்று பொருள். ஓய்வுநாளில் எந்த வேலையும் செய்ய அனுமதிக்கப்படவில்லை (யாத்திராகமம் 20:8-10; உபாகமம் 5:12-15). ஓய்வுநாள் என்பது தேவனுக்கும் இஸ்ரவேல் என்று பெயர் மாற்றப்பட்ட (ஆதியாகமம் 35:10) யாக்கோபின் சந்ததியாகிய, இஸ்ரவேலருக்கு இடையிலான உடன்படிக்கை (யாத்திராகமம் 31:14-16) தேவன் இஸ்ரவேர்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கினதை அவர்கள் நினைவுகூரும் பொருட்டு பிரதிஷ்டை செய்யப் பட்ட நாள் (உபாகமம் 5:12-15) அவர் சிருஷ்டிப்பின்போது ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தபடியால் அந்த நாளை அவர் தெரிந்து கொண்டார் (யாத்திராகமம் 20:11).*

*தேவன் சீனாய் மலையிலே ஓய்வுநாளைக் கொடுத்தார் (யாத்திராகமம் 20:8-10). அந்த நாளில் யாராகிலும் வேலை செய்தால் அவர்கள் கொலை செய்யப்பட்டார்கள்; இஸ்ரவேலர் ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்க வேண்டியவர்களாயிருந்தனர் (யாத்திராகமம் 31:14). தேவன் அதை ஓய்வுக்கென்று பிரித்து வைத்தார், தொழுகைக்கான நாளாக நியமிக்கவில்லை. அவர்களுடைய பாபிலோனிய அடிமைத்தனத்தின் போது, இஸ்ரவேலர்கள் ஜெப ஆலயங்களில் கூடிவந்து ஓய்வுநாட்களில் வேத வாக்கியங்களை வாசித்தனர். அப்பொழுதும் கூட அது தொழுகைக்குரிய நாளாக இருக்கவில்லை, ஆனால் ஓய்ந்திருக்கவும், ஜெபிக்கவும், வசனங்களை வாசிக்கவும் கூடிய ஒரு நேரமாக இருந்தது (காண்க நடபடிகள் 15:21).*

*வாராந்திர ஓய்வுநாட்களுக்கப்பால், இஸ்ரவேலர்கள் ஒவ்வொரு ஏழாம் ஆண்டும் ஒரு ஓய்வு வருஷமாக அனுசரிக்கும்படி கட்டளையிடப்பட்டனர். ஓய்வு வருஷத்தில் அவர்கள் தங்களுடைய தோட்டத்தை சாகுபடி செய்யக் கூடாது, மாறாக அவைகளையும் ஓய்வாக விடவேண்டும் (யாத்திராகமம் 23:10, 11).*

*நியாயப்பிரமாணத்தைத் துணிகரமாய் மீறுபவர்கள் ஜனத்தின் நடுவிலிராதபடி அறுப்புண்டு போக வேண்டும் என கட்டளையிடப்பட்டனர் (எண்ணாகமம் 15:30, 31). இதில் நியாயப்பிரமானத்தை அசட்டை பண்ணி, அதில் சொல்லப்பட்ட போஜனம், பானம், பண்டிகைகள், மாதப்பிறப்பு, மற்றும் ஓய்வு நாட்களை முறையாய் கையாளப்படாததும் உட்படுத்தப்பட்டது. எப்படியிருப்பினும், நியாயப்பிரமாணம் புதிய உடன்படிக்கையின் கீழ் வாழும் ஜனங்களைக் கட்டுப்படுத்தாது. இந்தக் காரணத்தால், கிறிஸ்தவர்கள் நியாயந்தீர்த்தல் கூடாது (மத்தேயு 7:1) அல்லது தங்களை மற்றவர்கள் நியாயந்தீர்க்க அனுமதிக்கக் கூடாது, கிறிஸ்தவன் கிறிஸ்துவுக்குள் கொண்டிருக்கும் சுயாதீனத்தில் நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளை வற்புறுத்துவதன் மூலம் தலையிடுவதாகும்.*

*ஓய்வுநாளைக் கைக்கொள்ளும்படி கிறிஸ்தவர்களுக்கு புதிய ஏற்பாட்டில் கட்டளையிடப்படவில்லை. இது குறிப்பிடத்தக்க காரியம், ஏனெனில், புறஜாதிக் கிறிஸ்தவர்களுக்கு அநேக உபதேசங்கள் கொடுக்கப்பட்டுள்ளன, அவைகளில் ஒரு மிகச் சிறிய குறிப்பு கூட அவர்களுக்கு ஓய்வுநாளில் ஓய்ந்திருக்கும்படி குறிப்பிடப்படவில்லை. ஏழாம்நாளில் அவர்கள் தங்கள் வேலைகளிலிருந்து விடுபட்டு ஓய்ந்திருக்க வேண்டும் என்பது அவர்களுக்கு அறிமுகமாகாத செயல், அவர்கள் ஓய்வுநாளை கடைபிடிக்கும்படி அவசியமாக்கப்பட்டிருந்தால், ஓய்வுநாளைக் குறித்து சிறப்பு போதனைகள் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். முதலாம் உடன்படிக்கை ஒழிக்கப்பட்டு புதிய உடன்படிக்கை இடம்பெற்ற போது (எபிரெயர் 8:13; 10:9) ஓய்வு நாளை ஆசரிக்க வேண்டும் என்ற கட்டளையும் சேர்ந்தே ஒழிந்து போயிற்று.*

*வசனம் 16 கொலோசெயர்கள் ஓய்வுநாளை ஒரு விசேஷித்த நாளாகக்கருத வேண்டுவதில்லை என்று சொல்லுகிறது. புறஜாதிக் கிறிஸ்தவர்களுக்கு விசேஷித்த அடையாளமாக எதுவுமில்லை. கர்த்தருடைய நாளாகிய, ஞாயிற்றுக்கிழமைதான், கிறிஸ்து உயிர்த்தெழுந்து மரணத்தை வென்ற நாள். மரணத்தை வெற்றி கொண்ட இந்த நாளில்தான் கிறிஸ்தவர்கள் அவரை நினைவு கூரும்படி கூடிவந்தார்கள் (நடபடிகள் 20:7).*

***"அவைகள் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது" (2:17அ)***

*வசனம் 16ல் பவுல் பெயரிட்டுச் சொன்ன ஆசாரிப்புகளெல்லாம் இரட்சிப்புடனோ அல்லது நீதிமானாக்கப்படுதலோடோ எவ்வித சம்பந்தமும் இல்லை. போஜனம் பற்றிய பிரமாணங்கள் அல்லது விசேஷித்த நாட்களை ஆசரித்தல் போன்றவை எப்படி கொலோசெயரின் ஆவிக்குரிய வாழ்க்கையை மேன்மைப்படுத்தக் கூடும்? இவைகளெல்லாம் உண்மையான போஜனமாகிய கிறிஸ்துவுக்குள் கிடைக்கும் வாழ்க்கைக்கு நிழல்களாயிருந்தவை மட்டுமே (யோவான் 6:48). புதிய உடன்படிக்கையோடு நியாயப்பிரமாணத்தை ஒப்பிடும்போது, புதிய உடன்படிக்கை அநேக மேன்மையைக் கொடுத்துள்ளது. ஆவிக்குரிய பரிசுத்தம் (2 கொரிந்தியர் 7:1) என்பது யூதர்களின் உண்ணத்தக்க உணவைக் காட்டிலும் முக்கியமானது. இயேசுவின் பலி பாவத்திலிருந்து நம்மை பரிசுத்தம் பண்ணும் திராணியுள்ளது (மத்தேயு 26:28), ஆனால் நியாயப்பிரமாணத்தின் பலிகளால் ஒன்றுஞ்செய்ய கூடாது (எபிரெயர் 10:4). பரலோகமாகிய நித்திய ஓய்வு கிறிஸ்தவர்களுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்டுள்ளது (எபிரெயர் 4:9; 1 பேதுரு 1:3, 4). அது ஓய்வுநாளில் கிடைக்கும் ஓய்வைக் காட்டிலும் மிகவும் மேன்மையானது. இயேசு மோசேயைக் காட்டிலும் மேன்மையான சட்டம் கொடுப்பவராக இருக்கிறார், மற்றும் நியாயப்பிரமாணத்தின் கீழ்வந்த ஆசாரியர்களைக் காட்டிலும் இயேசு மேலானவர் (எபிரெயர் 3:3; 7:28).*

*ஸ்கியா* எனும் பதம் **நிழலுக்குப்** பயன்படுத்தப்பட்டுள்ளது, அதன் பொருள் நிஜத்தில் பாதியை மட்டும் வெளிப்படுத்துபவை. அது ஏதோ வேறு ஒன்றின் அடையாளமாக அல்லது படிவமாக மட்டுமே இருக்கும். புதிய உடன்படிக்கையில், இயேசு நியாயப்பிரமாணத்தில் நிழலாயிருந்தவைகளை சத்தியமாக அறிமுகப்படுத்தினார் (எபிரெயர் 10:1-4). உள்ளார்ந்த மதிப்பில்லாத அல்லது தன்னுள் தான் எவ்வித வல்லமையும் இல்லாதவைகளால்

*அப்படி நடந்தது. உதாரணமாக, கால்நடைகளின் பலிகள் கிறிஸ்துவில் காணப்பட்ட நிஜத்தின் முன்னுருவமாகக் காணப்பட்டது (எபிரெயர் 8:5; 10:1-3).*

*ஒரு நிழலே நிஜமாக இல்லாதது போலவே, அது ஒரு முன் அடையாளமாக மட்டுமே இருக்கிறது, நியாயப்பிரமாணமும் வரவிருந்த நிஜத்துக்கு நிழலாயிருந்தது. மோசே நிழலாகிய (எபிரேயர் 10:1) நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தது போல, இயேசு சத்தியத்தைக் கொண்டு வந்தார் (யோவான் 1:17), நியாயப்பிரமாணம் புதிய உடன்படிக்கையின் நிஜத்தை நிழலோட்டமாய்க் காட்டியது, ஆனாலும் அது பின்னர் இயேசு செய்தது போல முழுமையான சத்தியத்தை வெளிப்படுத்த முடியவில்லை. நியாயப்பிரமாணத்தை அடிப்படையாகக் கொண்டு கிறிஸ்தவர்கள் செயல்படுவதை குற்றமாய்த்தீர்க்கிறவர்கள், ஒரு நிழலை அடிப்படையாகக் கொண்டு ஒரு மனுஷனின் தோற்றத்தை நியாயந்தீர்ப்பதற்கு ஒப்பானது. "நிஜம் இங்கே இருக்கிறபடியால், நிழலின் காரியங்கள் நியாயத்தீர்ப்பிற்கான விதிமுறையை ஒன்று சேர்த்து கொடுத்துவிடமுடியாது."[1]*

***வருங்காரியங்கள்*** *இதற்குப் பின்பு எதிர் காலமல்ல "வரவிருந்த" காரியத்துக்கு நிழலாக இருந்ததைத் தான் இயேசு புதிய உடன்படிக்கையாக அறிமுகப்படுத்தினார் (எபிரெயர் 8:5).*

***"அவைகளின் பொருள் கிறிஸ்துவைப்பற்றினது" (2:17ஆ)***

***பொருள்*** *என்று இங்கே குறிப்பிடப்படுவது சோமா (sōma), என்பதன் மொழியாக்கம், சாதாரணமாக இதன் பொருள் "சரீரம்." அப்படிப்பட்ட சரீரம் ஒரு நபரைக் குறிப்பதாயிருக்கலாம் (மத்தேயு 5:29), கால்நடைகள் (யாக்கோபு 3:3), செடிகொடிகள் (1 கொரிந்தியர் 15:37), அல்லது ஒரு கூட்டமக்கள் ஆகியவைகளையும் குறிக்கலாம் உதாரணமாக, சபை (ரோமர் 12:5; கொலோசெயர் 1:18). இது ஒரு பிரச்சனையைக் கொண்டு வருகிறது. பவுல் இந்தச் சொற்றொடரை sōma tou Christou ("கிறிஸ்துவின் சரீரம்") என பயன்படுத்தின போது, அவர் (1) இயேசுவின் மாமிச சரீரத்தைக் குறிப்பிட்டாரா (மத்தேயு 26:12), (2) சபையை, அல்லது (3) நிழலாய் முன் அடையாளப்படுத்தப்பட்ட நிஜம் அல்லது பொருள் ஆகியவற்றைக் குறிப்பிட்டாரா? ஒவ்வொரு நிகழ்வின் போதும், "சரீரம்" அல்லது "சரீரங்கள்" என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, ஒரு இடத்தில் மட்டுமே, "சரீரப்பிரகாரமாக" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (2 கொரிந்தியர் 10:10).[2]*

*மூன்று மொழிபெயர்ப்புகளில் ஏதாவதொன்று சாத்தியமாகையில், சிறப்பான பிரதிபலிப்பாய்க் காணப்படும் வசனப்பகுதி நியாயப்பிரமாணம் புதிய உடன்படிக்கையின் நிஜத்துக்கு நிழலாயிருந்தது என்பது. ஒருநபர் நியாயப்பிரமாணத்தின் விதிமுறைகளாக வசனம் 16ல் குறிப்பிடப்பட்டுள்ள, "போஜனம் அல்லது மாதப்பிறப்பு, அல்லது ஒரு ஓய்வுநாள்," ஆகியவை எப்படி இயேசுவின் மாமிச சரீரம் அல்லது சபையைக்குறிப்பிடும் நிழலாக இருந்தது என்பதை விளக்கிச் சொல்வது கடினம். வசனம் 16ல் குறிப்பிடப்படும் ஆசரிப்புக்கள் புதிய உடன்படிக்கையில் நிஜமாக வரவிருந்த பொருளை நிழலாக வெளிப்படுத்தியது என்று சொல்வது சுலபம். மாம்சப் பிரகாரமான*

*ஆசரிப்புகளாக, அவை புதிய உடன்படிக்கையின் நிஜப்பொருளாக ஆவிக்குரிய ரீதியில் முன் அடையாளமாகக் காட்டியது. நியாயப்பிரமாணம் உண்ணும் உணவுகளில் ஒரு வரையறையைக் கொடுத்தது, புதிய உடன்படிக்கையைப் பொறுத்த மட்டில் அது கிறிஸ்தவர்களின் ஆவிக்குரிய போஜனத்தைப் பேசுகிறது (1 பேதுரு 2:2). மிருகபலி செலுத்தியதன் மூலம் பண்டிகைகளை ஆசரித்த விதம் உண்மையான பலியாகிய, இயேசுவின் சிலுவை மரணத்தை வாரந்தோறும் நினைவுகூருவதற்கு முன் அடையாளம் (1 கொரிந்தியர் 11:23-25). நியாயப்பிரமாணத்தின் வேறுபல முன்மாதிரிகள் கிறிஸ்தவ செயல் முறைகளுக்கு ஒப்பிடத்தக்கவைகளாக இருந்ததை எண்ணற்ற வசனங்கள் விளக்கமளிக்கின்றன.*

*கள்ளப் போததர்கள் நிழலை மாத்திரம் கண்ணுற்று சத்தியத்திற்கு மூலகாரணியாகிய இயேசுவால் வெளிப்படுத்தப்பட்ட சத்தியங்களை பார்ப்பதில் ஒரு எல்லையை வகுத்துக் கொண்டுள்ளனர் (எபேசியர் 4:21). நிழலின் நோக்கம் நிஜத்தை ஆயத்தப்படுத்துவது (கலாத்தியர் 3:24). நியாயப்பிரமாணத்தின் கீழ் இருந்தவர்கள் தொடர்ந்து இருளில் இருந்தார்கள்: அவர்களுடைய கண்கள் முக்காடிடப்பட்டிருந்தது (2 கொரிந்தியர் 3:14), அது நியாயப்பிரமாணத்தின் நிழலாயிருந்தது. எனவே அவர்கள் உலகத்திற்கு வெளிச்சமானதை அவர்களால் காண இயலவில்லை (யோவான் 8:12).*

*கிறிஸ்தவர்கள் நிழலில் இல்லாமல், நிறைவேற்றம் நிகழ்ந்து நிஜம் காணப்படுகிற காலக்கட்டத்தில் இருக்கிறார்கள். நியாயப்பிரமாணம் இன்னமும் கிறிஸ்தவ யுகத்தின் பெலனற்ற நிழலாக ஊழியம் செய்கிறது. நியாயப்பிரமாணத்தின் ஒளிமங்கிய குறிப்பின் கீழ் இன்னும் வாழ வகை தேடுவோர் கிறிஸ்தவ ஜீவியத்தின் விளக்கமான அழகையும் பரலோகத்தில் நித்திய ஜீவனையும் தவறவிடுகிறார்கள்.*

## மனித ஆசரிப்புகளைத் தவிர்த்தல்
## *(2:18, 19)*

***[18]கணுக்களாலும் கட்டுகளாலும் உதவிபெற்று இணைக்கப்பட்டு, தேவ வளர்ச்சியாய் வளர்ந்தேறுகிற சரீரமுழுவதையும் ஆதரிக்கிற தலையைப் பற்றிக்கொள்ளாமல், [19]மாயமான தாழ்மையிலும், தேவதூதர்களுக்குச் செய்யும் ஆராதனையிலும் விருப்பமுற்று, காணாதவைகளில் துணிவாய் நுழைந்து, தன் மாம்ச சிந்தையினாலே வீணாய் இறுமாப்புக் கொண்டிருக்கிற எவனும் உங்கள் பந்தயப் பொருளை நீங்கள் இழந்துபோகும்படி உங்களை வஞ்சியாதிருக்கப் பாருங்கள்.***

***"கணுக்களாலும் கட்டுக்களாலும் உதவிபெற்று இணைக்கப்பட்டு, தேவ வளர்ச்சியாய் வளர்ந்தேறுகிற" (2:18அ)***

*பவுல் இரண்டு கிரேக்க நிகழ்கால வினை எச்சத்தைப் பயன்படுத்தினார், முறையே epichorēgoumenon* ***(உதவிபெற்று)*** *மற்றும் sumbibazomenon* ***(இணைக்கப்பட்டு)****, என்று சொல்லி கொலோசெயர்கள் தாங்கள் வளர்ந்தேற என்ன செய்ய வேண்டுமென்று அவர்கள் அறிய வேண்டுமென்று விரும்பினார். இரண்டு கிரேக்க வார்த்தைகளும் தொடர் நிகழ்ச்சியை வெளிப்படுத்துகிறது,*

ஆவிக்குரிய சத்துணவு சரீரத்துக்குத் தொடர்ந்து கொடுக்கப்படுமானால் மேலும் இணைக்கப்பட்டிருக்குமானால், அது வளர்ந்தேறும் சரீரமானது அவயமாயிராதபடி, தலையிலிருந்து பிரிக்கப்படுமானால், அது வளர்ச்சியடைய முடியாது. தம்மைப் பின்பற்றுவோர் ஒன்றாயிருக்கவும் (யோவான் 17:20-23) பிரிவினையில்லாதிருக்கவும் (1 கொரிந்தியர் 1:10) இயேசு விரும்புகிறார். தலையாகிய இயேசுவைக் கொண்டு கட்டப்படும் ஐக்கியம், ஒரு உள்ளூர் சபைக்குள் வளர்ச்சியைக் கிளரி விடும், ஆனால் பிரிவினைகள் அதை வெகு விரைவில் அழித்துவிடும். எந்த உள்ளூர் சபையிலும் வளர்ச்சிக்குத் தடையாயிருக்கிற மிகப் பெரிய காரியம் இயேசுவோடு கொண்டிருக்க வேண்டிய நெருக்கமான ஐக்கியத்தில் குறைவு என்பது தான்.

**வளர்ந்தேறுகிற** (*auxō*)என்றால் சரீரமானது உதவிபெற்று இணைக்கப்பட்டு இருப்பதால், வளர்ந்தேறுகிற செயல் தொடர்கிறது என்று பொருள். பவுல் இங்கே அறிவியல் ரீதியான **கணுக்கள், கட்டுகள்** ஆகியவைகளை வளர்ச்சிக்கு உகந்தவைகளாகக் குறிப்பிடவில்லை. கணுக்கள் சரீரத்தின் இசைவிணக்கத்திற்கும் அசைவுக்கும் உதவுகிறது. கட்டுகள் சரீரத்தை ஒன்றாக இணைத்து கணுக்களும் சரீரத்தின் பிற அங்கங்களும் ஒன்றாக இயங்கச் செய்கிறது. ஒவ்வொன்றும் முக்கியமானது, தலையோடு ஒத்துப்போய், அசைவுகளைக் கொடுக்கவும் போஷாக்கைக் கொடுக்கவும், வளரவும், சரீரத்தின் ஒட்டுமொத்த அக்கறையை ஏற்றுக் கொள்கிறது.

பவுலின் கருத்து என்னவெனில் சரீரம் இசைவாய் இணைக்கப்பட்டு முழுமைக்கும் தேவையான நலன் கருதி உதவுகிறதாயிருக்கிறது என்பதே. தலையுடன் ஒத்துழைத்து, போஷாக்கை சாத்தியப்படுத்தி முழுசரீரத்தின் மீதும் அக்கறை காட்டுகிறது. சரீரத்தின் நலனுக்குகாக ஒவ்வொரு அங்கமும் செயலாற்று வதற்கென கடமைகள் உண்டு. கணுக்களும் கட்டுகளுமில்லாமற் போனால், சரீரம் கழன்று விழுந்து செயல்பட இயலாமல் போகும், தலையில்லாமல், சரீரம் தன் கட்டுப்பாட்டை இழக்கும், வழிகாட்டலும் பராமரிப்பும் இல்லாமல் போகும். சரீர அங்கங்கள் ஒன்றாக வேலை செய்யும் போது மற்றும் தலையோடு ஒத்துழைக்கும் போது, சரீரம் வளர்ந்து நன்கு இயங்கும்.

போஷாக்கு என்பது “கணுக்கள் மற்றும் கட்டுகள் மூலம், ஜீரண உறுப்புக்கள் உணவைச் ஜீரணிக்கச் செய்வது போல இரத்த நாளங்கள் போஷாக்கை சரீரத்தின் பிறபாகங்களுக்கு எடுத்துச் செல்லுவது போல, நடப்பிக்கப்படுவதில்லை. பவுல் சரீரத்தின் இந்த இடங்களைத்தான் ஒப்பிட்டிருக்கிறார் என்று நினைப்பவர்கள் உண்மைக் கருத்தைத் தவற விடுகிறார்கள். முழு சரீரத்தின் நன்மை கருதி அதன் ஒவ்வொரு அவயவமும் பாடுபட வேண்டும் என்று அவர் போதித்தார். இந்த சரியான விளக்கம் போஷாக்கை சரீரம் தாமாக இயங்கி பெற்றுக் கொள்கிறது என்பது பவுலின் நாட்களிலிருந்த மருத்துவ மற்றும் விஞ்ஞான போதனைக்கு மாறுபட்டது.

பவுல் போதிப்பதில் உள்ள உண்மையென்னவெனில் கள்ளப் போதகர்கள் தங்களைத் தலையின் தொடர்பிலிருந்து பிரித்துக் கொண்டார்கள், அது மட்டும்தான் வளர்ச்சிக்கான ஒரே மூலாதாரம். இந்தத் தொடர்பின் பிரிவால் வளர்ச்சி பாதிக்கப்பட்டு அது மரணத்தில் போய் முடியும். சபை இயேசுவைப் பற்றிக் கொண்டிருந்து சரீரத்தின் எல்லா அங்கங்களும் ஆவிக்குரிய

*வளர்ச்சியடையும்படி நாடும்போது மட்டுமே ஆவிக்குரிய வளர்ச்சி நடந்தேற வழியுண்டு.*

*எபேசியர் 4:11-16ல் சபையானது கட்டப்பட்டு சுய வளர்ச்சியை அடையும் பொருட்டு தேவன் சபையிலே குறிப்பிட்ட தலைவர்களை நியமித்தார் என்று பவுல் போதித்தார். தேவன் தாம் வளர்ச்சிக்கான மூலாதாரங்களை அளிக்கிறார்: வசனம் (1 பேதுரு 2:2) மற்றும் ஆவியானவரின் உதவி (எபேசியர் 3:16), போன்றவை. தேவனுடைய உதவியின்றி சரீரம் கனி கொடுக்க மாட்டாது (யோவான் 15:4, 5); மேலும் அங்கங்கள் சரியாக இயங்காவிட்டால், சரீரம் வளர்ச்சியடையாது. சரீரத்தின் நலன் அதன் தலையைச் சார்ந்திருக்கிறது, மேலும் தலையின் விருப்பங்களை நிறைவேற்றுகின்ற கடமை சரீரத்தைச் சார்ந்திருக்கிறது. வளர்ச்சிக்கான மூலாதாரத்தை தேவன் கொடுக்கிறார், பலதரப்பட்ட அங்கங்களுக்கு தேவன் கொடுக்கும் போஷாக்கு போய் சேர்கிறது என்பதை ஒவ்வொரு அங்கத்தினரும் காண்பது அவசியமாயிருக்கிறது. சரீரமானது தேவனோடு ஒத்துழைத்து அவரிடத்திலிருந்து அது வளர ஏதுவானவைகளை பெற்றுக் கொள்ளும்போது மட்டுமே வளர்ச்சி இடம் பெறுகிறது.*

*தலை, கணுக்கள், கட்டுகள் ஆகியவை நேரடிப் பொருளில் எடுத்துக் கொள்ளப்படாமல் உருவகமாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். பவுல் உதாரணப்படுத்துவதன் மூலம் சரீரம் - அதன் கணுக்களோடும் கட்டுகளோடும் - என்பது சபை கிறிஸ்துவே அதன் தலையாயிருக்கிறார். சரீரமானது தலையுடன் ஒத்துழைத்து சரீரத்தின் பலனுக்காக சரீரத்தின் ஒவ்வொரு பாகமும் தன்தன் பணியைச் செய்வதால்தான் அதிகப்பட்ச வளர்ச்சி சரீரத்துக்கு வருகிறது.*

***"தேவ வளர்ச்சியாய் வளர்ந்தேறுகிற சரீரமுழுவதையும்" (2:18ஆ)***

*கிரேக்க மொழியில், இந்தச் சொற்றொடர்கள் ("அவருக்குள்" என்று துவங்குகிற ex hou, என்பது,* ***இவரிடத்திலிருந்து*** *என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது). வசனம் 18ன் பின் பகுதியில் "தலையை" என்பது மாற்றுச் சொல் (kephalē), கொடுக்கப்பட்டுள்ளது. அவருக்குள் என்பது ஆண் பாலிலும், "தலை" என்பது பெண்பாலிலும் சொல்லப்பட்டுள்ளது. இதனால் சிலர் "தலை" என்பது இயேசுவை குறிப்பதில்லை என்று முடிவுசெய்கின்றனர்.* Schweizer *இந்த மறுப்புக்கு பதிலளித்தார்: "தலை" என்பது கிரேக்க மொழியில் பெண் பாலில் சொல்லப்பட்டிருந்த போதிலும் ஆசிரியர் இதை ஆண்பாலிலேயே குறிப்பிட்டிருப்பதால் கவனம் இதிலேதான் செலுத்தப்படுகிறது.*[3] *மற்ற வசனப் பகுதிகளில் இயேசு சரீரத்துக்குத் "தலையாயிருக்கிறார்" என்று சொல்லப்படுகிறது (1 கொரிந்தியர் 11:3; எபேசியர் 1:22; 4:15; 5:23; கொலோசெயர் 1:18; 2:10).*

*"அவருக்குள்"* ***முழுசரீரத்தின்*** *வளர்ச்சிக்குத் தேவையான போஷாக்கு அவரே மூலாதாரமாக அளிக்கிறார் என்பதைக் காட்டுகிறது. "அவருக்குள்" மற்றும் "சரீரமுழுவதும்," என்பதை வலியுறுத்திப் பார்க்க வேண்டும் ஏனெனில் தலையிடமிருந்து சரீரத்தின் சில அங்கத்தினர்கள் மட்டும் வளர்ச்சியைப் பெறுவதில்லை. சரீரமுழுவதிலும் உள்ள அனைத்து அங்கத்தினர்களும் அதன் தலையாயிருக்கிறவருடனும் மற்ற அங்கத்தினர்களுடனும் கொண்டுள்ள*

*தொடர்பால் மட்டுமே வளர முடியும்.*

*சரீரம் இயேசுவோடு கொண்டிருக்கும் தொடர்பு ஆவிக்குரிய வளர்ச்சிக்கு அவசியமானது. அவர் ஆவிக்குரிய தேவையுடைய சரீரத்தின் அனைத்து அங்கத்தினர்களுக்கும் உதவி செய்கிறார், அது ஒவ்வொரு அங்கத்தினரும் கொடுக்கும் பயன்கள் மூலம் செயல்படுகிறது. முழு சரீரத்தின் மேலும் அக்கறைகொண்டவர்களாக ஒவ்வொரு அங்கத்தினரும் தன் பகுதியைச் செய்யும்போது சரீரம் மிகச்சிறப்பாக இயங்குகிறது. வேறு இடங்களில் பவுல் மனித சரீரத்தைப் பயன்படுத்தி சபையின் அங்கத்தினர்களுக்கு உதாரணப்படுத்தி பேசுகிறார் (1 கொரிந்தியர் 12:14-26; எபேசியர் 5:15, 16).*

***"ஆதரிக்கிற தலையைப் பற்றிக்கொள்ளாமல்" (2:18இ)***

*மாம்ச சிந்தையிலுள்ள பிரச்சனையை குறிப்பிட்டு பவுல் பேசினார்: அவர்கள் அநேக கள்ளப் போதனைகளுக்கு கவனம் செலுத்தி தலையைப் பற்றிக்கொள்ளாதிருந்தார்கள். இயேசுவே கர்த்தரும் வானத்துக்கும் பூமிக்கும் அதிகாரமிக்கவராயும் இருக்கிறார் (மத்தேயு 28:18; எபேசியர் 1:20-23). இது உண்மையாயிருந்தாலும், அவர் தலையாயிருக்கிற சபை மாத்திரம் அவரைத் தலையாக மதிப்பு செலுத்தி அவருக்கு கீழ்ப்படிகிறது (எபேசியர் 5:24). மனித சரீரம் மனித பிரகாரமான தலையுடன் தொடர்புடைய தாயிருப்பதுபோலவே, இயேசு தலையாகிய அவர், சபையாகிய சரீரத்துடன், தொடர்புடையவராயிருக்கிறார். தலை தனது சரீரத்தில் உள்ள அக்கறையால், அதுக்காக அது கவனம் செலுத்துகிறது, அதன் செயல்பாடுகளை வழிநடத்துகிறது, மற்றும் அதன் தேவைகளை நிறைவேற்றுகிறது.*

*பவுல் வெளியில் இருப்பவர்களைக் குறிப்பிடுகிறாரா அல்லது கிறிஸ்தவர்களைக் குறிப்பிட்டு "தலையைப் பற்றிக் கொள்ளாமல்" என்று சொன்னாரா? வெளியாட்களைக் குறிப்பிட்டிருக்கமாட்டார் என்றே தோன்றுகிறது; ஏனெனில் அவர்கள் தலையோடு இணைக்கப்படவேயில்லை, அப்படியிருக்கும்போது தலையைப் பற்றிக் கொள்வதை எப்படி நிறுத்தியிருக்கக் கூடும்? கிறிஸ்தவர்களை அவர் குறிப்பிட்டிருப்பாரானால், யாரோ சிலர் தலையைப் பற்றிக்கொள்வதை விட்டுவிட்டதாக பவுல் குறிப்பிட்டுள்ளார் என்று பொருள். இரண்டாவது சொல்லப்பட்டதே அநேகமாக சரியான பொருளாக இருக்கக் கூடும். நிகழ்கால எச்சவினையுடன் (kratōn) எதிர்மறை வார்த்தையாகிய, "பற்றிக் கொள்ளாமல்" என்பது அவர்கள் இனியும் தங்களுடைய பெருமையினால் தலையைப் பற்றிக் கொள்ள வில்லை என்று பொருள் இயேசுவின் போதனைகளை அவர்கள் பற்றிக்கொள்ளாமல் அவருக்கு உண்மையாயிருப்பதிலிருந்து விலக்கிக் கொண்டனர்.*

*மிகப்பெரிய முக்கியத்துவமெல்லாம் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவிடன் கொண்டுள்ள தொடர்புதான். ஒருவர் கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டிருக்கும் வரை, அவர் ஆவிக்குரிய ரீதியில் வளரமுடியும். இந்த தொடர்புக்கு முறிவு ஏற்படுத்துவார்களானால் அவர்கள் உதிர்ந்துபோய் அக்கினியிலே போடப்படுவார்கள் (யோவான் 15:5, 6).*

*கிறிஸ்துவின் சரீரத்தில் இருக்கும் ஒருவர் தலையைப் பற்றிக்கொள்வதை நிறுத்திவிடுவாரானால், அவர் விழுந்து போனவராகிறார். மேலும், ஒருவர்*

குழந்தைப்பருவத்திலேயே இருந்து விடுவாரானால், மாம்ச சிந்தையை விட்டு வளராமலேயே இருந்து விடுவாரானால், ஆவிக்குரிய நிஜத்தை அவரால் பற்றிக் கொள்ளக்கூடாது (1 கொரிந்தியர் 2:14-3:3). சபைக்குத் தலையாயிருக்கிற இயேசுவைப் பற்றிக் கொள்ளாதிருக்கிற எந்த ஒருவருக்கும் இது சம்பவிக்கும், இயேசுவோடு உள்ள தொடர்பை தக்க வைத்துக் கொள்ளவும் அவருக்குள் காணும் ஆவிக்குரிய போஷாக்கைப் பெற்றுக் கொள்ளவும் அவரேயே பற்றிக்கொண்டு தொடர்ந்து அவருடைய போதனைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

### "மாயமான தாழ்மையிலும், தேவ தூதர்களுக்குச் செய்யும் ஆராதனையிலும் விருப்பமுற்று" (2:19அ)

ஆற்றல் மிகு வஞ்சகர்கள் கொலோசெயர்களை **மாயமான தாழ்மையிலும் தேவதூதர்களுக்குச் செய்யும் ஆராதனையிலும்** விருப்பமுறச்செய்து இயேசுவிடமிருந்து பிரித்து விடக்கூடும். வழக்கமான மொழிபெயர்ப்பில் *thelō*, என்பது "விருப்பமுற்று," என்று மொழிபெயர்க்கப்பட்டது, "அதன் பொருள் சித்தம், தேவையுறு, மற்றும் ஆர்வம்" போன்றவை (காண்க மத்தேயு 1:19; 8:2). இந்த வசனப்பகுதியில், கிரேக்க முன்னிடைச்சொல் *en* ("in"), பயன்படுத்தப்பட்டது, அதைச் சிறப்பான பொருளில் புரிந்து கொள்ள வேண்டுமானால் "ஒன்றில் சந்தோஷப்படுதல்,"[4] அல்லது "ஒன்றில் பிரியப்படுதல்." இந்த வஞ்கர்கள் கள்ளத்தனமான, தாழ்மையான பக்தியுடையவர்களாய்க் காணப்பட்டனர்; அவர்கள் மற்றவர்களுடைய பார்வையிலே மாயமான தாழ்மையைக் காட்டுவதில் விருப்பமுற்றிருந்தனர்.

பின்வரும் சொற்றொடரில் கொலோசெயர்கள் குறிப்பிட்ட சில ஆசரிப்புகளில் விழுந்து விடாதபடிக்கு அதைத் தவிர்க்க பவுல் நான்கு கிரேக்க எச்சவினைகளைப் பயன்படுத்தினார். "மாயமான தாழ்மையிலும் தேவ தூதர்களுக்குச் செய்யும் ஆராதனையிலும் *விருப்பமுற்று*" (வசனம் 19அ); (2) "காணாதவைகளில் துணிவாய் *நுழைந்து*" (19இ); (3) "மாம்ச சிந்தையில் வீணாய் *இறுமாப்புக் கொண்டிருக்கிறவன்*" (வசனம் 19ஈ); மற்றும் (4) "தலையைப் *பற்றிக் கொள்ளாதிருக்கிறவன்*" (வசனம் 18இ). (வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது.)

*Tapeinophrosunē*, என்பது மாயமான தாழ்மை என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது இங்கேயும் வசனம் 23லும், வழக்கமாக "தாழ்மை" என்று மொழிபெயர்க்கப்பட்டது (நடபடிகள் 20:19; எபேசியர் 4:2; பிலிப்பியர் 2:3). மற்ற புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் தேவனுக்கு முன்பு தாழ்மையாய் இருப்பது குறித்துப் போதித்தார்கள் (யாக்கோபு 4:10; 1 பேதுரு 5:5, 6). ஆகிலும், இந்த வசனப்பகுதியில், "தேவ தூதர்களுக்குச் செய்யும் ஆராதனையுடன்" இந்த வார்த்தை இணைக்கப்பட்டது, அது "தாழ்மை" என்பதற்கு எதிராகப் பயன்படுத்தப்படுவதை விளக்குகிறது. பவுல் இங்கே ஒரு செயற்கைத் தாழ்மையைப் பற்றிப் பேசுகிறார், அதுதான் மாய்மாலம் ("பொய்யான தாழ்மை"). இயேசு தர்மஞ் செய்தல், ஜெபம், மற்றும் மனிதர்கள் காண வேண்டும் என்று உபவாசம் இருந்தவர்களுக்கு எதிராக இதே பிரச்சனையினிமித்தம் பேசியிருப்பார் என்று தோன்றுகிறது

*(மத்தேயு 6:1-7, 16-18; காண்க 23:25-28). நீதிமான்களைப் போல நடிப்பதோ அல்லது தாழ்மைப்படுத்திக் கொள்வதாக நடிப்பதோ முற்றிலும் நீதியோ அல்லது தாழ்மையோ அல்ல.*

*எல்லா மதக் கூட்டங்களிலும் தங்கள் பக்தியிலே பெருமை கொள்ளக் கூடியவர்கள் இருக்கிறார்கள், அதை அவர்கள் பொய்யான தாழ்மையோடே நடப்பிப்பார்கள். இந்த நபர்கள் அவர்கள் ஏதோ உச்சக்கட்ட ஸ்தானத்தை அடைந்து விட்டது போலவும் வழக்கத்துக்கு மாறான மத அனுபவங்களின் மூலம் புனிதத் தன்மையை அடைந்து விட்டது போலவும் அல்லது ஆவிக்குரிய வரங்களைப் பெற்றிருப்பது போலவும் நம்புகின்றனர். அவர்கள் மேட்டிமையினால் தங்களைப் பெரிதாகக் காட்டிக் கொள்கின்றனர், அப்படிப்பட்ட அனுபவங்களினாலே விசேஷித்த ஆவிக்குரிய மனதால் அறியும் திறனை அடைந்து விட்டதாக நினைத்தனர். இந்த முகப்பைக் காண முடியாத ஜனங்கள் இயேசு விடமிருந்து பிரிக்கப்பட்டு கொள்ளை கொண்டுபோகப் படுவார்கள், அவர்கள் தங்களுடைய மாயமான தாழ்மையினால் செயல்படுவார்கள்.*

*முகத்தோற்றத்தை மாறுப்படுத்திக் கொள்ளும் இவர்கள், தங்களுடைய சரீர அசைவுகளால் வெளிப்படையான பகட்டுடையவர்களாக இருப்பார்கள், அவர்களின் குரலின் தொனியை மாற்றி (இயல்பாகப் பேசாமல்), மனுஷர்களை கவரும் பொருட்டு வழக்கத்துக்கு மாறாக அதிகப்படியான சரீரப்பிரகாரமான வார்த்தைகளை பிரயோகித்து தேவனையல்ல, மனுஷரையே பிரியப்படுத்துவர். அப்படிப்பட்ட வெட்கக் கேடான செயல் பக்தியாய்க் காட்டிக் கொள்ளும் வேஷம் மட்டுமே, அதின் மூலம் அவர்கள் எப்படிப்பட்ட பக்திமான்கள் என்று அடுத்தவர்களுக்குக் காட்டிக் கொள்ளுவதும் அல்லது தொழுகையிலே எவ்வளவாய்த் தங்களை உட்படுத்திக் கொள்கின்றனர் எனக் காட்டவும் அப்படி செயல்படுத்துகின்றனர்.*

*"தேவ தூதர்களை தொழுதுகொள்வதற்கு" எதிராகவும் பவுல் எச்சரித்தார். தொழுகையின் முறை மாத்திரம் தவறானதல்ல, தொழுகையின் நோக்கமும் சரியாக இல்லாதிருக்கும். கிறிஸ்தவர்கள் தேவனை தவிர்த்து வேறு எதையும் தொழுது தங்களுடைய பந்தயப் பொருளை இழந்து போகக் கூடும். யோவான் பத்முத் தீவில் இருக்கும் போது இயேசு கிறிஸ்துவின் வெளிப்பாடுகளைத் தனக்கு காண்பித்த தேவ தூதனை தொழுது கொள்ளத் துவங்கினார். தேவதூதன் அந்தத் தொழுகையை ஏற்க மறுத்து தேவனைத்தொழுது கொள்ளும்படி சொன்னான் (வெளிப்படுத்தின விசேஷம் 19:10; 22:8, 9). தேவன் மட்டுமே ஆராதிக்கப் படத்தக்கவர் (உபாகமம் 6:13; மத்தேயு 4:10).*

*இயேசு தம்மை தொழுதுகொள்ள அனுமதித்தார்.[5] - அது சரிதான், ஏனெனில் அவர் தேவனாக இருக்கிறார் (மத்தேயு 1:23; யோவான் 1:1). மரியாளை ஒரு பெருமதிப்புக்குரியவளாகவோ தொழுகைக்குரியவளாகவோ இயேசு பரிசீலிக்கவில்லை. ஒருமுறை, ஒரு கூட்டத்தின் நடுவில் இருந்த ஒரு ஸ்திரீ மரியாளை கனப்படுத்தும் பொருட்டு அவரைச் சுமந்த கர்ப்பமும் அவர் பாலுண்ட முலைகளும், பாக்கியமுள்ளவைகளென்று சத்தமிட்டுச் சொன்னாள். அவர் மறுமொழியாய், "அப்படியானாலும் தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, அதைக் காத்துக் கொள்ளுகிறவர்களே அதிக பாக்கியவான்கள்" என்றார் (லூக்கா 11:27, 28; காண்க மத்தேயு 12:48-50).*

2:18ல் பவுல் தேவதூதர்கள் செய்கிற தொழுகையைக் குறித்துப் பேசுவதாகக் குறிப்பிடுகின்றனர். இதன் பொருள் என்னவெனில் கள்ளப் போதகர்கள் தங்கள் தொழுகை முறையை தேவதூதர்களின் தொழுகையைப்போல செயல்படுத்த வகை தேடுவதாக சொல்லிக் கொள்கின்றனர். இதிலுள்ள பிரச்சனை என்னவென்றால் இந்த விளக்கத்தின்படி தேவதூதர்களின் தொழுகை எப்படியிருக்கும் என்று யாருக்கும் தெரியாது. மேலும், ஜனங்கள் தங்கள் தொழுகையில் தேவ தூதர்களை பின்பற்றுவதற்கான எந்த ஒரு தகவலும் ஆதாரமளிக்கவில்லை.

கொலோசெயர்கள் ஒருவேளை தேவதூதர்களை தொழுது கொள்ளாமலிருந்திருக்கலாம், லிக்கஸ் பள்ளத்தாக்கில் தேவதூதர்களின் தொழுகை நடந்து கொண்டிருந்த போதிலும் அவர்கள் அப்படி தொழுகை செய்யவில்லை, இரேனியு என்பவர், ஆசியாமுனை வழியாக மிக அதிகமாக பயணித்தவர் கி.பி. 182லிருந்து 188ற்கு இடையே சபை தேவதூதர்களை ஆராதிக்கவில்லை என்று எழுதினார்.[6] பின்னர், லவோதிக்கோயாவிலிருந்த சமயத்தலைவர்களின் கூட்டத்தில், 35வது கிறிஸ்தவ சட்டதிட்டக்கூட்டத்தின்போது XXXV (கி.பி. 363) தேவ தூதர்களிடம் சபை வேண்டுதல் செய்ய எந்த உரிமையும் அளிக்கப்படவில்லை என்று தீர்மானித்தனர்.[7] ஆசியா முனையில் கண்டுபிடிக்கப்பட்ட பதிவேட்டில் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள்படி, பிரதான தூதனாகிய மிகாவேல் தூதனுடைய தொழுகை அந்த மண்டலத்தில் கி.பி. 739ன் பின்பகுதியில் பரவலாக பரவியிருந்துள்ளது, அவ்வேளையில் சிலுவைப் போரோடு தொடர்புடைய இஸ்லாமிய போராட்ட வெற்றி மிகாவேலுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. பெரும்பாலும் இதற்கான முடிவுரையாகச் சொன்னால், கொலோசெயர்கள் தேவ தூதர்களைத் தொழுது கொள்ள துவங்காதபடி பவுல் எச்சரித்தார்.

“தொழுகை” (thrēskeia) என்று இந்த வசனத்தில் சொல்லப்பட்டதன் பொருள் “மனித சக்திக்கு அப்பாற்பட்ட சக்திகளை (விசேஷமாக) தொழுது கொள்ளும் ஆராதனை மத சடங்குகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.”[8] இதே பதம் சமகாலத்து பவுலின் எழுத்துக்களுடன் இயக்கியங்களில் காணப்படுகிறது. புதிய ஏற்பாட்டில் இந்த வார்த்தை காணப்படுகிற பிற இடங்கள் அது “பக்தி” (அல்லது “மார்க்கம்”) என்று குறிப்பிடப்பட்டு யூதர்களின் தொழுகைகளில் இருந்த பாரம்பரியங்களைக் குறிப்பிடுகிறது (நடபடிகள் 26:5), மேலும் தேவனுக்கு செலுத்தும் ஊழியங்களையும் இது உட்படுத்துகிறது (யாக்கோபு 1:26, 27). அது சமய சடங்குகளை கைக்கொள்ளும்படிக்கு செயல்படுத்தும் முறையையும் பொருள்படுத்துகிறது. அஞ்ஞானிகளின் சடங்குகளில் பங்குகொண்டு, தேவதூதர்களுக்கு விசேஷமரியாதை செய்யாதிருக்கும்படி பவுல் கொலோசெயர்களை எச்சரித்தார். மற்றவர்கள் இந்த அனுசரிப்புகளில் ஈடுபட்டிருக்கக் கூடும், ஆகிலும், ஒரு கூட்டத்தாரைப் பின்பற்றி போவதைக் காட்டிலும், கொலோசெயர்கள் இயேசுவுக்கு உண்மையாய்த் தரித்திருப்பது நலமாகக் கண்டது.

கிறிஸ்தவர்கள் சரியான வரை தேவனை, தொழுது கொள்வது மாத்திமல்ல, அவர்கள் தேவனை ஆவியோடும் உண்மையோடுங்கூட இயேசுவால் வெளிப்படுத்தப்பட்டபடி (சத்தியத்தின்படி) தொழுது கொள்ள

வேண்டும் (யோவான் 1:17; 4:23, 24; 8:31, 32). பவுல் கடிந்து கொண்ட தேவ தூதர்களின் ஆராதனை இந்த (மேற்குறித்த) இரண்டு மாதிரிகளில் எதையும் உட்படுத்தவில்லை.

### *“காணாதவைகளில் துணிவாய் நுழைந்து” (2:19இ)*

*அடுத்த எச்சரிக்கை* ***காணாதவைகளில் துணிவாய் நுழைந்து*** *செயல்படுகிற எந்த போதகருக்கும் சம்பந்தப்படுத்தப்படுகிறது. இந்த சொற்றொடரின் சரியான பொருள் உறுதியாகத் தெரியவில்லை. அது “தான் கண்டிராதவைகளில் தானாக தலையிடுவது” என்று மொழிபெயர்க்கப்பட்டது* (KJV; *காண்க* NKJV);[9] *“தான் காணுபவைகளில் துணிவாய் நிற்பது”* (RSV); *“காணுகிறவைகளில் வாசம் பண்ணுதல்”* (NRSV); *“தான் கண்டவைகளில் பெரிதான விளக்கத்தை அறிந்து கொள்ள முற்படுவது”* (NIV; *காண்க* TNIV); *“தங்களுடைய சொந்த தரிசனங்களில் நுழைய முற்படுவது”* (NEB); *மற்றும் “சில தரிசன உலகில் சஞ்சரிக்க முற்படுவது”* (REB). *பெரும்பாலான மொழிபெயர்ப்பாளர்கள் “அவன் கண்டவைகளில் பிரவேசித்து வாசம் பண்ணுவதையே” குறிப்பிடுகிறார்கள்.*

*“துணிவாய் ... நுழைந்து,” எனும் வார்த்தை (embateuō) புதிய ஏற்பாட்டில் இங்கு மட்டுமே காணப்படுகிறது, அதன் பொருள் “உள்ளே நுழைதல்.” இந்த வார்த்தைக்கு வியாக்கியானமாக பாயுயர் குறிப்பிடுகிறதாவது: “... நுணுக்கமாக விசாரித்து அறிதல், ஒன்றில் [ஒரு பொருள்] நுழைந்து நெருக்கமாக விசாரித்து அறிதல், விவரமாக அறிதல் ... , ஆகவே கொலோசெயர் 2:18ல் [அநேகமாக] ஒருவர் தான் தரிசனத்தில் கண்ட கதையின் மீது குறிப்பிட்ட எல்லை வரைக்கும் போதல் ... இப்படியாக பரலோக செய்தியாளர்களிடம் கொண்டு செல்லும் அணுகுமுறையை நியாயப்படுத்துதல்.”*[10]

*கிளேராஸிலுள்ள அப்பொல்லோவின் ஆலயத்தில் பொறிக்கப்பட்டிருந்த இரண்டாம் நூற்றாண்டில் தேதியிடப்பட்டிருந்த எழுத்துக்களை* William M. Ramsay *கண்டுபிடித்தார்.*[11] *அதில் கிரேக்க வார்த்தையான embateuō, என்பதும் சேர்க்கப்பட்டிருந்தது, அது மார்க்க அனுபவத்திற்குள் நுழைந்து இரகசிய சமய ஆராதனை செய்ததை குறிப்பிடுவதாயிருந்தது. இதுதான் வசனம் 18இ யின் சரியான அர்த்தமாயிருக்குமானால், பிறகு தரிசனங்களை சமய ஆராதனையின் அனுபவங்களை கைக்கொள்ளும்படி தவறாக நடத்தப்படுவதற்கு எதிராக பவுல் எச்சரித்தார். இது இன்று ஆவிகள் உலகில் தொடர்புடையோராய்ச் சொல்லி தங்களை ஆலோசனை வழங்குவோராய் எண்ணிக்கொண்டு, செத்தவர்களிடம் பேசுவதாகச் சொல்லி, அல்லது வருங்காலத்தை உய்த்து உணரும் திறன் படைத்ததோராய் பேசுபவர்களுக்கு எதிராகவும் இருக்கிறது.*

*மீதமுள்ள கேள்விகள் என்னவெனில் “இந்த தரிசனங்கள் எப்படி பெற்றுக்கொள்ளப்பட்டன?” மற்றும் “அவைகளை பெற்றது யார்?” ஒருவேளை பவுல் முன்பு சொல்லப்பட்ட சொற்றொடருடன் தொடர்புபடுத்தி, “தேவ தூதர்களுக்குச் செய்யும்” ஆராதனையை “தரிசனங்களாக” (காணாதவைகள்) என்று சொல்லியிருக்கலாம். அப்படியிருக்குமானால், வஞ்சிக்கிறவர்கள் தாங்கள் தங்களுடைய தரிசனங்களை தேவதூதர்கள் போன்ற வானுலக ஜீவிகளிடமிருந்து பெற்றதாகச் சொல்லிக்கொள்வதின் மேல் கொலோசெயர்*

*நம்பிக்கையை வைக்காதபடி அவர் எச்சரித்திருக்கலாம். வஞ்சிக்கிறவர்களாகிய இவர்கள் தங்களை ஆவிக்குரிய மேலாளர்களாக பாவித்துக் கொண்டிருந்தனர், ஏனெனில் அவர்கள் தங்களுக்குக் கிடைத்த தரிசனங்களால் பெருமை கொண்டிருந்தனர், ஆகிலும் அவர்கள் தங்களை போலியான தாழ்மையால் மூடிக்கொண்டனர், அப்படிப்பட்ட (மாயமான) தாழ்மையால் மற்றவர்கள் தங்களை ஆச்சரியமாக பார்ப்பார்கள் என்று நினைத்தனர், அவர்கள் மார்க்கரீதியில் மிகவும் ஆழமானபக்தியுள்ளவர்களைப் போல் பார்ப்பார்கள் என்றும் நினைத்தனர்.*

*அவர்கள் அப்படிப்பட்ட தரிசனங்களைப் பயன்படுத்தி மற்றவர்கள் பார்வையில் மட்டும் உயர்த்தப்படுவதற்காக செயல்படுவதில்லை, மாறாக அவர்கள் தங்களுடைய போதனைக்கு மதிப்பளிக்கும்படியாகவும் அப்படிச் செய்கின்றனர். மற்றவர்களுக்குள் நன்மதிப்பை ஏற்படுத்தும் பொருட்டு தங்களுடைய செய்திகள் தேவனிடத்திலிருந்து வந்ததாகக் கூறினர், அதினால் அவர்கள் மிக மேன்மையான, அதிகாரமிக்க அறிவைப் பெற்றிருப்பதாகக் கூறிக் கொள்கின்றனர். தங்களுடைய தரிசனத்தால் அவர்களை ஊடுருவிப் பார்க்கும் திறனைப் பெற்றிருப்பதாக தங்களையே பெருமைப்படுத்திக் கொண்டனர், அந்த வானுலக ரகசியங்களை மற்றவர்கள் பெற்றிருக்க வில்லை என்றனர்.*

*பொய்யான தரிசனங்கள் புதிதல்ல. எரேமியா இந்த பொய்யான தீர்க்கதரிசிகளைக் குறித்து தேவனிடத்திலிருந்து வந்த செய்தியாக பதிவு பண்ணியிருக்கிறார்: " ' சொப்பனங்கண்டேன், சொப்பனங் கண்டேன்' என்று என் நாமத்தைச் சொல்லிப் பொய்த்தீர்க்கதரிசனம் உரைக்கிற தீர்க்கதரிசிகள் சொல்லுகிறதைக் கேட்டேன்" (எரேமியா 23:25). அவர்கள் ஏதோ சிலதைக் கண்டதாகச் சொல்லிக் கொண்டாலும் உண்மையில் அவர்கள் எதையும் கண்டதில்லை.*

*பவுல் கண்ட பரலோகத்தரிசனம் இதிலிருந்து வித்தியாசப்பட்டது. அவர் மூன்றாம் வானம் வரைக்கும் எடுத்துக் கொள்ளப்பட்டு "வாக்குக்கெட்டாத வார்த்தைகளைக்" கேட்டார், அதை அவர் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள இயலவில்லை, ஏனெனில் அவர் அநேக வெளிப்பாடுகளைப் பெற்றிருந்தார், மேலும் பவுலின் மாம்சத்தில் ஒரு முள் கொடுக்கப்பட்டிருந்தது, அதினால் தனது அனுபவத்தைக் குறித்து அளவுக்கதிகமாக பெருமை பாராட்டாதபடிக்கு, அது சாத்தானிடத்திலிருந்து கொடுக்கப்பட்டிருந்தது (2 கொரிந்தியர் 12:1-7). தேவனுடைய செய்தியாளனின் இருதயம் தாழ்மையினால் நிரப்பப்பட்டிருப்பதற்குப் பதிலாக பெருமையால் நிரப்பப்பட்டிருக்கக் கூடாது ஏனென்றால் தேவனே அவன் மூலம் கிரியை செய்கிறார்.*

*ஒரு கேள்விக்கு அவ்வளவு சுலபமாக பதில் சொல்லிவிடமுடியாது; இந்த கள்ள போதகர்கள் உண்மையாகவே எதையாகிலும தரிசித்திருந்தால், அது பிரம்மையாக இருக்கலாமல்லவா, அல்லது தரிசனங்காணாமலேயே கண்டதாக பொய் சொல்லுகிறார்களா? அவர்கள் தரிசனங்கண்டிருந்தால், அவர்களுடைய அறிக்கையின்படி அவர்கள் கண்டது உண்மையாக இருக்கக் கூடும், ஆனால் அவர்களுடைய நடக்கையில் காண்பிக்கும் விதம் தேவனுடைய வெளிப்பாடாகப் பிரதிபலிப்பதில்லை. தங்களுடைய சொப்பனங்களைத்*

தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிற கள்ளத்தீர்க்கதரிசிகளைக் குறித்து எரேமியா "இவர்கள் தங்கள் இருதயத்தின் வஞ்சகத்தையே தீர்க்கதரிசனமான சொல்லுகிறார்கள்" என்று சொன்னார் (எரேமியா 23:25, 26).

இவைகளெல்லாம் பிரம்மைகளாகவோ, பொய்யான கண்டுணர்வுகளாகவோ இருக்குமானால், அது அவர்களை பலவந்தமாக உண்மையென உணரவைக்குமானால், பார்க்கிற ஜனங்களுக்கும் அது உண்மைபோல் தோற்றமளிக்கும். எப்படியிருப்பினும், அவைகள், தேவனிடத்திலிருந்து வந்த சத்தியமாக இராது, இந்த நபர்கள் தரிசனங்களைக் கண்டதாக பொய்சொல்லுவார்களானால், பிறகு அவர்கள் அவைகளை தேவனிடத்திலிருந்து வந்த உண்மையான செய்தி என விளக்கமளிப்பர், அதன் மூலம் தங்களை உயர்த்திக்கொண்டு தங்களைப் பின்பற்றுவோரை கவர்ச்சிக்கும்படி அப்படிச் செய்கின்றனர். அது உண்மையோ பொய்யோ, யூகிக்கப்பட்ட தரிசனங்கள் தேவனிடத்திலிருந்து வருபவையல்ல. இந்தப் போதனைகளுக்கு தேவன் மூலாதாரம் அல்ல, மேலும் கொலோசெயர்கள் அவைகளால் தவறாக நடத்தப்பட்டுவிடக் கூடாது.

அடுத்தடுத்து வந்த நூற்றாண்டுகளில் தங்களுடைய கற்பனைதரிசனங்களை அடிப்படையாகக் கொண்டு புதிய சமயங்களைக் கூட ஸ்தாபித்துள்ளனர்: முகம்மது நபிகள்; மார்மன் சபையை ஸ்தாபித்த ஜோசப் ஸ்மித்; ஏழாம் நாள் ஆசரிப்புக் கூட்டத்தை ஸ்தாபித்த Ellen G. White, அம்மையார்; இப்படி இன்னும் அநேகர் அவர்களுடைய தரிசனங்களில் சிலர் தேவனுடனோ இயேசுவுடனே அல்லது தேவ தூதர்களுடனோ பேசினதாகக் கூறுவர் இயேசு எல்லாருக்கும் பின்பு "கடைசியாக" தனக்குத் தரிசனமானதாக பவுல் உறுதிப்படச் சொல்வதால், இயேசுவின் உண்மையான தோற்றம் (காட்சி) இனியும் இடம் பெறுவதில்லை[12] (1 கொரிந்தியர் 15:8). அவர் மறுபடியும் வரும் கடைசி நாள் வரைக்கும் அப்படி நடக்கப் போவதில்லை.

ஜோசியம் சொல்லுகிறவர்களும் அந்தரங்க சமயங்களிலுள்ள வேறு சிலரும் தங்களுக்கும் உலகவழக்கிற்கு அப்பாற்பட்ட தரிசனம் கிடைப்பதாக கூறுகின்றனர். கிறிஸ்தவர்கள் அனைத்துப்போதனைகளையும் புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்டுள்ள சத்தியத்தின் அடிப்படையில் சோதித்தறிய வேண்டும் (காண்க 1 யோவான் 4:1, 6). இப்படிச் செய்வதால் நாம் தரிசனங்கள் மற்றும் வெளிப்பாடுகள் என்றழைக்கப்படுகிறவைகளினாலே கொள்ளை போவதை தவிர்க்கக்கூடும். ஒரு போதகன் சத்தியத்தை போதிக்கிறானா அல்லது தவறைப் போதிக்கிறானா என அறிந்து கொள்ளக் கூடும்.

### *"தன் மாம்ச சிந்தையில் வீணாய் இறுமாப்புக் கொண்டிருக்கிற எவனும்" (2:19இ)*

சில கள்ளப் போதகர்கள் மாயமான தாழ்மையில் பாசாங்கு செய்து கொண்டிருக்கும் போது, வேறு சிலர் **இறுமாப்பு** (*phusioō*) கொண்டவர்களாய், போலியான தற்பெருமை கொண்டவர்களாயிருந்தனர். நிகழ்கால கிரேக்க பெயர் எச்சவினையில் இது ஒரு தொடர் நிலையாகக் குறிப்பிடப்படுகிறது, அவர்கள் பெருமையையே தங்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர். பெருமை கொண்டவர்கள் இறுமாப்பினால் நிரப்பப்பட்டிருப்பதால் தங்களையே குறித்து அப்படியொரு உயர்ந்த எண்ணம் கொள்ளத்

தேவையில்லை. பிற இடங்களில், பவுல் போலியான தற்பெருமை எனும் பொருளில் கொரிந்தியர்களுக்கு எழுதும்போது மட்டுமே பயன்படுத்துகிறார். (காண்க 1 கொரிந்தியர் 4:6, 18, 19; 5:2; 8:1; 13:4.) "அறிவு இறுமாப்பை [*phusioi*, பெருமையில் மேட்டிமை] கொண்டு வரும் ஆனால் அன்பு பக்தி விருத்தியை உண்டாக்கும்" (1 கொரிந்தியர் 8:1ஆ).

தரிசனங்கண்டோம் என்று சொல்லித் திரிவோர் ஆதாரமற்ற மதிப்பையும் கௌவரத்தையும் கொண்டுள்ளனர், அதினால் இயேசுவின் போதனைக்கு மேல் அவர்களுடைய போதனைகளை ஏற்றுக் கொள்ளச் செய்கின்றனர். இயேசு புறம் தள்ளப்பட்டு கள்ளப்போதகர்களின் போதனையைப் பின்பற்றிப்போவதைக் குறித்து அக்கறையில் அதற்கு எதிராக பவுல் எச்சரிப்பின் குரலெழுப்பினார். கொலோசெயர்களை ஊக்கப்படுத்துவதற்குப் பதிலாக, இந்த தரிசனங்கள் அவர்களைத் தரித்திராக்கும். கள்ளப் போதகர்கள் உண்மையான ஞானம் அறிவு ஆகிய பொக்கிஷங்களின் மூலாதாரத்திலிருந்து அவர்களை அப்புறப்படுத்துவதையே மனதில் கொண்டிருந்தனர் (2:3) மேலும் மனிதக் கண்டு பிடிப்புகளின் பிரயோஜனமற்ற கருத்துக்களுக்கு நடத்துவர். உண்மையான ஆவிக்குரிய வளர்ச்சி மனிதனுடைய மனதின்படி கண்டுபிடிக்கப்பட்ட வழிகளில் வருவதில்லை. இயேசுவிடமிருந்து மட்டுமே வருவதால் அவர்கள் நஷ்டத்தை சந்திக்க வேண்டியதாகும் (எரேமியா 10:23).

இந்த வசனத்திலுள்ள முரண்பாடே இதற்கு சாட்சி. மாய்மாலமாக சுய தாழ்மையை வெளிக்காட்டிக் கொண்டிருந்த ஜனங்கள் உள்ளுக்குள்ளாக மனமேட்டிமையைக் கொண்டிருந்ததற்கு எதிராக பவுல் எச்சரிக்கிறார். அவர்கள் பொய்யான தரிசனத்தைக் கொண்டிருந்தபடியால் அவர்களுடைய மனதில் இருந்த இறுமாப்பு அப்படியொரு மனமேட்டிமையைக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. இது அவர்களை கண்டுபிடிக்க இயலாத சுய-மதிப்பீட்டை செய்யவும் அநியாயமான பெருமை கொள்ளவும் செய்தது.

இன்னொரு புறம் பார்த்தால், கிறிஸ்தவர்கள், இயேசு மூலம் அவர்கள் பெற்றுக் கொண்டதில் உறுதியான நம்பிக்கைப் பெற்றுக் கொள்ள இயலும். பவுல் எழுதினதாவது,

> மாம்சத்திற்கேற்ற ஞானத்தோடே நடவாமல், தேவனுடைய கிருபையினால் நாங்கள் உலகத்திலேயும், விசேஷமாக உங்களிடத்திலேயும், கபடமில்லாமல் திவ்விய உண்மையோடே நடந்தோமென்று, எங்கள் மனது எங்களுக்குச் சொல்லுஞ்சாட்சியே எங்கள் புகழ்ச்சியாயிருக்கிறது (2 கொரிந்தியர் 1:12).

கிறிஸ்தவர்கள் வெட்கப்படாதிருந்து, இயேசு தம்மைப்பின்பற்றி வருவோருக்கு ஒழுங்கு செய்துள்ள வாழ்க்கையைக் குறித்து பெருமை கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட பெருமை நியாயப்படுத்தப்பட வேண்டிய ஒன்று, ஏனெனில் அது ஒரு தனி நபரின் சுய சாதனையாகவும் திறமையாகவும் கொள்ளாமல் இயேசுவின் ஊழியத்தின் மேலும் தேவனுடைய கிருபையின் மேலும் வைக்கப்பட்டுள்ளது. கிறிஸ்துவைப் பின்பற்றிபோவோர் "எவனானாலும் தன்னைக் குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமலிருக்கும்படி" அறிவுறுத்தப்பட்டனர் (ரோமர் 12:3ஆ).

ஆவிக்குரிய மனமுடைய கிறிஸ்தவர்கள் அர்த்தமற்ற பெருமைக்கு

நீங்கலாயிருக்க வேண்டும். மாம்சத்திற்குரிய மனமுடையவர்களின் குணாதிசயம் Eduard Schweizer சரியாக மாம்சத்தைப் போல தீமையானது எதுவுமில்லை என்றார்.[13] மனித மாம்சம் தன்னில் தான் நல்லதுமில்லை தீமையுமில்லாதது. கொலோசெயிலிருந்தவர்கள் தேவ வெளிப்படுத்தலைச் சார்ந்திராமல் மனித ஞானத்தை மட்டுமே சார்ந்திருந்தனர் என்பதால் அவர்களுடைய பிரச்சனைகளை பவுல் எழுதினார். கொரிந்தியர்களுக்கு அவர் எழுதின நிருபத்தில், பயனற்ற மனித ஞானத்தின் மூலம் தேவனுடைய மனதை அறியத்தக்க திராணியைப் பெறுவதைக் குறித்து காட்டுகிறார் (1 கொரிந்தியர் 1:20, 21), அவருடைய விசேஷித்த வெளிப்படுத்தல் மூலமாக மட்டுமே தேவனுடைய மனதை அறிய முடியும் (1 கொரிந்தியர் 2:10-16).

**மாம்ச சிந்தையினாலே** *(ho nous tēs sarkos autou* நேரடிப் பொருளில், "அவனுடைய மாம்சத்தின் சிந்தையினால்") என்பது ஆங்கில வேத மொழிபெயர்ப்புக்களான NASB, KJV, மற்றும் NKJV ஆகியவைகளில் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த சொற்றொடர் "புலன் உணர்வு சார்ந்த மனம்" (RSV), "மனுஷீக சிந்தனை" (NRSV), "உலகப்பிரகாரமான சிந்தனைகள்" (NEB), மற்றும் "ஆவிக்குரியத்தன்மையற்ற மனம்" (NIV; காண்க TNIV) என்றெல்லாம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

பவுல் தெய்வீக வெளிப்படுத்தலுக்கு எதிராக உலகப்பிரகாரமான சிந்தையால் கண்டுபிடிக்கப்பட்ட மதங்களை அர்த்தப்படுத்தினார். தேவனுடைய வசனத்தின் மேல் இல்லாமல், மனித யூகங்களால் உலகக் கண்ணோட்டத்தை தீர்மானிக்கும், மனித புத்திக் கூர்மையை சார்ந்திருப்பவர்களைப் பற்றி அவர் நினைத்துக் கொண்டிருந்தார். தேவனுடைய வசனமாகிய வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்ட உள்நோக்கைக் காணமல், சிலர் தங்கள் சொந்த கருத்தை சார்ந்திருப்பதற்கு அறிவுக்கடுத்த தற்பெருமையே காரணமாக இருக்கிறது.

### "உங்கள் பந்தயப் பொருளை நீங்கள் இழந்து போகும்படி ஒருவனும் உங்களை வஞ்சியாதிருக்கப்பாருங்கள்" 2:19அ)

பவுல் கொலோசெயர்களிடம் "ஒருவனும் நயவசனிப்பினாலே அவர்களை வஞ்சியாதபடிக்கும்" (2:4), "கொள்ளை கொண்டு போகாதபடிக்கும்" (2:8), "ஒருவனும் குற்றப்படுத்தாதபடிக்கும்" (2:16) எச்சரிக்கையாயிருக்கும்படி சொன்னார். பின்பு அவர், **ஒருவனும் உங்களை வஞ்சியாதிருக்கப்பாருங்கள்** என்று சொன்னார் … இது தொடர்ந்து செயல்படும்படிக்குக் கொடுக்கப்பட்ட ஒரு கட்டளை இயேசுவால் அளிக்கப்பட்ட நன்மைகளை கள்ளப்போதனைகள் தொடர்ந்து கொள்ளையிட விடாதபடி அப்போஸ்தலன் சகோதரர்களுக்கு கட்டளையிட்டார்.

இயேசு கொண்டு வந்த நிஜங்களிலிருந்து கொலோசெயர்கள் மயக்கப்பட்டு இழுப்புண்டு போக ஏதுவாக, கள்ளப்போதகர்கள் "வஞ்சித்து" அவர்கள் தங்கள் **பந்தயப் பொருளை** இழந்துபோகச் செய்யக்கூடும். "வஞ்சித்தல்" *(katabrabeuō)* எனும் வார்த்தை புதிய ஏற்பாட்டில் இங்கு மட்டுமே காணுகிறது. ஆகையால், இந்த வினைச் சொல்லின் பொதுவான பயன்பாடு அந்த நேரத்திலிருந்த பிற இலக்கியங்களில் காணப்பட்டிருக்க

வேண்டும். எதிர்மறைப் பொருளில், "எதிராகத் தீர்மானம் எடுத்தல்" என்று அது சொல்லப்படுகிறது, ஒருவர் தனக்கான வெகுமதியைப் பெறாதபடி விளையாட்டுப் போட்டியின் நடுவர் விலக்கிவைப்பது போன்றது. பவுல் அநேகமாக கிரேக்க விளையாட்டுப் போட்டிகளுடன் ஒப்பிட்டு பேசியிருக்கக் கூடும். ஒட்டப்பந்தயவீரர் ஒருவர் ஒரு பந்தயத்தில் வெற்றிபெற்றும் நியாயமற்ற நடுவரால் தகுதியிழப்பைப் பெறவும் அல்லது தான் ஜெயிப்பதற்கு ஏதுவான பிரயாசங்களை எடுத்தும் தான் போட்டியில் பங்கேற்க சட்ட ரீதியான தகுதி பெற்றிருக்க வில்லை என்று கண்டு பிடிக்கக்கூடும். இதில் எந்த ஒன்றாலும், அவர் பந்தயப்பொருளை பெற இயலாமல் போகக் கூடும்.

பவுல் சகோதரர்களை எச்சரித்து மாயையான தாழ்மையினால் இயேசுவை விட்டு அவர்கள் கொள்ளை கொண்டு போகப்படாதபடி எச்சரித்தார். அவர்கள் இயேசுவுக்குப் பதிலாக தேவ தூதர்களை தொழுதுகொள்ள துவங்கினால், அவர்களுடைய பந்தயப்பொருள் கொள்ளை போகக் கூடும். இந்தப் "பந்தயப் பொருள்" இரட்சிப்பையும், பரலோகத்திலுள்ள நித்திய ஜீவனையும், கிறிஸ்துவுக்குள் காணும் ஆவிக்குரிய ஜீவியத்தையும் உட்படுத்தியது. "ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு" எனும் சொல் வசனம் 16க்கு ஒத்தது. கொலோசெயர்கள் இயேசுவை விட்டு *யாராலும்* அல்லது *யாரிடத்திலும்* போய்விடக் கூடாது என்று விரும்பினார். அவர்கள் ஏற்கனவே நிஜமாகிய சத்தியத்தை, பெற்றுக் கொண்டு இருப்பதால் அவர்கள் கள்ளப் போதகர்களைப் பின்பற்றியோ அல்லது நிஜத்தின் பிரயோஜனமற்ற நிழலாலோ கொள்ளை போய்விடக் கூடாது. அப்படி இதை அவர்கள் அனுமதிப்பார்களானால் சத்தியத்தின் இடத்தில் கள்ளப் போதகத்துக்கும் பொருளுக்குப் பதில் நிழலுக்கும் இடமளித்ததாகி விடும். இப்படியாக அவர்கள் நிஜத்தை விட்டு கொள்ளை போனவர்களாவார்கள்.

பவுலின் அறிவுரைகள் எல்லா ஜனங்களுக்கும் சுய தெரிவு செய்யும் உரிமையுண்டு என்றும் அவர்கள் தேவனுடைய கரங்களில் பிணையமாக்கப்பட்டவர்களல்ல. என்றும் சுட்டிக் காட்டுகின்றன. அப்படியில்லாதிருந்தால், அவருடைய எச்சரிக்கை மதிப்பற்றதாகி விடும். அவர்கள் தங்கள் பந்தையப்பொருளை இழந்து விடாதபடி கொடுக்கப்பட்ட எச்சரிக்கையின் மூலம், அவர்களுக்கு தெரிவு செய்து கொள்ளும் சந்தர்ப்பம் உண்டு என்பதை காட்டினார். கள்ளப் போதகர்கள் தங்களை மேற்கொள்ள அனுமதிப்பதோ அனுமதிக்காமலிருக்கவோ உரிமையுண்டு.

அவர்கள் இயேசுவிடமிருந்து பிரிக்கப்பட்டு வேறு உபதேசங்களுக்கோ ஆசரிப்புகளுக்கோ கொள்ளையாய் கொண்டு போகாதபடிக்கு பவுல் ஆறு எதிர்மறை எச்சரிப்பு வாக்கியங்களைக் குறிப்பிட்டார். அதில் நான்கு எச்சரிப்புகள் 2:18, 19ல் கொடுக்கப்பட்டுள்ளன, பிறகு "நம்மோடு அழிந்து போகும் பொருள்களைக்" குறித்துப் பேசுகிறார் (2:22), மேலும் "சரீர ஒடுக்கம் ... மாம்சத்தை பேணுவதற்கு" மட்டும் உதவும் காரியங்களைப் பேசுகிறார் (2:23).

நேர்மறைப் பகுதியில் பல்வேறு வார்த்தைகளால், பவுல் சகோதரர்கள் இயேசுவைப் பின் பற்றவும் அவருக்கு உண்மையாய்த் தரித்திருக்கவேண்டிய அவசியத்தையும் குறிப்பிடுகிறார்:

- *"இருளின் அதிகாரத்தினின்று அவர் நம்மை விடுதலையாக்கினார்" (1:13).*
- *"அவர் தேவனுடைய தற்சுரூபமாயிருக்கிறார்" (1:15அ).*
- *"சகல சிருஷ்டிப்புக்கும் அவர் முந்தின பேறுமானவர்" (1:15ஆ).*
- *"சகலமும் அவரால் சிருஷ்டிக்கப்பட்டன" (1:16).*
- *"அவர் எல்லாவற்றுக்கும் முந்தினவர்" (1:17அ).*
- *"எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது" (1:17ஆ).*
- *"அவரே ... சரீரத்துக்குத் தலையாயிருக்கிறார்" (1:18அ).*
- *"அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்" (1:18இ).*
- *"எல்லாவற்றிலும் முதல்வராயிருப்பார்" (1:18ஆ).*
- *"சகல பரிபூரணமும் அவருக்குள் (வாசமா) யிருக்கிறது" (1:19).*
- *"அவர் உங்களை ஒப்புரவாக்கியிருக்கிறார்" (1:20).*
- *"அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லம் அடங்கியிருக்கிறது" (2:3).*
- *"தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் அவருக்குள் வாசமாயிருக்கிறது" (2:9).*
- *"அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறர்கள்" (2:10).*
- *"விருத்தசேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள்" (2:11).*
- *"... கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து" (2:14).*
- *"துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்து கொண்டார்" (2:15).*
- *"நீங்கள் கிறிஸ்துவுடனே கூட மரித்தீர்கள்" (2:20).*

## கிறிஸ்துவுடனே கூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்தல் (2:20-23)

***[20]நீங்கள் கிறிஸ்துவுடனேகூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்ததுண்டானால், இன்னும் உலக வழக்கத்தின்படி பிழைக்கிறவர்கள் போல, [21]மனுஷருடைய கற்பனைகளின்படியும் போதனைகளின்படியும் நடந்து: தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே என்கிற கட்டளைகளுக்கு உட்படுகிறதென்ன? [22]இவையெல்லாம் அநுபவிக்கிறதினால் அழிந்து போகுமே. [23]இப்படிப்பட்ட போதனைகள் சுய இஷ்டமான ஆராதனையையும், மாயமான தாழ்மையையும், சரீர ஒடுக்கத்தையும் பற்றிய ஞானமென்கிற பேர்கொண்டிருந்தாலும், இவைகள் மாம்சத்தைப் பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றுக்கும் பிரயோஜனப்படாது.***

*வசனம் 18, 19ல் பவுல் கள்ளப்போதகங்கள் கொலோசெயர்களை கிறிஸ்துவினிடமிருந்து பிரித்து விடக்கூடும் என்று வலியுறுத்தினார். சகோதரர்கள் அப்படி நடக்க விடாமல் இருக்க எச்சரிப்பதற்கு முன், கிறிஸ்துவின் மேன்மையையும் அதிகாரத்தையும் உறுதிப்படுத்தி அவர், தேவனுடைய தற்சுரூபமும், சிருஷ்டிகரும், சபை உட்பட எல்லாவற்றிற்கும் தலையாயிருக்கிறார், தேவனோடு ஒப்புரவாக்குதலுக்கு*

*அடிப்படையாயுமிருக்கிறார் என்றார் (1:15-20). அவருக்குள் ஞானம் அறிவு ஆகிய அனைத்தும் அடங்கியிருக்கிறது, தேவத்துவத்தின் பரிபூரணம் வாசமாயிருக்கிறது, பரிபூரணமாக்கப்படுவதற்குரிய வாய்ப்பும் அவருக்குள் நிறைவாயிருக்கிறது. கொலோசெயிலிருந்த கிறிஸ்தவர்கள் தங்களுடைய பாவ இச்சைகளை களைந்து போட்டுள்ளனர் மற்றும் அவர்களுடைய சகல பாவங்களும் அவருக்குள் மன்னிக்கப்பட்டன (2:3-13).*

*இக்காரணங்களால் கொலோசெயர்கள் இயேசுவிலே நிலைத்திருந்து அவரை மாத்திரம் பின்பற்றவும் வேண்டியவர்களாயிருந்தனர். கள்ள உபதேசங்களை தவிர்க்க வேறு காரணங்களையும் பவுல் கொடுத்தார்:*

*(1) நியாயப்பிரமாணம் நடுவிலிராதபடிக்கு எடுக்கப்பட்டு சிலுவையிலே ஆணியடிக்கப்பட்டிருந்தது (2:14). அது விடுதலையைக் கொடுக்கவில்லை, மாறாக அதன் கீழிருந்தவர்களை அடிமைத்தனத்துக்குள்ளாக்கியது. அது ஜீவனைக் கொடுக்கமுடியவில்லை, மாறாக மரணத்தைக் கொண்டு வந்தது.*

*(2) யூத மத தொழுகையானாலும், அஞ்ஞான மதத் தொழுகையானாலும், விடுதலையையோ ஆவிக்குரிய வளர்ச்சியையோ கொடுக்க இயலவில்லை. அவைகளில் ஈடுபட்டிருந்தவர்களை அது அடிமையாகமாத்திரம் செய்தது (2:8). அப்படிப்பட்ட ஆசரிப்புளைச் செய்தவர்களை அது அவர்களுடைய பந்தயப்பொருளை இழக்கச் செய்தது.*

*இந்த உண்மைகள் வசனம் 20-23ல் பவுல் தனது போதனையைக் கொடுக்க பின்னணியைக் கொடுத்து ஏதுவாக்கியது. இங்கே, சரீர இச்சைகளைக் கட்டுப்படுத்த உலகம் கொடுக்கும் விதிமுறைக்கட்டுப்பாடுகள் மாம்சம் விரும்பும் சுதந்தரத்தை கொடுக்க இயலவில்லை என்பதை வலியுறுத்துகிறார். மாறாக, உலகத்தின் கொள்கைகள் அவைகளை அடிமைகளாக மட்டுமே வைத்தது. கொலோசெயர்கள் கிறிஸ்துவுடனே கூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்தவர்களாயிருந்தனர். பவுல் ஒப்பிடும் சட்டங்கள் உண்மையான மதிப்பில்லாதவை ஏனெனில் அவை அழியும் தன்மையுடையவை.*

*கிறிஸ்துவைப் பற்றிக் கொண்டிருந்தால் அதுவே உண்மையான சுதந்திரமும் சுயக்கட்டுப்பாட்டையும் அளிக்கும் வழி, அது ஆவிக்குரிய வளர்ச்சியை அடையவும், கிறிஸ்தவ சுயாதீனத்தை பெறவும், பரலோகத்தில் வாசம் பண்ணும் சிலாக்கியத்தைப் பெறவும் செய்யும். ஜீவியத்திற்கான வேறு எந்த அணுகுமுறையும் இயேசு அருளிச் செய்கிறதை கொடுக்க முடியாது.*

***"நீங்கள் கிறிஸ்துவுடனே கூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்ததுண்டானால்" (2:20அ)***

*கொலோசெயர் கிறிஸ்துவுடனே கூட மரித்திருந்தார்கள். பழைய வாழ்வுமுறை முடிவுக்கு வந்திருக்க வேண்டும், அதினால் அவர்களுடைய புதிய வாழ்வு முறை கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கக் கூடும். ஒரு உருவகப் பொருளில், அவர்கள் அவருடைய மரணத்தையும் அவருடைய மரணத்தின் நோக்கத்தையும் பகிர்ந்து கொண்டனர் - அது பாவத்திலிருந்து விடுதலை. அவர்கள் பாவம் நிறைந்த உலகக் காரியங்களிலிருந்து தப்பித்துக் கொண்டிருக்க வேண்டும், ஆகையால் உலகத்துக்காக வாழாமல் இயேசுவுக்காக வாழ வேண்டும்.*

ரோமர் 6:3ல் பவுல் ஞானஸ்நானத்தை கிறிஸ்துவின் மரணத்துடன் இணைத்து, ஞானஸ்நானம் ஜனங்களை இயேசுவின் மரணத்துக்குள்ளாக்குகிறது என்று எழுதினார். அவரே தொடர்ந்து, "ஞானஸ்நானத்திலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம் ... நாம் இனி பாவத்துக்கு ஊழியஞ்செய்யாத படிக்கு, ... அவரோடே கூட சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்" என்று சொன்னார் (ரோமர் 6:4-6). அதே கருத்தை வெளிப்படுத்தும்படி தான் கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டதாகக் குறிப்பிட்டார் (கலாத்தியர் 2:20). இது மிகப் பெரிதாக அவருடைய வாழ்க்கையை பாதித்தது, ஏனெனில் அவர், "இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" என்று எழுதினார். "மரித்தார்கள்" என்று கொலோசெயர் 2:20ல் குறிப்பிடும் பதம் இறந்த காலமுற்று வினையாக மொழிபெயர்க்கப்பட்டது. அதன் குறிப்பு கிறிஸ்துவுடனே கூட அனுபவப்பட்ட மரணம் முற்றுப் பெற்றதாக கடைசியானதாகக் காட்டுகிறது. கலாத்தியர் 2:20ல் பவுல் ஒரு எச்ச வினை வடிவமாக்கப் பயன்படுத்துகிறார் அதன் பொருள் கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டார், மேலும் தொடர்ந்து கிறிஸ்துவுடனே கூட அறையப்பட்ட நிலையிலேயே தரித்திருப்பார் என்பதாகும்.

கிறிஸ்தவர்கள் இனியும் பாவத்துக்கு அடிமைகளாயிருக்கக்கூடாது என்று பவுல் போதித்தார் (ரோமர் 6:1-7). ஞானஸ்நானத்திலே இயேசுவின் மரணத்தைப் பகிர்ந்து கொண்டவர்கள், பாவத்துக்கு மரித்தவர்களாவார்கள், கொலோசெயர்கள் பாவத்தின் ஆதிக்கத்திலிருந்து ஒரு புதிய வகை வாழ்க்கையை வாழ ஏதுவாக விடுதலையாக்கப்பட்டார்கள். வசனம் 20ல் அவர்களுக்கு பவுல் நினைப்பூட்டி கிறிஸ்துவுடனே கூட அவர்கள் மரித்தது **உலகத்தின் வழிபாடுகளுக்கு** மரித்ததாக முடிவு செய்ய வேண்டும் என்றார்.

உலகத்தின் சட்டங்களில் ஜீவன் காணப்படுவதில்லை. கொலோசெயர்கள் உலகத்தின் வழிபாடுகளுக்காக மரித்ததன் மூலம் கொலோசெயர்கள் அவைகளுக்குத் தப்பித்துக் கொண்டார்கள். அவர்களுடைய முந்தின வாழ்க்கையிலே, அவர்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஜீவனுக்கு மரித்திருந்து, உலகத்துக்குப் பிழைத்திருந்தார்கள்; அவர்களின் தற்போதைய வாழ்க்கையில், அவர்கள் உலகத்துக்கு மரித்து ஆனால் கிறிஸ்துவுக்குப் பிழைத்திருக்கிறார்கள். அவர்கள் உலகத்தின் கட்டங்களுக்கு மரித்தவர்களானார்கள், எனவே இனியும் அவைகளால் அவர்கள் வாழ்வதில்லை.

(மரித்தது உண்டா) **னால்** என்பதன் பயன்பாடு அவர்களுடைய கிறிஸ்துவுடனான மரணத்தை சந்தேகப்படுவதல்ல: "'நீங்கள் மரித்தது உண்டா ... னால்' (RSV), என்பது கிரேக்க மொழியில் ஒரு நிபந்தனை எழுவாய் பயனிலை உருபு, அது சொல்லணி இலக்கண வகையைச் சார்ந்தது, எனவே எந்த சந்தேகத்தையும் அது எழுப்புவதில்லை; ஒரு உண்மையைக் குறிப்பிடுவதற்காக சொல்லும் விதம் இது, அதிலிருந்து குறிப்பிட்ட முடிவுக்கு வரக் கூடும்."[14]

அவர்கள் "கிறிஸ்துவுடனே கூட," மரித்திருந்தாலும் மரியாதிருந்தாலும் அது குறித்து கேள்வி எழுப்புவற்குப் பதிலாக, கிறிஸ்துவின் மரணத்தில் பங்குடையவர்களாகும் போது ஏற்படும் விளைவை பவுல் காட்டுகிறது, ஞானஸ்நானத்திலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டு எழுப்பப்

பட்டபோது அவர்களுடைய வாழ்க்கையின் அணுகுமுறையில் ஒரு மாற்றம் இடம்பெற வேண்டும் (வசனம் 12). அதன் விளைவு தான் "உலகத்தின் வழிபாடுகளுக்காக" மரித்தல், அது கிறிஸ்துவுக்குள் புதிய வாழ்வை தொடரச் செய்யவேண்டும்.

"உலகத்தின் வழிபாடுகள்" *(stoicheiōn tou kosmou)* இனியும் கொலோசெயர்களை கட்டுப்படுத்துவதில்லை என்று அவர்கள் புரிந்து கொள்ள வேண்டுமென பவுல் விரும்பினார் (காண்க 2:8ஈ பகுதியின் விவாதம்). கிறிஸ்துவின் மரணம் மற்றும் அடக்கம் பண்ணப்படுதலில் பங்கேற்றபோது கொலோசெயர்கள் அந்த வழிபாடுகளுக்கு மரித்திருந்தார்கள். உலகத் தத்துவங்களுக்கு மரித்தவர்களாதலால், இந்த சகோதரர்கள் அவர்கள் இயேசுவோடு கொண்டிருக்கும் நட்புறவில் அவர்களால் பயனடையக்கூடும் என்பது போல் இனியும் அவைகளுக்குத் தங்களை ஒப்புக் கொடுக்கக் கூடாது.

**"இன்னும் உலக வழக்கத்தின்படி ஜீவிக்கிறவர்கள் போல ... என்கிற கட்டளைகளுக்கு உட்படுகிறதென்ன?" (2:20ஆ, 21இ)**

அப்போஸ்தலர்களைக்குறித்து இயேசு குறிப்பிடுகையில் "நீங்கள் உலகத்தாராயிராத படியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும்" என்றார் (யோவான் 15:19ஆ). பிதாவிடத்தில் தமது ஜெபத்தின்போது, அவர், "இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள் ..." என்றும் (யோவான் 17:11ஆ); "... அவர்களும் உலகத்தார்களல்ல" என்றும் சொன்னார் (யோவான் 17:14, 16). உலகத்தில் வாழ்ந்து கொண்டே உலகத்துக்கு ஒத்த வேஷம் தரிக்காமல் வாழ்வது தான் கிறிஸ்தவனின் இலக்கு (ரோமர் 12:2).

நாம் உலகத்தின் பாவத்துக்கு உட்படுத்தும் சோதனைகளோடுகூட, இந்த உலகத்தில் வாழ்கிறோம், ஆகிலும் அதிலே பங்குடையவர்களல்ல என்பதை நாம் உணர வேண்டும். நாம் **உலகத்தில் வாழ்வதிலிருந்து** தப்பித்துக் கொள்ள இயலாமற்போனாலும், நாம் உலகத்தை நமது வாழ்க்கையிலிருந்து அப்புறப்படுத்த முடியும். உலகத்தில் நாம் "வாழ்ந்து" *(zōntes,* "தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் போது") உலகத்தைக் கட்டுப்படுத்தும் அதே கொள்கைகளால் நடத்தப்பட்டு விடக் கூடாது.

பவுல் "உலகத்தை" *(kosmos)* ஒரு பூகோள ரீதியான பகுதியாக 1:6ல் சொல்லுகிறார். இந்த வசனப்பகுதியில் பவுல் அதே வார்த்தையை பயன்படுத்தி கொலோசெயர்கள் வாழ்ந்து கொண்டிருந்த சமுதாயத்தை பொருள்படுத்தினார்.

நீங்கள் **கட்டளைகளுக்கு உட்படுகிறதென்ன** எனும் சொற்றொடர் *dogmatizesthe* ஒரு தனி கிரேக்க வார்த்தையின் மொழிபெயர்ப்பாகும். இந்த வினைச்சொல் *dogmata,* வின் ஒத்த பண்புடைய பெயர்ச்சொல் ("கட்டளைகள்" என்று) 2:14ல் சொல்லப்படுகிறது. இந்த இரண்டு வார்த்தைகளும் ஒரே மூல காரணியின் மேல் கட்டப்பட்டிருந்த போதிலும், வசனம் 20ஆவில் குறிப்பிடுகிற அதே கட்டளைகளல்ல. 2:14ல் பவுல் தேவன் மோசே மூலம் கொடுத்த நியாயப்பிரமாண சட்டதிட்டங்களைக் குறிப்பிடுகிறார். வசனம் 20ஆவில் கட்டளைகளையோ அல்லது உலகத்தாரின் மனதில் தோன்றின கட்டளைகளேயோ குறிப்பிடுகிறார்.

தேவனுடைய பிரமாணத்தை விட்டுப் பின் வாங்கிப் போவோர்

*சுதந்திரம் (அல்லது சுயாதீனம்) எனும் பெயரில் இப்படிச் செய்வதுண்டு; அவருடைய பிரமாணங்களெல்லாம் கெடுபிடியானவை என்று நினைக்கின்றனர். சுயாதீனத்திற்கான விதிகள் என்று அவர்கள் நினைப்பவை உண்மையான சுயாதீனத்தைக் கொண்டு வருவதில்லை; மாறாக உண்மையில் அது அவர்களை அடிமைப்படுத்துகிறது (2 பேதுரு 2:19; மேலும் காண்க யோவான் 8:34; ரோமர் 6:16). சந்தோஷத்திற்கு நல்ல சட்டங்கள் அவசியமானவை. சட்டங்களே இல்லாமற்போனால் அது ஆவிக்குரிய மற்றும் மாமிசப்பிரகாரமான அடிமைத்தனத்தைக் கொண்டு வரும். போக்குவரத்துச் சட்டமில்லாத ஒரு பெரிய நகரத்தினூடே வண்டி ஓட்ட முயற்சிப்பது எப்படியிருக்கும் என கற்பனை பண்ணிப் பாருங்கள். விபத்துக்கள் தவிர்க்க இயலாததாகி, போக்குவரத்து ஸ்தம்பித்து நிற்கும். இயேசுவின் உபதேசங்கள் மட்டுமே நம்மை உலக இச்சைகளிலிருந்து நாம் மேற்கொள்ளச் செய்யும் பாவத்தை ஜெயிக்கவும் ஆவிக்குரிய சுயாதீனத்தை பெறவும் செய்யும்.*

***"மனுஷருடைய கற்பனைகளின்படியும் போதனைகளின்படியும் நடந்து" (2:21அ)***

*இந்தச் சொற்றொடரில் பவுல் முன்பு குறிப்பிட்ட கட்டளைகளின்படி நடவாதிருக்க இரண்டாவது காரணம் கொடுக்கப்படுகிறது: அப்படிப்பட்ட கட்டளைகள் மனுஷர்களிடமிருந்து தோன்றி அவர்களுடைய மூலாதாரம் மனுஷர்களாக இருந்தபடியால் அவை கட்டுப்படுத்துவதில்லை.* ***மனுஷருடைய கற்பனைகள் மற்றும் போதனைகள்*** *என்னும் சொற்றொடர் திருமறையில் சொல்லப்பட்டுள்ள மற்றவார்த்தைகளுக்கு ஒப்பானவைகள்தான். மத்தேயு 15:9 மற்றும் மாற்கு 7:7 ஆகிய வசனங்களில், இயேசு ஏசாயா 29:13ல் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனத்தை, தேவனுடைய கற்பனைகளோடு தங்களின் சொந்தக் கட்டளைகளையும் பாரம்பரியங்களையும் சேர்த்துக் கொண்ட யூதர்களுக்குப் பயன்படுத்துகிறார். தேவனுடைய பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிவதை விட, தங்களுடைய சுய பாரம்பரியங்களைப் பின்பற்ற ஏதுவாக அவைகளைப் புறந்தள்ளினார்கள், என்று சொன்னார் (மாற்கு 7:8). இந்த வகையில், அவர்கள் தேவனுடைய கற்பனைகளை அவமாக்கிப் போட்டனர் (மாற்கு 7:13).*

*இங்கே பவுல் சில யூதர்களின் நம்பிக்கையான தன்னிலே துறந்து உடல்வருத்தி மெய்ஞானமடையும் நம்பிக்கையையோ அல்லது விவாகம் செய்யாதிருக்கவும், மிகவும் கடினமான உணவு சட்டங்களையும் கொண்டிருந்த எஸ்ஸென்னஸ் என்பவர்களின் வாழ்வு முறையையும் பவுல் குறிப்பிட்டிருக்கலாம் என சிலர் நம்புகின்றனர், இந்த இரண்டு கூட்டமும் தங்களைப் பின்பற்றுவோரும் இப்படிப்பட்ட உணவுக் கட்டுப்பாட்டை கடைபிடிக்கும்படி வலியுறுத்தப்பட்டனர். இருப்பினும், யாருக்கும் உறுதியாகத் தெரியவில்லை.*

*"மனுஷருடைய" என்று குறிப்பிடப்பட்டுள்ள வார்த்தை anthrōpoi, என்பதன் பொருள் "மனித வர்க்கம்," இது ஆண் பெண் இருசாரரையும் உட்படுத்தியது. கிரேக்க வார்த்தையில் anēr என்பது ஒரு ஆண் அல்லது ஒரு புருஷனுக்கு மட்டுமே குறிப்பிடப்படுகிறது, அது கொலோசெயரில் இரண்டு முறை காணப்படுகிறது, இரண்டு முறையும் "புருஷர்கள்"*

என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (3:18, 19). மனுஷக் கற்பனைகளும் போதனைகளும் ஆண்கள் பெண்கள் ஆகிய இருசாராருடைய செல்வாக்கின் விளைவே. கிறிஸ்தவர்கள் வாழவேண்டிய அளவுகோல் சமுதாயமல்ல, நியாயப்பிரமாணத்தைக் கட்டளையிடுபவர் ஒருவரே, இயேசு (யாக்கோபு 4:12), அவருக்கு வானத்திலும் பூமியிலும் சர்வ அதிகாரம் உள்ளது (மத்தேயு 28:18). மேலும் அவருக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கு நித்திய இரட்சிப்பை அளிக்கிறார் (எபிரெயர் 5:9).

கொலோசெயருக்கு பவுல் கொடுத்த உபதேசம் இன்றைக்கும் பயன்பாடுள்ளது. தேவனைத் தொழுது கொள்வதிலும் அவருக்குச் சேவை செய்வதிலும் தாங்கள் தெரிவு செய்து கொள்ளும் எதையும் எல்லாவற்றையும் நுழைப்பவர்களைக்குறித்து கிறிஸ்தவர்கள் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். பிதாவானவர் "ஆவியோடும் உண்மையோடும்" தொழுது கொள்ளப்படத் தக்கவர் என்று இயேசு சொன்னார் (யோவான் 4:23, 24). அவர் அப்போஸ்தலர்களுக்கு உபதேசம் பண்ணி தமக்கு சீஷராக்கப்படுகிறவர்கள் தாம் கட்டளையிட்ட யாவையும் "கைக் கொள்ளும்படி" போதிக்க வேண்டும் என்று சொன்னார் (மத்தேயு 28:20). ஆதிசபை "அப்போஸ்தலருடைய உபதேசத்தில் தரித்திருந்தது" (நடபடிகள் 2:42).

அதிகாரம் 2 கிறிஸ்தவர்கள் இயேசுவைப் பின்பற்ற வேண்டும் - அவரை மட்டுமே என்று வலியுறுத்துகிறது. சலக அறிவு ஞானம் என்கிற பொக்கிஷங்களெல்லாம் அவருக்குள் அடங்கியிருக்கிறது (வசனம் 3). கிறிஸ்தவர்களாகிய நாம், அவருக்குள் நடக்க வேண்டியவர்கள் (வசனம் 6) மற்றும் அவரில் கட்டப்பட வேண்டியவர்கள் (வசனம் 7); நாம் மனித பாரம்பரியங்களையோ உலகத்தின் வழிபாடுகளையோ பின்பற்ற வேண்டியவர்களல்ல (வசனம் 8). எடுத்துப்போடப்பட்ட கட்டளைகளை பின்பற்றும்படி யாரும் நம்மைக் குற்றப்படுத்த இடம் கொடுக்கக் கூடாது (வசனங்கள் 14, 15). நாம் இயேசுவைப் பற்றிக் கொள்ளாமல் கள்ள (பொய்யான) தொழுகையைப் பின்பற்றி வஞ்சிக்கப்படாதிருக்க வேண்டியவர்கள் (வசனம் 18), மேலும் நாம் மனுஷருடைய கற்பனைகளையும் போதனைகளையும் பின்பற்றிச் செல்லாமல் நம்மை விலக்கிக் கொள்ள வேண்டும் (வசனம் 22).

### " 'தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே' என்கிற கட்டளைகளுக்கு" (2:21ஆ)

அவர்கள் எதிர்கொண்ட அடிமைத்தனத்துக்கு ஏதுவான சில சட்டங்கள் யாவை? பவுல் இந்த உதாரணங்களைக் கொடுத்தார்: தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே இந்த கட்டளைகளெல்லாம் (ஆங்கிலத்தில்) இறங்கு விசையில் கொடுக்கப்பட்டுள்ளது; "தீண்டாதே" என்பது பலமான வார்த்தை "ருசிபாராதே" என்பதைத் தொடர்ந்து "தொடாதே" எனும் வார்த்தையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு எளிமையான தொடுதல் ருசிபார்ப்பதிலும், அல்லது தீண்டுதல் என்பது தொடுவதிலும் உட்படாது. கொலோசெயர்களுக்குப் பரிச்சயமான கட்டளைகள்தான் தொடுதலையும், ருசிபார்த்தலையும், அல்லது தீண்டுதலையும் விலக்கின.

கள்ளப்போதகர்கள் "செய்யாதே" என்பதன் கட்டளைகளின் பட்டியலை

கொண்டிருந்தனர். இது இயேசு தமது போதனையில் கொண்டிருந்த அணுகுமுறையல்ல. எதிர்மறையாக பட்டியிலிடப்பட்ட காரியங்களைத் தவிர்ப்பதால் நேர்மறை வாழ்வுக்கு அவை அவசியமாகிவிடாது. நேர்மறைக் காரியங்களை அதிக முக்கியப்படுத்தி செயல் பட்டால் எதிர்மறைக்காரியங்கள் தானாக சிறப்பாக தவிர்க்கப்பட்டு விடும் (ரோமர் 13:8-11); எப்படியாயினும், கிறிஸ்தவத்தில் "செய்யாதே" என்ற கொள்கைகளையும் அதேபோல "செய்யுங்கள்" எனும் கொள்கைகளையும் கொண்டுள்ளனர்.

புதிய ஏற்பாட்டை ஜாக்கிரதையாக படித்தால் இயேசு, "செய்யாதே" என்பதை அடிக்கடி சொல்லியிருக்கிறார் என்பதைக் காட்டும் மலைப் பிரசங்கத்தில் (மத்தேயு 5-7), அவர் சொன்னதாவது,

- "சத்தியம் பண்ணாதிருங்கள்" (மத்தேயு 5:34).
- "உன் வலது கை செய்கிறதை இடது கை அறியாதிருக்கக்கடவது" (6:3).
- "வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்" (6:7).
- "அவர்களைப்போல நீங்கள் செய்யாதிருங்கள்" (6:8).
- "பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம்" (6:19).
- "கவலைப்படாதிருங்கள்" (6:25; காண்க வசனங்கள் 31, 34).
- "மற்றவர்களை குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்" (7:1).
- "பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதிருங்கள்" (7:6).

பிரசங்கத்தில் சொல்லப்பட்ட மற்ற வாக்கியங்கள் தவறானவைகளை எதிர்த்து எச்சரிப்பவை. என்னசெய்ய வேண்டும் என்று சொல்லும் நேர்மறை போதனை முக்கியமானது. ஆனால் ஒரு ஆசான் என்ன செய்யக் கூடாது என்று ஜனங்களுக்குச் சொல்லுவதும் அவசியம்.

பவுல் சில கட்டளைகளைக் குறிப்பிட்டு அவைகளில் தவிர்க்கப்பட வேண்டியவைகளையும் மேற்கோள் இட்டுக் காட்டினார். ஒருவகையில் கொலோசெயருக்கு பரிச்சயமான கட்டளைகளையே பவுல் இங்கு பட்டியலிட்டார். சமுதாயத்தில் போதிக்கப்படுகிற அனைத்து கட்டளைகளையும் பட்டியலிடுவது அவருடைய நோக்கமல்ல, மாறாக அவருடைய மனதில் நின்ற சில கட்டளைகளை ஒரு மாதிரிக்காகக் கொடுப்பதுதான். H. C. G. Moule பின்வரும் சட்டங்களை பரிசீலித்து, "மோசேயின் நியாயப்பிரமாணத்தின் … தடைச்சட்டங்கள், பரிசேயப் பள்ளிகளால் விரிவுபடுத்தியும் மிகைப்படுத்தியும் காட்டப்பட்டது"[15] என்றார். அதிகப்பட்சமாக, அவைகள் மனுஷகற்பனைகளை மட்டுமே கொண்டிருந்தவை, சிலர் அதை நியாயப்பிரமாணத்துக்கு ஒப்பிட்டிருக்கலாம். குறிப்பிடப்பட்ட இந்த விதிமுறைகள் தேவபக்தியை உண்டுபண்ணும் பொருட்டு அளவுக்கதிகமான கண்டிப்புகள் சிலவேளைகளில் கொடுமையாகவும் கூட சரீர செயல்களை நடப்பிக்கவும் கண்டுபிடிக்கப்பட்டவை Moule மேலும் எழுதினார்,

> அவைகளில் எதுவாகிலும் மோசேயின் பிரமாணத்துக்குரியவைகளாக இருந்திருக்குமானால், இதுவரை பவுல் அவைகளின் தெய்வீக அதிகாரங்களை முழுமையாக அவைகளின் சொந்தக் காலத்தில்

> *அவைகளின் சொந்த நோக்கங்களை உணர்ந்திருப்பார், ஆனால் அந்தக் காலம் முடிவுற்றது, நோக்கம் கிறிஸ்துவுக்குள் நிறைவேறியது. அவைகளை இப்போது அமல்படுத்த தேவனுடைய பிரகடனத்துக்கும் மனுஷருடைய நடுவர் தீர்ப்பு பயன்பாட்டுக்கும் விட்டு விடுவோம்.*[16]

பழைய ஏற்பாட்டுப் பிரமாணங்களை கிறிஸ்தவ யுகத்தில் ஜனங்கள் மீது சுமத்துகிறவர் யாராயினும் அவர்கள் மனுஷ அதிகாரத்தின்படி செய்கிறார்களேயன்றி, தேவனுடைய அதிகாரத்தின்படியல்ல.

மனுஷருடைய கற்பனைகள் என்பது மனிதவர்க்கத்தின் ஆரம்ப சமுதாயச் சட்டங்களை பவுல் குறிப்பிட்டதாக சிலர் நினைக்கின்றனர். ஆகிலும், இது அவருடைய போதனையாக இருந்திருக்காது, ஏனெனில் கிறிஸ்தவர்கள் அரசு சட்டங்களுக்கும் கட்டளைகளுக்கும் கீழ்ப்படிய வேண்டியவர்கள். "எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் ..." (ரோமர் 13:1-4; காண்க தீத்து 3:1); "நீங்கள் மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர் நிமித்தம் கீழ்ப்படியுங்கள்" (1 பேதுரு 2:13அ). பவுலால் இங்கே குறிப்பிடப்படுவது போன்ற கட்டளைகள் அரசு சம்பந்தப்பட்ட கட்டளைகள் அல்ல, மாறாக, எவ்வித ஒழுக்க சம்பந்தப்பட்ட காரியங்களுக்கும் ஒவ்வாத பக்திசம்பந்தப்படாத சிறிய அற்பமான கற்பனைகள் அவை.

பவுல் குறிப்பிட்ட மூன்று தடைகளுக்கும் இடையே வித்தியாசம் கண்டுபிடிப்பது சுலபமல்ல. அவர் மாம்சப்பிரகாரமான கட்டுப்பாட்டைக் குறித்தே எழுதினார், நித்தியத்திற்கடுத்த காரியங்களையோ, காணக் கூடாத, ஆவிக்குரிய ரீதியிலான இடத்தைப்பற்றியோ எழுதவில்லை (2 கொரிந்தியர் 4:18). இப்பொழுது சர்ச்சையில் உள்ள கட்டளைகளோ அழிவுள்ளதான காரியங்களுக்கடுத்தவைகளும், மாமிச உலகம், போன்றவற்றை கட்டுப்படுத்துபவை, இவற்றிலே இயல்பான ஆவிக்குரியவைகளை உருவாக்கும் தன்மை எதுவுமில்லை.

(1) "தொடாதே" (*thinganō*), இது "தீண்டாதே" என்ற அர்த்தத்துக்கு ஒப்பானது, உலகப்பிரகாரமான எழுத்துக்களில் இது ஒழுக்கரீதியான உய்த்து உணர்தலைக் கொண்டது. எபிரெயர் 11:28ல் இதே வார்த்தை அழித்தலைக் குறிக்கும், மற்றும் எபிரெயர் 12:20ல் இது தேவன் நியாயப்பிரமானத்தை சீனாய்மலையில் கொடுத்தபோது ஒரு மிருகமாவது மலையைத் தொட்டால் சம்பவிப்பதைக் குறிக்கும். 2:21ல் பவுல் கொடுக்கிற அர்த்தம் இந்த ஜீவியத்தில் அழிந்து போகக் கூடியவைகளாயிருக்கும் உலகப் பொருட்களிலிருந்து விலகியிருத்தலைக் குறிக்கிறது என்பதாகும்.

(2) "ருசிபாராதே" (*geuō*), நேரடிப் பொருளில், "வாயினால் ருசிபார்க்கிற ஏதோ ஒன்று," அது போஜனமாகவோ அல்லது பானமாகவோ இருக்கலாம் (மத்தேயு 27:34; லூக்கா 14:24). உருவகமாக, இதன் பொருள் ஏதோ ஒன்றை "அநுபவித்தல்" (எபிரெயர் 6:4, 5; 1 பேதுரு 2:3) அது மரணம் போன்றதையும் குறிக்கும் (மத்தேயு 16:28; யோவான் 8:52; எபிரெயர் 2:9).

(3) "தீண்டாதே" (*hapsē*, என்பது *haptō* விலிருந்து வந்தது) இதன் பொருள் "பாலுறவு கொள்வது" எனலாம், அது ஒரு பெண்ணைத் தொடும் சம்பவத்தைக்குறிக்க பயன்படுத்தப்படுவது (1 கொரிந்தியர் 7:1). பெரும்பாலும், அடிக்கடிப் பயன்படுத்த இந்த வார்த்தையின் பொருள் "தொடுதல்" (மத்தேயு

*8:3, 15) அல்லது "இசைந்திருத்தல்" (யோவான் 20:17), மேலும் சிலவேளைகளில் "பங்கு பெறுதல்" அல்லது "தீண்டுதல்," என்று இந்த வசனத்தில் வந்திருப்பது போன்றது, பாலுறவு மற்றும் உணவையும் இது உட்படுத்தினது. பவுல் தீர்க்க தரிசனமாக ஜனங்கள் போஜன பதார்த்தங்களையும் விவாகத்தையும் விட்டு விலகியிருக்கும்படி கட்டளையிடப்படுவார்கள் என்றார் (1 தீமோத்தேயு 4:3). சிலர் hapse எனும் வார்த்தையை பவுல் பயன்படுத்தியிருப்பதால் பாலுறவைத்தான் குறிப்பிட்டார் என்ற முடிவுக்கு வருகின்றனர். இங்கே சொல்லப்படும் வார்த்தையின் பொருள் மிகவும் பொதுப்படையானது, அது பாலுறவுக்குறித்தும் பேசுகிறது எனலாம்.*

O'Brien, *hapsē எனும் "தீண்டாதே" என்ற வார்த்தை பாலுறவுக்கு மட்டும் குறிப்பிடக் கூடியதல்ல என்பதற்கு மூன்று காரணங்களை முன்வைக்கிறார்:*

> *முதலாவதாக, இந்த நிருபத்தில் வேறெந்த இடத்திலும் ஒரு லேசான குறிப்பு கூட பாலுறவு தடையாக குறிப்பிடப்படவில்லை (1 தீமோத்தேயு 4:3ல் குறிப்பிடப்படும் கள்ளப் போதகர்கள் விவாகத்தை தடைசெய்கிறார்கள் ஆகிலும் அங்கே "விவாகம்" பண்ணாதிருக்கும் கட்டளை கொடுக்கப்பட்டது). இரண்டாவதாக, கிரேக்க வார்த்தையாகிய, ["தீண்டுதல்"], என்பது இந்த உய்த்து உணருதல் அடிப்படையில் எழுவாய் வினைச்சொல். இதன் பொருளை ["தீண்டுதல்"] என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது (ஒப்பிடுக ஆதியாகமம் 20:4, 6; நீதிமொழிகள் 6:29; 1 கொரிந்தியர் 7:1). இந்த வினைச்சொல் தன்னில்தானே ஒரு பரந்த பொருளைக் குறிக்கும். மூன்றாவதாக, உடனடித் தொடர்ச்சியாக வரும் வார்த்தை (வசனம் 22, "இவைகளையெல்லாம் அநுபவிக்கிறதினாலே அழிந்து போகுமே" என்பது) உலகப் பொருள்களாகிய போஜனம், மற்றும் பானத்தை மனதில் கொண்டுபேசப்பட்டது: வசனம் 22அ பாலுறவு காரியத்தைக் குறித்து பேசப்படுவதற்கு பொருந்தாதது.[17]*

*சரீரப் புறக்கணிப்பும் தவறான முறையில் பயன்படுத்துதலும் பரிசுத்தத்தை கொடுத்தோ அல்லது ஆத்துமா பலவீனத்தை சுகப்படுத்திவிடவோ முடியும். இந்த திறமை உள்ளுக்குள் தோன்றி சரீரத்தில் வெளிப்படுத்தப்படுகிறது. சரீரத்தின் மூலம் சோதனைகள் வந்தபோதிலும், சரீரமே தீமையின் பிறப்பிடமாக ஆகிவிடாது.*

### *"இவையெல்லாம் அநுபவிக்கிறதினால் அழிந்து போகுமே" (2:22)*

*இது இங்கே சரியாக மொழிபெயர்க்கப்பட்டிருப்பதால், இது அடைப்புக்குறிக்குள் வருகிற ஒரு வாக்கியம்; மற்றபடி, இந்தச் சொற்றொடரை மட்டும் வைத்து விளக்கமளிப்பது கடினமானது. பவுல் அநித்தியமான, உலகப் பிரகாரமான, தொடக்கூடியதாயிருக்கிற, மற்றும் ருசிபார்க்கிற காரியங்களைக் குறித்து எழுதுகிறார், இவைகளெல்லாம் பயன்பாட்டிற்குப்பின் அழிவுறும், ஆனால் ஆவிக்குரியக் காரியங்கள் ஒருபோதும் அழிவுறுவதில்லை. (1 யோவான் 2:15-17), வசனங்கள் 22, 23ல், பவுல் வசனம் 21ல் குறிப்பிட்டு 22ல் விளக்கமளித்துள்ளபடி மூன்று காரணங்களினால் அந்தக் கட்டளைகளை கைக்கொள்ள வேண்டுவதில்லை என்று குறிப்பிட்டார்.*

*முதலாவதாக, இந்தக் கட்டளைகள் நித்தியத்திற்குத் தொடர்புடையவைகளல்ல, மாறாக உலகத்தின் அநித்தியமான பொருள்கள், அழிவுக்குரியவைகள், பயன்பாட்டிற்குப் பின்பு இனியும் பயனற்றுப் போகிறவைகளுமாயிருக்கிறது, அப்படிப்பட்ட கட்டளைகளை கைக் கொள்கிறவர்கள் அவைகளில் நித்தியத்திற்குரிய மதிப்பு என்ன இருக்கிறது என்று புரிந்து கொள்ளாதவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் ஜீவியத்திற்கு அவசியமானவைகளைக் குறித்து தவறான புரிந்து கொள்ளுதலில் இருக்கிறார்கள். அவர்கள் நீடிய மதிப்புடைய காரியங்களெல்லாம் அநித்தியமானவைகளால் கட்டுப்படுத்தப்படுகின்றன, என்றும் மற்றும் நித்தியத்தின் கண்ணோக்கில் மதிப்பற்றவை என்றும் கொலோசெயர்கள் நினைக்கும்படி வழிநடத்துவார்கள்.*

*இங்கே குறிப்பிடப்படுகிற அப்போஸ்தலனின் அணுகுமுறை யூதர்கள் கைக்கொண்ட மனுஷக் கற்பனைகளை இயேசு கண்டித்து உணர்த்தினவைகளோடு ஒத்துப்போகக் கூடியவைகளாயிருக்கின்றன. அவர்களுடைய பாரம்பரியத்திலிருந்த மத சார்புடைய பொருட்கள் தேவனுடைய கற்பனைகளை மீறுபவைகளாயிருந்தன (மாற்கு 7:7, 8). அவர்களுடைய பாரம்பரியத்தில் சுத்திகரிப்புச் சம்பந்தப்பட்ட சட்டதிட்டங்களும் போஜனப் பதார்த்தங்களுக்கு விலகியிருப்பதும் உட்பட்டிருந்தன, அவைகளை அவர்கள் கைக்கொண்டு மற்றவர்கள் மீது சுமத்தினார்கள். அதினால் அவைகளைக் கைக் கொள்ளுகிறவர்களின் பக்திவிருத்தியை தாங்கள் அதிகரிக்கச் செய்வதாக எண்ணிக் கொண்டிருந்தனர். அப்படிப்பட்ட மாம்ச தடைகள் பக்தி விருத்தியோடு சம்பந்தப்படாதவை என்று இயேசு வெளிப்படுத்தினார்:*

> *நீங்களும் இவ்வளவு உணர்வில்லாதவர்களா? புறம்பேயிருந்து மனுஷனுக்குள்ளே போகிறதொன்றும் அவனைத் தீட்டுப்படுத்த மாட்டாதென்று நீங்கள் அறிந்து கொள்ள வில்லையா? அது அவன் இருதயத்தில் போகாமல் வயிற்றிலே போகிறது; அதிலிருந்து ... நீங்கிப்போகும். மனுஷனுக்குள்ளே இருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும் (மாற்கு 7:18ஆ-20).*

*மற்றொரு இடத்தில் பவுல், தேவனுடைய ராஜ்யம் ஆவிக்குரியது, அது “புசிப்பும் குடிப்புமல்ல” என்று வலியுறுத்தினார் (ரோமர் 14:17). தேவன் வயிற்றையும் போஜனத்தையும் “அழியப்பண்ணுவார்” (1 கொரிந்தியர் 6:13).*

*இந்த வசனப்பகுதியில் உடல்வருத்தி தன்னிலை மறுத்து முடிவான அருள் நிலையடைவதாக எண்ணுவோரின் கூற்றுக்குப் பதிலளிக்கும்படி அவர் தன்னைத்தான் வெறுத்தலைத் தனக்காக செய்வதில் எவ்வித ஆவிக்குரிய மதிப்பும் இல்லை என்பதை வலியுறுத்தினார். கிறிஸ்தவ வாழ்க்கை என்பது தேவனுடைய ஆவிக்குரிய காரியங்களின் மேல் கட்டப்பட்டது; இந்த ஜீவியத்தின் அழிவுக்கேதுவான காரியங்களினால் ஆவிக்குரிய தன்மையை உண்டாக்கக்கூடும் என்று எண்ணுகிற மனுஷருடைய சட்டதிட்டங்களை அது சார்ந்திருப்பதில்லை. மாம்ச வாழ்க்கைக்கு சில பொருட்கள் அவசியமானவைகள்தான்; ஆனால் கிறிஸ்தவ வாழ்க்கையில் தேவ பக்தியை உண்டு பண்ணுகிற விஷயத்தில் இவைகளின் பங்கு மிகவும்*

அற்பமானவை. சரீரப்பிரகாரமான கவனத்தோடு வாழும் வாழ்க்கை ஆவிக்குரிய தன்மைகளுக்கு இடையூறானது. "இரண்டு எஜமான்களுக்கு ஒருவனும் ஊழியஞ்செய்யக் கூடாது" என்று இயேசு சொன்னார் (மத்தேயு 6:24அ).

**"இப்படிப்பட்ட போதனைகள் சுய இஷ்டமான ஆராதனையையும், மாயமான தாழ்மையையும், சரீர ஒடுக்கத்தையும்" (2:23அ)**

பவுல் இங்கே மனுஷனுடைய சுய - கட்டாயத்தின் பேரில் சுமத்தப்படுகிற மூன்று ஆசாரங்களைக் குறிப்பிடுகிறார்: (1) **சுய இஷ்ட ஆராதனை**, (2) **சுயமாயமான தாழ்மை**, (3) **சரீர ஒடுக்கம்**. "சுய இஷ்ட ஆராதனை" (*ethelothrēskia*) TEV எனும் ஆங்கில வேதாகமத்தில் "தேவதூதர்களுக்குச் செய்யும் ஆராதனை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது; Schweizer என்பவரால் பரிந்துரைக்கப்படும் மொழிபெயர்ப்பும் இதுவே.[18] சிலர் இதை வசனம் 19ல் சொல்லப்படுகிற, தேவ தூதர்களுக்குச் செய்யும் ஆராதனையைக் குறிப்பதாக நினைக்கின்றனர். இந்த வார்த்தையின் துவக்கம் தெரியவில்லை, மேலும் பவுல் இவ்வார்த்தையை பயன்படுத்துவதற்கு முன் இலக்கியங்கள் எதிலும் இவ்வார்த்தை காணப்படவில்லை. ஆகையால், அவர் சுயமாகப் பயன்படுத்தின வார்த்தையாக இதை நம்புகின்றனர். புதிய ஏற்பாட்டில் இங்கு மட்டுமே இந்த வார்த்தைக் காணப்படுவதால், பிற பதிவேடுகளில் இதன் பயன் என்ன என்று அர்த்தத்தைக் தீர்மானிக்கும் பொருட்டு இதை பரிசீலிக்க வேண்டும். இது ஒரு தொகுப்பு வார்த்தை, அதில் *thrēskeia*, என்பது ஒரு பெயர்ச்சொல்லாக, "பக்தி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (யாக்கோபு 1:26, 27). அதை தொழுகைக்கு பயன்படுத்தும் போது, *ethelothrēskia* என்பதை மார்க்கரீதியான சேவைகளைச் செய்யும் மனுஷர்கள் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெறும் தகுதி சிறப்பாகச் சொல்லப்படுகிறது, இது நேர்மையான தொழுகையை தாழ்மையுடன் சமர்ப்பிப்பதற்கு முரணானது.

இரண்டு வசனப் பகுதிகளிலும் குறிப்பிடப்பட்டதன் பொருள் தன்னைத் தான் வெறுத்து உடன் தொடரும் மிகக் கண்டிப்புடன் உபவாசம் இருப்பதை உட்படுத்தியது. O'Brien ஆலோசனையாக, "தன்னிலை வெறுத்து உடல் வருத்தும் இது போன்ற செயல் ஒருவகையான தாழ்மைபோல் காட்டும் தந்திரம் இதின் மூலம் வானுலக இரகசியங்களின் தரிசனங்களைப் பெறுவதற்கான செயலூக்கமானது,"[19] என்றார். ஒருவகையில் சில ஜனங்கள் சரீர ஒழுக்கத்தை கடைப்பிடிக்கிற ஒரு நபர் தான் மிகப் பெரிதான பக்திமானாக நம்பினார்கள்.

சரீரத்துக்குக் கொடுக்கப்படும் "கடுமையான" வைத்தியம் (*apheidia*, சரீரத்தைத் "தாராளமாகப்" பயன்படுத்துவது) குறித்தும் அந்த உடல் வருத்துவோர் மிக அதிகமான பரிந்துரை செய்கின்றனர், மார்க்கரீதியான உள்ளார்வம் மற்றும் அர்ப்பம் மிகக் கடினமான சரீர ஒழுக்கங்கள் மூலம் அடையமுடியும் என்று யூகித்தார்கள். சரீரம் என்பது ஆத்துமாவை அடைத்து வைக்கும் சிறைபோன்றது, அதன் வருத்தம் ஒரு பாரமாக சகித்துக் கொண்டிருக்கிறது என்று நினைக்கப்பட்டது. ஆத்துமாவும் சரீரமும் ஒன்றொடொன்று முரண்பட்டவைகள். சரீரத்தை கடுமையாக வருத்துவதன் மூலமாக, சரீரத்தின் வருத்தங்களையும் சோர்வுகளையும் நீக்கி அதன்

ஆசையிலிருந்து ஆத்துமா விடுதலையாகிறது என்று நினைத்தனர். இதைப் பவுல் தீமோத்தேயுக்கு எழுதின நிருபத்தில் "விவாகம் பண்ணாதிருக்கவும் போஜனப்பதார்த்தங்களை விலக்கவும் வேண்டுமென்ற" கருத்தை ஆதரிப்போருக்கு இக்கருத்தைக் குறிப்பிட்டார் (1 தீமோத்தேயு 4:3).

பாகால் தீர்க்கதரிசிகளான விக்கிரக பூசாரிகள் தங்கள் சரீரங்களைக் கீறிக் கொண்டு பாகாலின் கவனத்தை ஈர்க்கவும் தங்களுக்கு செவி கொடுத்து தங்களுடைய கோரிக்கைகளுக்கு உதவும்படியாகச் செய்ய முடியும் என்றும் நினைத்தார்கள் (1 இராஜாக்கள் 18:26-28). இன்று சில மதங்களில், சரீரப்பிரகாரமாக வருத்திக்கொள்வதால் கவர்ச்சியை ஏற்படுத்தி, பலி செலுத்துதல் மூலம் தேவபக்தியை ஆதாயப்படுத்திக் கொள்வது போலவும், ஆசீர்வாதங்களையும் தேவனோடு நல்ல நிலையில் இருப்பது போலவும் செயல்படுகின்றனர்.

கண்டிப்பான முறையில் சரீர ஒடுக்கத்தைக் கடைபிடிப்போர் கூடுதல் ஆசரிப்புகள் மூலம் தேவனுடைய தயவையும் அநுக்கிரகத்தையும் பெற ஏதுவான கோரிக்கைகளை நிறைவேற்றி நல்லெண்ணங்களை வளர்த்துக் கொள்வதாகக் கருதுகின்றனர். உச்சக்கட்ட பரிசுத்தத்தை அடைவதற்குப் பதில், இப்படிப்பட்ட அணுகுமுறைகள் மேட்டிமைக்கும் பெருமைக்கும் மட்டுமே இட்டுச் செல்கிறது. மனித சிந்தனைகளைப் பின்பற்றுவதால், இந்த சட்டதிட்டங்களை மிக வெற்றிகரமாக செயல்படுத்தும் ஒரு நபர் "உம்மைக் காட்டிலும் புனிதமானவன்" என்ற எண்ணத்தை வளர்த்துக் கொள்கிறான்.

### "(சரீர ஒடுக்கத்தையும் பற்றி) ஞானமென்கிற பேர்கொண்டிருந்தாலும்" (2:23அ)

சிலர் இந்த வாக்கியத்தை மறுகட்டமைப்புச் செய்து, இடைஞ்சலான விளக்கங்களைக் கொடுக்க வகைதேடுகின்றனர்; ஆனால் NASB எனும் மொழிபெயர்ப்பு (ஆங்கிலத்தில்) சிறப்பான மொழிபெயர்ப்பைக் கொடுக்கிறது.

பவுல் அனைத்து ஏற்றுக்கொள்ளப்படாத கட்டளைகளையும் பட்டியிலிட முற்படவில்லை என்பது, உறுதியாகத் தெரிகிறது. ஞான **மென்கிற** என்ற வார்த்தைக்கு மவுலி சரியாகக் கவனம் செலுத்தியிருக்கிறார், "மிகத் துல்லியமாக, வார்த்தை சகித்துக் கொள்ளக் கூடுமானால், அது (ஒத்ததாக) *ஒப்பான காரியங்களாக* சொல்லப்படுகிறது; வசனம் 21க்கும் அதற்கு மேலும் சொல்லப்பட்டவைகளும் ஒரே கொள்கையைத்தான் எதிர்பார்க்கின்றன."[20] குறிப்பிடப்பட்ட பட்டியல்கள் கிறிஸ்தவர்கள் பின்பற்றும்படி கொடுக்கப்பட்டவைகளல்ல. பிற இடங்களில், பவுல் மாம்சத்தின் ஏற்புடைய தற்ற செயல்களைக் குறிப்பிட்டு, பின்பு இது "போன்றவைகள்" என்று சேர்த்தார் (கலாத்தியர் 5:21), அதன் பொருள் கொடுக்கப்பட்ட பட்டியல் முழுமை பெறவில்லை என்பதையும் ஆனால் மாம்சத்தின் பிற கிரியைகளையும் அளவு கோலாக சேர்த்துக் கொள்ளலாம் என்பதே.

பேர் கொண்டிருந்தாலும் என்பது *logos* என்பதிலிருந்து வந்த வார்த்தை இது, இயல்பாக இதை "வார்த்தை" என்றே மொழிபெயர்க்கப்படும். இங்கே, குறிப்பிடப்படும் கருத்து ஒரு "விளக்கமளித்தல்," "பிரதிநிதித்துவம்,"

அல்லது "தோற்றம்" ஞானத்தைப் போல் காணப்பட்டாலும் உண்மையில் அது *நிஜத்துக்கு* முரணானது, உலகத்தின் பார்வையில், மனுஷர்களால் கண்டு பிடிக்கப்பட்ட கட்டளைகள் ஞானமுள்ளவைகளாகத் தோன்றலாம், ஏனெனில் அவைகள் ஆவிக்குரியத் தன்மையை ஏற்படுத்தத் தேவையானவற்றை உருவாக்க வல்லது என்பது போல் தோன்றும். இருப்பினும், சுய வெறுப்பு அப்படிப்பட்டத் தீமைகளை விலக்கிப் போட போதுமான விருத்தி செய்யவும் உறுதியளிப்பதில்லை. ஒரு நபர் கெட்ட காரியங்களைச் செய்யாமல் ஒதுங்கி இருப்பதினாலேயே அவர் நேர்மறைக் காரியங்களைச் செய்கிறார் என்று பொருளல்ல, சரியான வாழ்வை அது உட்படுத்தியிருப்பதாகக் கொள்ள இயலாது. அவர் ஒருவேளை திருடாதவராக, பொய் சொல்லாதவராக, விபச்சாரம் செய்யாதவராக, அல்லது கொலைபாதகனாக இல்லாதிருக்கலாம் - ஆனாலும் அவர் தன்னுடைய அயலானுக்கு உதவி செய்பவராகவோ தேவனிடத்தில் நெருங்கின உறவுமுறையை வளர்த்துக் கொள்பவராகவே பொருள் படாது. தேவ பக்தியை தன்னில் அதிகப்படுத்திக்கொள்ள, சரீர நடத்தையைக் கட்டுப்படுத்துகிற எண்ணிக்கையுள்ள சட்டங்களைக் கொண்டு வருவதைக் காட்டிலும் அதிகமானது தேவைப்படுகிறது.

சட்டங்கள் சமுதாயத்தைக் கட்டுப்படுத்தக் கூடுமானால், பிறகு காவல் படைகளோ சமுதாய முயற்சிகளோ தேவையற்றவை. ஒரு சமுதாயத்துக்கு சீர்கேடு விளைவிக்கிற சகல சூழ்நிலைகளையும் இயன்ற வரை கட்டுப்படுத்தி தீங்கான சமுதாயத்தை திருத்த ஏதுவான கட்டளைகளைக் கொண்ட பிரமாணம் தேவை; அப்பொழுது எவ்வித கிரிமினல் குற்றங்களும் இடம் பெறாது. பிரமாணங்கள் தேவைதான், ஆகிலும் பிரமாணத்துக்கப்பால் சுயக்கட்டுப்பாட்டை கொண்டு வருவதும், சமுதாயத்தில் அமைதியையும் ஒற்றுமையையும் ஏற்படுத்துவதுமே மிக அத்தியாவசியமானது.

### *"இவைகள் (இந்தக் காரியங்கள்) மாம்சத்தைப் பேணுகிறதற்கேயொழிய மற்றொன்றுக்கும் பிரயோஜனப் படாது" (2:23இ)*

இந்தக் சொற்றொடர் திருமறை நிபுணர்களால் மூன்று வித்தியாசப்பட்ட வழிகளில் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது.

*(1) இந்த சட்டங்களெல்லாம், மாம்ச இச்சைகளை நிறைவேற்றுவதற்கு மட்டுமே யொழிய வேறு எவ்வித மதிப்பையும் உடையதல்ல.* இந்த விளக்கம் **மாம்ச விருப்பங்களை** கண்ணுற்று மாமிசம் திருப்திபட ஏதுவானவைகளைச் செய்ய முற்படுவதைக் குறிப்பிடுகிறது. இந்த கருத்தின்படி, இந்த சட்டங்களெல்லாம் மாம்ச ஆசைகளை அனுபவிக்கத் தேவையானவற்றை அளிக்க திராணியில்லாதவை என்று பவுல் சொன்னதாகப் பொருள்படும்.

*(2) இந்தக் கட்டளைகளை பின்பற்றுவது மாம்ச திருப்தியைக் கொடுக்கிறது ஆகிலும் அவைகளை கைக் கொள்பவர்களை அதிக ஆவிக்குரியத்தன்மையைப் பெற ஊக்குவிப்பதில்லை.* இந்தக் கண்ணோட்டம் *pros* ("எதிர்ப்பு") எனும் வார்த்தையைக் கொடுக்கத் தக்கதாக மிகவும் அடிக்கடி பயன்படுத்தும் பொருள் "க்கு," O'Brien அளித்த விளக்கமாவது,

> குறிக்கோளும் இலக்கும் அவர்களுடைய பிரயாசத்தின் எதிர்ப்புகள் - கடுமையான ஆசரிப்புக்களை கைக் கொள்வது

*துரைத்தனத்துக்கும் அதிகாரங்களுக்கும் கனத்தையும் மதிப்பையும் செலுத்துவது - ஆகியவைகளே திருப்தியளிப்பன. ஆனால் அப்படிதிருப்திப்படுத்தப்பட்டவைகளெல்லாம் ("மாம்சம் மட்டுமே") அவர்களுடைய சக்திமிக்க பக்திக்குரிய காரியங்களெல்லாம் மாம்சத்தை ஒரு பரிசோதனையில் வைக்க வில்லை. அதற்கு எதிரானதாக அவை இருந்தன. மனுஷர்களால் உருவாக்கப்பட்ட கற்பனைகளெல்லாம் உண்மையில் தீய வழிகளுக்கு துணைபோகும் மாம்ச செயல்களே.*[21]

இந்தக் கோணத்தை ஆதரிக்கவும் எதிர்க்கவும் (*pros* "க்கு") இந்தச் சொற்றொடர்கள் KJV யில் உள்ளபடி மொழியாக்க விளக்கம் அளிக்கலாம்: "எந்த ஒரு கனத்திலும் மாம்சத்தை திருப்திபடுத்த இயலாது." RSV எனும் மொழிபெயர்ப்பில் மாம்ச விருப்பங்களை நிறைவேற்றுவதில் எவ்வித மதிப்புமில்லை, என்று மொழிபெயர்க்கப்பட்டிருந்தாலும், அப்பக்கத்தின் அடிக்குறிப்பில் "மாம்ச இச்சைகளை (விருப்பங்களை) மாத்திரம் நிறைவேற்றுவதில், எந்த மதிப்பும் இல்லை" என்று சொல்லப்படுகிறது. இதுவே பவுல் கொடுக்கும் அர்த்தமாக இருக்கலாம்.

*(3) இந்தக் கட்டளைகள் சரீர இச்சைகளை கட்டுப்படுத்துவதில் எவ்வித மதிப்பும் உடையவைகளல்ல.* மனுஷ கற்பனைகள் சரீர ஒடுக்கத்துக்குரிய கோரிக்கைகளை கடுமையாக முன் வைக்கிறது, ஆனால் அவை மாம்ச விருப்பங்களை தடுத்து நிறுத்துவதில்லை. பவுல் குறிப்பிட்ட மனுஷருடைய கட்டளைகள், சுய இஷ்ட ஆராதனை, மாயமான தாழ்மை, சரீர ஒடுக்கம் ஆகிய இவைகளெல்லாம், சரீர விருப்பங்களையும் உணர்ச்சிகளையும் கட்டுப்படுத்துவதற்கு எந்த ஒரு உதவியும் செய்வதில்லை, NASB யும் சமீப காலத்து அநேக மொழிபெயர்ப்புகளில் சொல்லப்படுவது போல, பொருள்படுத்தியிருக்கிறது.

மேற்குறித்தவைகளில் முதல் விளக்கம் புறந்தள்ளப்பட வேண்டியது ஏனெனில் "சரீர ஒடுக்கம்" என்பது அதன் முந்தை வசனத்தின் அடிப்படையில் பார்த்தால் சரீர திருப்தியைப் பற்றி பேசுவதாகத் தெரியவில்லை. பவுல் சரீரத்தை மாத்திரம் குறிப்பிட்டு பேசுவதில்லை, மாம்சத்தின் இச்சைகளையும் குறித்தே பேசுகிறார் - மனித சிந்தனைகளின் அடிப்படையிலிருந்து ஆசைகள் உருவாகின்றன. இரண்டாவது விளக்கம் சில வகைகளில், அது பவுல் கொடுக்கும் அர்த்தமாயிருக்க வாய்ப்பில்லை. மூன்றாவது விளக்கம் அந்த வசனப்பகுதிக்கு பொருத்தமானதாயிருக்கிறது.

*Plēsmonē* ("சரீரத்தைப்பேணுதல்") எனும் பதம் புதிய ஏற்பாட்டில் இங்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது, LXXல் இருபத்தி எட்டுமுறை காணப்படுகிறது. இதன் பொருள் "மனநிறைவு" அல்லது "திருப்தி" என்று பொருள் படத்தக்க வகையில் "நிறைவு" என்று சொல்லப்படுகிறது. மேலும், முழுமையான ஈடுபாடு கொண்டு சரீர ஒடுக்கத்தில் செயல்படுவதையும் பொருள்படுத்தலாம்.

வசனம் 20ஆவில், சொல்லப்படுகிற கட்டளைகள் சரீரத்தைப் பேணுதலைத் தவிர்க்க முடியாததாக இருக்கிறது. பவுல் போதிப்பதெல்லாம் மாம்ச விருப்பங்களைக் கட்டுப்படுத்தும் திராணி சுய இஷ்ட ஆராதனையிலோ, சுய மாயமான தாழ்மையிலோ, சரீர ஒடுக்கத்தையோ அடிப்படையாகக் கொண்டு

வருவதில்லை. பரிசுத்தம், தூய்மை, மற்றும் தேவனோடு நெருங்கியிருத்தல் ஆகியவைகளெல்லாம் சரீரத்தை கடுமையாக ஒடுக்குவதன் மூலமாகவோ அல்லது சரீர இச்சைகளை நிறைவேற்றும்படி ஒப்புக் கொடுத்தலிலோ வருவதில்லை.

சரீர ஒழுக்கம் அற்பப் பிரயோஜனமுள்ளது, தேவபக்தியோ எல்லாவற்றிற்கும் பிரயோஜனமுள்ளது (1 தீமோத்தேயு 4:8). தேவ பக்தியுள்ள வாழ்க்கை ஆவியின் கனியிலிருந்து வருகிறது (கலாத்தியர் 5:22, 23), இவைகள் மூலம் கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய பெலனை அடைகிறார்கள் (எபேசியர் 3:16) மேலும் உலகத்தை ஜெயிக்கும் வல்லமையும் கிடைக்கிறது (1 யோவான் 4:4). தேவனுடைய ஜனங்கள் தங்களுடைய மாம்ச ஆசைகளை கட்டுப்படுத்த ஒரு குறிப்பிட்ட கட்டளைகளுக்கு மேலான காரியங்கள் தேவையுடையோராய் இருக்கின்றனர். “மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்” (ரோமர் 8:13).

கிறிஸ்தவர்கள் புதிதான ஆவியுள்ளவர்களாக ஊழியம் செய்கிறார்கள் (அல்லது “ஆவியானவராலே”), எழுத்தின்படியல்ல (ரோமர் 2:29; 7:6; 2 கொரிந்தியர் 3:6). நியாயப்பிரமாணம், அதன் சட்டதிட்டங்களுடன் சரீர இச்சைகளை கட்டுப்படுத்த போதுமானதாக இருக்கவில்லை (ரோமர் 8:3). மாறாக, அது மாம்ச இச்சைகளை தூண்டிவிடக்கூடியதாயிருக்கிறது (ரோமர் 7:8). மாம்ச விருப்பங்களைக் கொண்டிருப்பவர்கள் தங்கள் இச்சைகளைக் கட்டுப்படுத்த இயலாதவர்களாயிருக்கிறார்கள் (ரோமர் 8:7). மனுஷருடைய கட்டளைகளெல்லாம் இருதயங்களை கட்டுப்படுத்தவோ ஆவியானவரால் மாற்றம் பெறுவதற்கோ மேற் கொள்ளப்படவோ போதுமானவைகளல்ல. ஆவிக்குரிய காரியங்களால் ஆவியை போஷிப்பதாலும், ஆவியைத்துக்கப்படுத்தாமல் இருப்பதாலும், அது ஆவிக்குரிய வளர்ச்சியை நடப்பிக்கிறது (1 பேதுரு 2:2).

சரீரத்தைக் கடுமையாக ஒடுக்குவதாலும் தனிமைப்படுத்திக் கொள்வதினாலும் அவை பரிசுத்தத்திற்கு அஸ்திபாரமாகிவிடாது; தேவபக்தியை விஸ்தரிக்க இவை போதுமானவை அல்ல. உபவாசம் இருப்பது தற்காலிகமாக சமுதாயத்திலிருந்து ஒதுங்கியிருக்கச் செய்ய உதவிகரமாயிருக்கலாம், ஒருவருடைய வாழ்க்கையிலிருக்கும் தீமைகளை அகற்ற பிரயாசப்படுவது இன்றியமையாதது, ஆகிலும் அதைக் காட்டிலும் மிக முக்கியமானது ஆவிக்குரிய காரியங்களால் அவரை நிரப்புவதுதான். எந்த ஒருவருடைய வாழ்க்கையும் வெறுமையாகிவிடக்கூடாது. இயேசுவைக் கொண்டு ஒருவருடைய வாழ்க்கையை நிரப்புவதால் தீமை அகற்றப்படும்.

இயேசு கொலோசெயர்களை நியாயப்பிரமாணத்திலிருந்தும் பாவத்தின் குற்ற உணர்விலிருந்தும் தண்டனையிலிருந்தும் விடுதலையாக்கினார், ஞானஸ்நானத்தில் அவர்கள் அவரோடே கூடமரித்ததின்மூலம் சகல மதச்சார சடங்குகளுக்கும் உலகத்தின் தத்துவங்களுக்கும் மரித்தவர்களானார்கள் எனவே பவுல் அவர்கள் விடுதலை பெற்ற சகல காரியங்களுக்கும் மறுபடியும் திரும்பிப் போவதை பவுல் விரும்பவில்லை. அப்படி அவர்கள் செய்திருந்தால், அவர்களுடைய வாழ்க்கையில் இயேசுவுக்கு இடமிருந்திருக்க மாட்டாது.

தங்கள் சுய மையம் வைத்து தங்கள் சுய கட்டளைகளாலும்

மனித கோட்பாடுகளாலும் வாழ்வைக் கட்டியெழுப்ப முனைவோர் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்பவர்களாகவும் சுய கர்வத்தால் நிரப்பப்பட்டவர்களாகவுமிருக்கின்றனர். கொலோசெயர்கள் உலகத்தின் வழிபாடுகளை விட்டும் ஒழுக்க வீனங்களிலிருந்தும், தேவ பக்தியற்றவைகளிலிருந்தும் விலகியிருக்க வேண்டியவர்கள். 3ம் அதிகாரத்தில் உலகக் காரியங்களை களைந்து போடவும் இயேசுவில் காணும் உன்னத வாழ்வின் வழிகளைப் பின்பற்றவும், இயேசுவின் தன்மையில் காணும் குணாதிசயங்களைத் தரித்துக்கொள்ளவும் பவுல் சொல்லும் புத்திமதிகளைக் காணப்போகிறோம். அவரே கிறிஸ்தவர்களின் பூமிக்குரிய வாழ்வில் பரிபூரண ஜீவனையும் வரப்போகிறமறுமை வாழ்வில் பரலோக வீட்டின் ஒரே நம்பிக்கையாயுமிருக்கிறார்.

## மேலும் கற்றுக்கொள்ள

**“தொழுகை”**

பல்வேறு கிரேக்க வார்த்தைகள் “தொழுகை” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது;

1. *thrēskeia* - ஒரு பக்திக்குரிய ஆசரிப்பு (யாக்கோபு 1:26, 27).
2. *proskuneō* - “தொழுகையில் பணிந்து கொள்ளுதல்” (மத்தேயு 4:10; லூக்கா 4:8).
3. *latreuō* - “ஆராதனை செய்தல்” (மத்தேயு 4:10; லூக்கா 4:8).
4. *eusebeō* - “கனத்தையும் ஆழமான மரியாதையையும் செலுத்துதல்” (நடபடிகள் 17:23).
5. *therapeuō* - “பணிவிடையும் ஊழியமும் செய்தல்” (நடபடிகள் 17:25). புதிய ஏற்பாட்டில், பெரும்பாலும் இந்த வார்த்தையின் பொருள் “குணப்படுத்துதல்” மீட்கப்படுதல் (மத்தேயு 4:24; 8:7).
6. *sebazomai* - “தொழுகை” (ஆராதனை) (ரோமர் 1:25, புதிய ஏற்பாட்டில் இங்கு மட்டும் சொல்லப்பட்டுள்ளது).
7. *sebō* - “தொழுகையில் கைக்கொள்ளும் சடங்காச்சாரம்” (மத்தேயு 15:9; நடபடிகள் 18:13).

மேலே பட்டியலிடப்பட்ட கிரேக்க வார்த்தைகளில், “தொழுகையை” அர்த்தப்படுத்தும் மிக அருகான வார்த்தை *proskuneō,* இதன் நேரடிப்பொருள் “ஒன்றின் பொருட்டு முத்தமிடுதல்.” இது உய்த்து உணருதலில் தன்னைக் காட்டிலும் உயர்ந்த சக்தியை போற்றி பணிந்து குனிந்து வணங்குதலைக் காட்டுகிறது (யோவான் 4:24). *Latreuō,* என்பது ஒரு விசாலமான தொழுகையைக் காட்டிலும் மேலான பொருளில் பேசுகிறது, பணிந்து குனிந்து கொள்ளுதலுடன் நிற்பதில்லை. அது, தேவனுக்கானாலும் (லூக்கா 1:74) அல்லது தேவனல்லாத ஏதோ சிலவற்றிற்கானாலும் (நடபடிகள் 7:42; ரோமர் 1:25), அல்லது பொதுவான ஒரு தொழுகையையே குறிப்பிடும்படி, ஏதோ ஒரு தொழுகையையே குறிப்பிடும்படி, ஏதோ ஒரு தெய்வம் என்று கருதப்படுவதை சேவிப்பதை விளக்கப்படுத்துகிறது (எபிரெயர் 8:5; 13:10).

கிறிஸ்தவர்கள் செய்கிற எல்லாமே “தொழுகை” ஆகாது, ஏனெனில்

*எல்லா செயல்களும் தேவனைப் போற்றி புகழ்பவையல்ல. சகல proskuneō வும் "ஆவியோடும் உண்மையோடும்" தொழுது கொள்வதாக இருக்க வேண்டும் (யோவான் 4:23, 24); ஆகையால், அது தேவனால் வரையறுக்கப்பட்ட அளவீட்டிற்குள் இருக்க வேண்டும். Latreuō, எனும் பதத்தை கிறிஸ்தவர்களுக்கு பயன்படுத்தும்போது, வாழ்க்கையில் சம்பந்தப்படுத்தும் எந்த செயலும் இயேசுவை சேவிப்பதாக இருப்பதை உட்படுத்தியது. ஆனாலும் அப்படிப்பட்ட எல்லா செயல்களுமே தேவனை நோக்கி போற்றிப் புகழும் தொழுகையாக இருப்பதில்லை. ஒரு கிறிஸ்தவன் தன் சரீரத்தையும் அதன் செய்கைகளையும் முறையாகப் பயன்படுத்தும் போது, அவன் தேவனை சேவிக்கிறான் அப்படிப்பட்ட சேவித்தலை செய்யும்படி தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார், ஆனாலும் அவை அனைத்துமே தேவனைத் தொழுது கொள்ளுதலுக்குள் கொண்டு வரக் கூடாது. சரியான எந்தக் செயலைச் செய்தாலும், அது அவருக்குச் செய்யும் சேவை; இருப்பினும், தொழுகையில் பயன்படுத்தும்படி இயேசு வெளிப்படுத்தினவைகளுக்கப்பால், எதைச் செய்தாலும் அது தொழுகைக்குரிய செயலல்ல.*

## பயன்பாடு

**தலையைப் பற்றிக் கொண்டிருத்தல்**

*நாம் கட்டிஎழுப்ப அஸ்திபாரமாக இயேசுவைக் குறிப்பிட்டபின் (காண்க 1 கொரிந்தியர் 3:10), பவுல் ஆரோக்கியமான எச்சரிக்கைகளை கொடுக்கத்துவங்கி எல்லாவற்றிற்கும் முந்தினவராகிய இயேசுவை விட்டு வழுவிப் போவதைக் குறித்துப் பேசினார், அவர் எல்லாவற்றையும் சிருஷ்டித்தவரும், எல்லாவற்றிற்கும் தலையாகவுமிருக்கிறார். ஒருவனும் நயவசனப்பினாலே கொலோசெயர்களை வஞ்சியாதபடிக்கு அவர் தொடர்ந்து வரும் வசனங்களில் எச்சரித்தார் (2:4), தத்துவங்களாலே (லௌகீக ஞானத்தாலோ), மாயமான தந்திரத்தினாலே, அல்லது உலகத்தின் வழிபாடுகளாலோ (2:8) அப்படி மோசம் போக்கப்படக்கூடும் என்றார். வசனம் 2:16-23ல் யூதர்களின் ஆசரிப்புகளைக் குறித்து எச்சரித்தார் (2:16), மாயமான தாழ்மை (2:18, 23), தேவதூதர்களுக்குச் செய்யும் ஆராதனை (2:18), தலையைப் பற்றிக்கொள்ளத் தவறுவது (2:19), உலகத்தாரின் கற்பனைகள் (2:20), மற்றும் சுய இஷ்ட ஆராதனை ஆகியவைகளுக்கும் (2:23) எதிராக எச்சரித்தார்.*

*யூத ஆசரிப்புகள். நியாயப்பிரமாணத்தின் ஆசரிப்புகள் ஆகியன சிலுவையிலறையப்பட்டன (2:14), அவை கிறிஸ்தவர்களையும் நியாயப்பிரமாணத்தினின்று விடுதலையாக்கியிருக்கிறது (கலாத்தியர் 5:1). இந்த உண்மை மிக விவரமாக ரோமரிலும், கலாத்தியரிலும், மற்றும் எபிரெயரிலும் பேசப்படுகிறது. ரோமரில், பவுல் நியாயப்பிரமாணத்தைக் குறித்து பின்வருமாறு போதித்தார்:*

1. *நியாயப்பிரணமாணத்தினாலே எந்த மனுஷனும் ... நீதிமானாகிறதில்லை (ரோமர் 3:20).*
2. *நியாயப்பிரமாணம் தேவ நீதியை வெளியாக்குவதில்லை (3:21).*
3. *சுதந்தரித்தல் விசுவாசத்தினால் வரும் நீதியில் உண்டாயிருக்கிறது (4:13).*

4. நியாயப்பிரமாணத்தைச் சார்ந்தவர்கள் சுதந்தரவாளிகளாவதில்லை (4:14).
5. நியாயப்பிரமாணம் கோபாக்கினையைக் கொண்டு வருகிறது (4:15).
6. நாம் நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களானோம் (7:4).
7. நாம் நியாயப்பிரமாணத்தின்று விடுதலை பெற்றிருக்கிறோம் (7:6).
8. கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார் (10:4).

கலாத்தியரில், பவுல் நியாயப்பிரமாணத்தால் நீதிமானாக முற்பட்ட சிலரைக் குறித்து அக்கரை காட்டினார் (கலாத்தியர் 1:6, 7). இந்த நிருபத்தில் அவர் போதித்ததாவது:

1. ஒருவன் நியாயப்பிரமாணத்தினால் நீதிமானாகிறதில்லை (2:16).
2. அவர், பவுல், நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவரானார் (2:19).
3. நீதியானது நியாயப்பிரமாணத்தினால் வருமானால், கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே (2:21).
4. நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரர் யாவரும் சாபத்துக்குட்பட்டிருக்கிறார்கள் (3:10).
5. கிறிஸ்து வரும்வரை நியாயப்பிரமாணம் அமலில் இருந்தது (3:19ஆ).
6. விசுவாசம் வந்தபின்பு நாம், உபாத்திக்கு, நியாயப்பிரமாணத்திற்கு கீழானவர்களல்ல (3:25).
7. நியாயப்பிரமாணத்தின் முகவர் போலிருந்த, அடிமைப் பெண்ணுக்கு நாம் பிள்ளைகளல்ல (4:31).

எபிரேயர் புத்தகத்தின் நோக்கம் இயேசுவோடு சம்பந்தப்பட்ட காரியங்களெல்லாம் முதல் உடன்படிக்கையின் கீழ் இருந்தவைகளுக்கு மேலானவைகள் என்று காட்டுவதுதான். அவை, தேவதூதர்கள் மூலமாய் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்ட அந்த தூதர்களுக்கும் (1:4; 2:2); நியாயப்பிரமாணம் கையளிக்கப்பட்ட மோசேயிக்கும் (3:3); நியாயப்பிரமாணத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆசாரியர்களுக்கும் (7:11, 12); நியாயப்பிரமாண உடன்படிக்கைகளுக்கும் வாக்குத்தத்தங்களுக்கும் (7:22; 8:6); ஆசாரிப்புக் கூடாரத்துக்கும் (9:11) மேலானவைகள், மேலானவைகளை இயேசு கொண்டு வந்ததினால், மோசேயின் நியாயப்பிரமாணம் முடிவுக்கு வந்தது.

1. நியாயப்பிரமாணம் மாற்றப்பட்டது (7:12).
2. நியாயப்பிரமாணம் தள்ளிவைக்கப்பட்டது (7:18, 19).
3. நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கை பழமையாகிப் போனது (8:13).
4. இரண்டாதை நிலை நிறுத்த இயேசு முதலாவதை நீக்கிப் போட்டார் (10:9).

நியாயப்பிரமாணம் தள்ளப்பட்டு, நடுவிலிராதபடி எடுத்து, சிலுவையில் ஆணியடிக்கப்பட்டதினாலே, நாம் நியாயப்பிரமாணத்தின் சட்டத்திட்டங்களைக் கடைப்பிடிக்காவிட்டால் மற்றவர்கள் நம்மைக் கண்டனம் பண்ணவோ, குற்றப்படுத்தவோ இடமளிக்கக் கூடாது

*(கொலோசெயர் 2:14-16). இந்த ஆசரிப்புகளெல்லாம் கிறிஸ்துவின் உபதேசமாகிய நிஜத்தின் வருகைக்கு முன் நிழலாய் மாத்திரம் இருந்தவைகள் அவை (கொலோசெயர் 2:17; எபிரெயர் 10:1).*

*வஞ்சிக்கப்படுவதைத் தவிருங்கள்.* உலகத்தின் புதுமையான ஆசரிப்புகளெல்லாம் கிறிஸ்தவ உபதேசங்களை வெகுவாய் பாதித்தன. இயேசு கேட்பவைகளுக்கு உண்மையான காரியங்களிலிருந்து ஜனங்கள் திசை திருப்பப்படுகின்றனர். அவைகளில் சுய - வெறுப்பு, மாயமான தாழ்மை போன்ற ஆசரிப்புக்களை மடலாய சட்டமாக உட்படுத்துகின்றனர். தேவதூதர்களுக்கடுத்த உபதேசங்களை தலைகீழாக மாற்றி அவர்களை கனப்படுத்தவும் மதிக்கவும் வேண்டுமென்று காட்டப்படுகிறது. சிலர் தேவ தூதர்கள் தங்கள் முன் தோன்றியதாகவும் செய்தியளித்ததாகவும் கூறுகின்றனர். அவர்களில் ஜோசப் ஸ்மித் போன்றவர்கள் மோரோனி எனும் ஒரு தூதன் தனக்குமுன் தோன்றி அப்படிச் செய்ததாகக் கூறுகின்றனர். இப்படிப்பட்ட தரிசனங்களைப் பெற்றதாக கூறுவோரில் கத்தோலிக்க சபையாரும் வேறு சிலரும் அடக்கம்.

இப்படிப்பட்ட உரிமை பாராட்டும் நபர்களால் நாம் கொள்ளை கொண்டு போகப்பட்டு விடக்கூடாது, விசேஷமாக அப்படிப் போதிக்கும்போது அந்த உபதேசத்தைக் கொண்டு வருவோர் திருமறையின் தெளிவான உபதேசங்களுக்குத் தங்களை தெளிவாக முரண்பாடுள்ளவர்களாய்க் காட்டுகின்றனர். வேறே சுவிசேஷத்தைப் போதிக்கிறவர்கள், அவர்கள் அப்போஸ்தலர்களாயிருந்தாலும், தேவதூதர்களாயிருந்தாலும், வேறுயாராக இருந்தாலும், பரலோகத்தின் சாபங்களுக்கு உட்பட்டவர்கள் (கலாத்தியர் 1:8, 9).

*தலையைப் பற்றிக்கொள்ளாமல்.* புதிய ஏற்பாட்டின் பல்வேறு வசனப் பகுதிகளில், இயேசு தலையானவர் என்று பிரகனப்படுத்தப்படுகின்றார்: அவர் புருஷர்களுக்குத் தலையாயிருக்கிறார் (1 கொரிந்தியர் 11:3), சபைக்கும் (எபேசியர் 1:22; 5:23), சரீரத்துக்கும் (கொலோசெயர் 1:18), சகலதுரைத்தனத்துக்கும் அதிகாரங்களுக்கும் (கொலோசெயர் 2:10), தலையாயிருக்கிறார். வேறே வசனப்பகுதிகளில், அவர் தலையாக இருப்பதை எளிமையாக குறிப்பிடுகிறது (எபேசியர் 4:15; கொலோசெயர் 2:19).

இயேசு அவருடைய சபையாகிய, ஆவிக்குரிய சரீரத்திற்கு தலையாயிருக்கிறார். நாம் அவரையே பற்றிக் கொண்டிருக்கும் பரியந்தம் வஞ்சிக்கப்பட்டு போவதில்லை. அவருடைய சத்தியத்தை விட்டு மனுஷருடைய போதனைகளைப் பற்றிக் கொண்டிருப்போமானால் அநேக நூதனமான (அந்நிய) போதனைகளிலும் ஆசரிப்புக்களிலும் நடத்தப்படுவோம்.

இயேசுவைப் பற்றிக் கொண்டிருக்க வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. அவர் நம்மை விட்டு விலகுவதுமில்லை, நம்மைக் கைவிடுவதுமில்லை, மாறாக நாம் தொடர்ந்து அவருடைய கற்பனைகளை கைக்கொள்ளும் பரியந்தம் அவரும் தொடர்ந்து நம்மில் அன்புகூருவார் (யோவான் 15:9, 10). நாம் அவரைப் பற்றிக் கொண்டிருக்கும் வரை அவர் நம்மைப் பற்றிக் கொண்டிருப்பார்.

இயேசு நல்ல மேய்ப்பனாய் இருக்கிறார் (யோவான் 10:11; 1 பேதுரு 5:4). நாம் அவருடைய ஆடுகளாயிருந்தால், அவருடைய சத்தத்தைக் கேட்டு,

அவரைப் பின்பற்றுவோம். நாம் அந்நியர்களைப் பின்பற்ற மாட்டோம் (யோவான் 10:2-5). அவரைப் பின்பற்றுவதால், நாம் ஒருபோதும் சிதறடிக்கப்படுவதில்லை. பின்பற்றிப்போக நமக்கு ஒரே ஒரு மேய்ப்பனும் அங்கம் வகிக்க ஒரே ஒரு மந்தையும் நமக்கு உண்டு (யோவான் 10:16).

ஒரு வகையில், மேய்ப்பன் ஆடுகளுக்குத் தலையாயிருக்கிறான் அவைகள் தங்களுக்கு முன்பாகப் போய் தங்களை வழிநடத்தக் கூடிய ஒரு மேய்ப்பனை எதிர்பார்க்கின்றன, அவர்தான் அவைகளை நடத்துபவரும், தலையாயுமிருக்கிறார், அவைகள் அவருடைய சத்தத்தை அறிந்திருக்கிறபடியால் அவரைப் பின்பற்றுகின்றன. இப்படித்தான் இயேசு தமது மந்தையை வழிநடத்துகிறார் (யோவான் 10:27).

*நாம் இயேசுவை சபைக்குத் தலையாக மதிக்க வேண்டும்.* அதற்கு பூமிக்குரிய தலைவர் இல்லை, பரலோகத்தில் மட்டுமே தலை உண்டு. எந்த ஒரு தனிமனிதனும் அல்லது ஒரு கூட்ட மனுஷர்களும் சபைக்குத் தலையாயிருக்க விழைவோர் இயேசுவுக்குப் போட்டியாக செயல்படுகிறவர்களாயிருக்கிறார்கள். அவரே ஒரே மேய்ப்பனும் சபைக்குத் தலையுமாயிருக்கிறார். நாம் அவரை நம்முடைய ஆவிக்குரியத் தலையாக பற்றிக் கொண்டு அவரிடத்திலிருந்து வராத உபதேசங்களில் நடத்தப்படாதிருக்க வேண்டும்.

*உலகத்தாரின் கற்பனைகள்.* ஞானஸ்நானத்திலே நாம் உலகத்தின் கற்பனைகளுக்காக கிறிஸ்துவோடுகூட மரிக்க வேண்டியவர்கள், அவை இயேசுவால் கொடுக்கப்பட்ட வரையறையல்ல. மார்க்கங்கள் இரண்டு எல்லைகளை உட்படுத்துகின்றன: தேவன் கொடுக்காத கட்டளைகளை ஏற்படுத்துவது மற்றும் தேவன் கொடுத்த கட்டளைகளை புறந்தள்ளுவது. இவை இரண்டுமே தவறானவை. 2:16-23ல் பவுல் மனுஷருடைய கற்பனைகளைக் குறித்து எச்சரிக்கிறார்.

நாம் இயேசுவின் போதனையை பின்பற்ற வேண்டியவர்களாயிருக்கிறோம் (மத்தேயு 28:20), உலகத்தின் கட்டளைகளையல்ல. இவைகள் நாம் தேவனோடு நட்புறவு கொள்ள ஏதுவான மதிப்புள்ளதாய் நமக்கு உதவக் கூடும், ஆனாலும் அவை நம்மை அவருக்கு அருகில் கொண்டுவந்து சேர்க்கும் மதிப்பில்லாதது. ஏனெனில் மார்க்க ஆசரிப்புகள் நமக்கு பொருத்தமானவைகளாகவும் நாம் அவைகளை பயன்படுத்தும் ஞானத்தைப் பெற்றிருந்த போதிலும் அவை தேவனுடைய ஞானத்தை அடிப்படையாகக் கொண்டவையல்ல.

*சுய இஷ்ட ஆராதனை.* சில மதசார்புடையவர்கள் நீதியானது உபாவாசமிருப்பதாலும், பிரம்மச்சாரியத்தைக் கைக்கொள்வதாலும், திருமணம் பண்ணிய பிறகும் பாலுறவு விஷயத்தில் விரதம் இருப்பதன் மூலமும், சுயக் கட்டுப்பாட்டின் மூலம் மேற்கொள்ளும் சரீர ஒடுக்கத்தால் வரும் என்று போதிக்கின்றனர். இவைகளில் எதுவுமே அவைகளுக்குள் தேவபக்தியை உருவாக்க உதவாது.

இயேசுவின் போதனையை அடிப்படையாகக் கொண்டு அனைத்து மதக் கோட்பாடுகளையும் மதிப்பீடு செய்ய வேண்டியவர்கள் நாம், எல்லா விஷயங்களிலும் நாம் கிறிஸ்துவைப் பற்றிக் கொண்டு யூத ஆசரிப்புகள் மூலமோ, மனுஷருடைய பக்தியினாலோ, அல்லது சிந்தனையினாலே நாம் அலைக்கழிக்கப்படாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.

***கிறிஸ்து கிறிஸ்தவர்களை நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலையாக்கியுள்ளார் (2:16, 17)***

*கிறிஸ்தவர்கள் நியாயப்பிரமாணத்தின் விதி முறைகளாகிய சட்டத்திட்டங்களிலிருந்து விடுதலையாக்கப்பட்டுள்ளனர். போஜனம், ஆசரிப்புகள், மற்றும ஓய்வுநாள் பிரமாணங்கள் நமக்கு பொருந்துபவையல்ல, சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தை ஒழித்தமைக்காக நாம் இயேசு கிறிஸ்துவுக்கு நன்றியுள்ளவர்களாயிருக்க வேண்டும் (எபேசியர் 2:14, 15).*

*நியாயப்பிரமாணத்தை ஒழியப் பண்ணின காரியம் கிறிஸ்தவர்கள் தொடர்ந்து பாவத்தில் ஜீவிக்க ஏதுவான விடுதலையைப் பெற்றிருக்கிறார்கள் என்று பொருளல்ல (ரோமர் 6:1-3). கிருபை என்பது ஒருவரை இயேசுவை கர்த்தரென்று கொண்டிருப்பதிலிருந்தோ அல்லது அவருடைய கற்பனைகளை கைக்கொள்வதிலிருந்தோ விடுதலையளிப்பதல்ல (மத்தேயு 28:18-20; யோவான் 14:15, 21; 15:10; 1 கொரிந்தியர் 7:19).*

*நியாயப்பிரமாணம் இயேசு மூலமாக வருகிற நிஜத்திற்கு வெறும் நிழல்மாத்திரமே (எபிரெயர் 10:1). பாவமன்னிப்பு இரத்தஞ்சிந்துதலை சார்ந்திருப்பதாக தேவன் மோசே மூலம் போதித்தார் (எபிரேயர் 9:22). பழைய ஏற்பாட்டு பிரமாணம் நிஜமாகிய இயேசு வந்தபோது அவர் தனக்குத் தேவை என்று மனித வர்க்கம் உணர்வடையும்படி ஆயத்தப்படுத்தியது (கலாத்தியர் 3:24, 25), அவர் வரும் போது (முன் வருகை) அப்படியாகும்.*

*இருப்பினும், மோசேயின் பிரமாணம் பாவமன்னிப்பளிக்கக் கூடாததாயிருந்தது, ஏனெனில் மிருக பலிகளால் பாவத்தை மன்னிக்க இயலவில்லை (எபிரெயர் 10:4). நியாயப்பிரமாணத்தால் நீதிமானாக்கப்பட, ஒரு நபரின் கிரியை பாவமில்லாதிருக்க வேண்டும். நியாயப்பிரமாணத்தின் கீழிருந்த எல்லாருமே பாவம் செய்தனர், ஒருவரும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே இரட்சிக்கப்படுவதில்லை என்பதை காட்டியது (கலாத்தியர் 2:16). தேவன் எப்பொழுதும் மனித வர்க்கத்துக்கு விசுவாசத்தினாலே இரட்சிப்பேயொழிய கிரியைகளினாலே அல்ல என்பதைக் காட்டியிருக்கிறார். கர்த்தருடைய வழியைக் காத்து நடக்கத்தக்கதாக தனது பிள்ளைகளுக்கு கருத்தாய்ப் போதிக்கும்படி - அவர் ஆபிரகாமைத் தெரிந்து கொண்டு (ஆதியாகமம் 18:19) - தங்களைச் சுற்றிலும் இருந்த பொல்லாங்கான சுழலிருந்து தனது சந்ததியை பிரித்தெடுத்தார் (உபாகமம் 7:3, 4). இந்த அநுகூலமான சூழ்நிலைக்குப் பிறகும்கூட அவர்கள், புறஜாதிகளைப் போல, தேவனுக்கு எதிராக பாவம் செய்தனர் (ரோமர் 3:9, 10).*

*இஸ்ரவேலர்கள் நியாயப்பிரமாணத்தின்கீழ் ஒரு சாதகமான நிலையில் அநேக ஆண்டுகள் வாழத்தக்கதாக தேவன் அனுமதித்திருந்ததற்குக் காரணம், எந்த ஒரு மனுஷனும் பாவமற்ற வாழ்க்கையை வாழமுடியாது என்று நிரூபிக்கவே.*

***கிறிஸ்துவே நமது வளர்ச்சிக்கான மூலாதாரம் (2:19)***

*மாம்ச இச்சைகளை மேற்கொள்ள உலகத் தத்துவங்களெல்லாம் பிரயோஜன மற்றவை. கிறிஸ்தவர்கள் ஒத்தாசை பெற இயேசுவை நோக்கிப் பார்க்க வேண்டும். அவரே நமது ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் காரணியாக*

இருப்பதால் உலகத்தின் சோதனைகளுக்கு நாம் மரிப்பதன் மூலம் அதை அடைய முடியும்.

கிறிஸ்தவனின் தேவை அனைத்தையும் கிறிஸ்து அருளிச் செய்கிறார், இவ்வுலக தத்துவ ஞானிகளும் பேர்போன போதகர்களும் இயேசுவின் போதனைகளோடு சேர்ப்பதற்கு எதுவுமில்லை. John Greenleaf Whittier கீழ்வருமாறு எழுதினார்,

> நாம் சத்தியத்தை உலகத்தில் தேடுகிறோம்; நாம்
> நல்லவைகளையும், தூய்மையையும், அழகையும் ஆராய்கிறோம்.
> எழுத்தால் பொறிக்கப்பட்ட கற்களிலிருந்தும் மற்றும் எழுதப்பட்ட
> புஸ்தக சுருளிலிருந்தும்,
> ஆத்துமாவின் அனைத்து பழமையான
> பூத்தோட்டங்களிலிருந்தும்;
> மேலும் சிறப்பாய்த் தேடிக் களைத்துப்போனவர்களாகிறோம்,
> நாம் தேடி அலைந்ததால் பாரச்சுமையோடு திரும்பிவருகிறோம்,
> அறிவுடை சான்றோர் சொன்னபடி அவை
> எல்லாவற்றையும் கண்டுபிடிக்க
> நம்முடைய தாய்மார்கள் படித்த புத்தகத்தில் காணலாம்.[22]

ஒவ்வொரு அங்கத்தினரும் சபையின் வளர்ச்சிக்கென செயல்பட வேண்டியவர்கள். கிறிஸ்தவனுக்கு இருக்கிற இரட்டை உறவுமுறை குடியுரிமை - கிறிஸ்துவோடும் மற்றும் (சகோதரரில்) ஒருவரிலொருவரும் கொண்டிருக்கிற நட்புறவு முறை - கோரப்படும் ஆவிக்குரிய வளர்ச்சிக்குத் தேவையான போஷாக்கை அளிக்கிறது. மிஸவுரியில், (அமெரிக்காவில்) பதினொருமுனை நதி, பதினொரு நீருற்றுக்களால் நீர் வரத்தைக் கொடுத்து ஒரே நதியாக அமைப்பு பெற்று ஓடுகிறது. கிறிஸ்தவர்கள் விஷயத்தில் இது முற்றிலும் எதிர்பதமாக இருப்பதுதான் உண்மை: ஒரே மூலாதாரத்திலிருந்து அநேக கிறிஸ்தவர்களுக்கு பெலனளிக்கப்படுகிறது. நாம் இயேசுவாகிய மூலாதாரத்திலிருந்து பெற்று, ஒருவருக்கொருவர் போஷாக்கு அளித்துக் கொள்கிறோம்.

கிறிஸ்தவ வளர்ச்சிக்குக் காணும் ஒரே மூலாதாரம் இயேசு. அவர் ஆவிக்குரிய பெலனைக் கொடுப்பதில் வற்றாத ஆற்றலையுடையவர். அவர் போதுமானவராக, ஒருபோதும் தவறாத, எப்போதும் கிடைக்கச் செய்கிறவராயிருக்கிறார், அவரை நோக்கிப் பார்ப்பதனால், கிறிஸ்தவர்கள் தங்கள் சொந்த வளர்ச்சிக்கு தேவையான உறுதியும் கிறிஸ்துவுக்காக வளரவேண்டியமற்றவர்களுக்கு உதவிபுரியவும் கூடும்.

### *கிறிஸ்து நம்மை மனுஷருடைய கற்பனைகளிலிருந்து விடுதலையளிக்கின்றார் (2:20-22)*

கிறிஸ்தவர்கள் மனுஷருடைய கற்பனைகளுக்கும் போதனைகளுக்கும் மரித்தவர்கள், மனுஷருடைய இயல்பான சுபாவம் மற்றவர்களைப் போலத் தானும் வாழ்வது, அவர்கள் என்ன செய்கிறார்களோ அதைத் தாங்களும் செய்வது, மற்றும் நம்மைச் சுற்றியிருப்போரின் வாழ்வைக் கட்டுப்படுத்தும் கொள்கைகளை பின்பற்றுவது, இதுவே வாழ்விற்கான அணுகுமுறையில்

“மந்தையாய்” செயல்படுவது. பெரும்பாலானவர்கள் என்ன நினைக்கிறார்கள் என தேர்தல் குறிப்பிடுகிறது. ஒருவேளை அரசியலில் பெரும்பான்மைச் சட்டம் ஏற்புடையதாயிருக்கலாம், மேலும் வாழ்வின் குறிப்பிடப்பட்ட சில பகுதிகளில் அப்படி ஏற்றுக் கொள்ளக் கூடும்; ஆகிலும் ஒழுக்கரீதியாகவும் ஆவிக்குரிய ரீதியிலும் பொது ஜனங்களின் கருத்து தீர்மானத்துக்குரியவைகளாயிராது. நாம் கிறிஸ்துவுக்காக வாழ்வது எப்படி என்று சொல்லும் அதிகாரம் உடையது திருமறை மட்டுமே.

சுயக் கற்பனைகள் மதியீனமானவை, ஏனெனில் அவை புலன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தக் கூடாதவை. அவைகளெல்லாம் ஆவிக்குரிய வாழ்க்கைக்குரிய காரியங்களில் உதவ பெலனில்லாதவை. ஆதலால் அவைகள் அழிந்து போகும் காரியங்களுக்கே உதவி செய்பவை. இதற்கு ஒரு உதாரணம்தான் சரீரத்தை பெலப்படுத்தும் கலை. அதிகப்பட்ச தசை வலிமை பெற மிகக் கடினமான பயிற்சி மற்றும் விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும், ஆனால் மிகவும் மனதைக் தொடும் உடல் கட்டுமானம் கூட ஒரு நாளில் கல்லறையில் உருவழிந்து போகும். உடல் கட்டுமானக்கலை ஆவிக்குரிய வளர்ச்சியைக் கொடுக்கும் என்ற அவசியமில்லை. சிம்ஸோன் இந்த உண்மையை விளக்கப்படுத்துகிறான். தேவன் அவனுக்குக் கொடுத்த, மகத்தான வலிமை, அவன் தன் ஒழுக்க ரீதியான விஷயத்தில் பெலவீனப்பட்ட போது தடுத்து நிறுத்த முடியவில்லை (காண்க நியாயாதிபதிகள் 14-16). “சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது; தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது” (1 தீமோத்தேயு 4:8).

சுய இஷ்ட ஆராதனையை ஏற்படுத்தும் மனுஷனுடைய அணுகுமுறை ஞானமாய்த் தோன்றும். மனுஷ தோற்றம் குறித்தும் ஆசரிப்புகள் குறித்தும் நல்லதொரு தர்க்கத்தை செய்யலாம். மனுஷருடைய கண்ணோட்டத்தில் தேவனுடைய அணுகுமுறை பயனற்றதாய்க் காணலாம். எலிசா சொன்ன ஆலோசனையை நாமானால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை (2 இராஜாக்கள் 5:1-14). முன்கூட்டியே தீர்க்கதரிசி தனக்கு இன்னின்ன மாதிரி செய்ய வேண்டும் என்பதை அவன் தீர்மானித்திருந்தான். மனுஷருடைய பகுத்தறிவின் படி, யோர்தான் நதியில் மூழ்குதல் குஷ்டரோகத்தைச் சுத்தப்படுத்தாது - ஆனால் மனுஷருடைய வழிகளெல்லாம் தேவனுடைய வழிகள் அல்ல (காண்க ஏசாயா 55:8, 9).

நாம் இந்த உலகத்துக்கொத்த வேஷம் தரிக்காமல் நம்முடைய சரீரங்களை பலியாக ஒப்புக்கொடுத்து நம்முடைய மனம் புதிதாகிறதினாலே தேவனுக்கு ஊழியம் செய்ய வேண்டும் (ரோமர் 12:1, 2). நாம் அவரை மட்டுமே பணிந்து கொண்டு அவரை மட்டுமே ஆராதிக்க வேண்டியவர்கள் (மத்தேயு 4:10), ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும் (யோவான் 4:24). சகல சத்தியமும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது (யோவான் 16:13); மனுஷன் தன் மேட்டிமையினால் எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணாதபடிக்கு பிரயோஜனமற்ற பாரம்பரியங்களையும் மனுஷருடைய கற்பனைகளையும் ஏற்றுக்கொள்ளக் கூடாது (மத்தேயு 15:7-9; மாற்கு 7:6-13; தீத்து 1:14). கிறிஸ்தவர்கள் எதைச் செய்தாலும் இயேசுவின் நாமத்தில் அவருடைய அதிகாரத்தின் பேரில் செய்ய வேண்டும் (கொலோசெயர் 3:17).

குறிப்புகள்

[1]Peter T. O'Brien, *Colossians*, *Philemon*, Word Biblical Commentary, vol. 44 (Waco, Tex.: Word Books, 1982), 141. [2]Eduard Schweizer முன் நிழலாயிருந்த "நிஜம்" எனும் போதனை இயேசுவால் அறிஜ௵முகப்படுத்தப்பட்டிருக்கக் கூடும் என்று குறிப்பிட்டார். அவர், "முற்றிலும் புரியாத புதிராக இருக்கும் ஒரே கருத்து நிழலாய் இருந்து வந்த நிஜம் கிறிஸ்துவ அல்லது சபையா" என்று எழுதினார். (Eduard Schweizer, *The Letter to the Colossians: A Commentary*, trans. Andrew Chester [Zürich: Benziger Verlag, 1976; reprint, Minneapolis: Augsburg Publishing House, 1982], 158.) Furthermore, Bauer suggested that the meaning in this passage is "substantive reality, *the thing itself, the reality* in imagery of a body that casts a shadow, in contrast to *skia* ... Col 2:17" (Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 3d ed., rev. and ed. Frederick William Danker [Chicago: University of Chicago Press, 2000], 984). [3]Schweizer, 164. [4]Bauer, 448. [5]காண்க மத்தேயு 8:2; 9:18; 14:33; 15:25; 20:20; 28:9, 17; மாற்கு 5:6; லூக்கா 24:52. [6]Irenaeus *Against Heresies* 2.32.5. [7]E. K. Simpson and F. F. Bruce, *Commentary on the Epistles to the Ephesians and the Colossians*, The New International Commentary on the New Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1957), 248. [8]Bauer, 459. [9]The word "not" does not appear in older manuscripts. [10]Bauer, 321.

[11]O'Brien, 144. [12]Christ's appearance to Paul was "last of all" among the immediate post-resurrection appearances. However, Christ did appear to John in the Book of Revelation in a different context. [13]Schweizer, 162. [14]Robert G. Bratcher and Eugene A. Nida, *A Translators Handbook on Paul's Letters to the Colossians and to Philemon,* Helps for Translators (New York: United Bible Societies, 1977), 70. [15]H. C. G. Moule, *The Epistles to the Colossians and to Philemon,* The Cambridge Bible for Schools and Colleges (Cambridge: University Press, 1893; reprint, 1902), 114–15. [16]Ibid., 115. [17]O'Brien, 150. [18]Schweizer, 159. [19]O'Brien, 153. [20]Moule, 115.

[21]O'Brien, 155. [22]John Greenleaf Whittier, "From Graven Stone and Written Scroll," quoted in H. I. Hester, *The Heart of Hebrew History: A Study of the Old Testament* (Liberty, Mo.: William Jewell Press, 1951), 11.